விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 28 புதன்கிழமை (14.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 360

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு பங்குபற்றக்கூடாது

## மாற்றுவழியை சிந்திப்போம்; தமிழ் சிவில் சமூகம் கோரிக்கை

*(யாழ்)* வடக்கு மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்துமாயின் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாக பங்குபற்றக்கூடாது. இவ்வாறு தமிழ் சிவில் சமூகம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளது. சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட 75 பேர் கையொப்பமிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தமிழ் சிவில் சமூகத் திடமிருந்தான பகிரங்க விண்ணப்பம் என்ற தலைப்பில் மேற்படி கோரிக்கை அடங்கிய மகஜர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் வைத்து கையளிக் கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்ட விபரம்.. (மகஜரின் முழு வடிவம் 4 ஆம் பக்கத்தில்)

## புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் சுதுமலையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுதுமலை தெற்கில் வீட்டுவளவினுள் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் நேற்றுக் காலை 9.00 மணியளவில் மானிப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் விசாரணைகள் மூலம் தெரிய வருவதாவது,

சுதுமலை மாரியம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள வீடொன்றின் முன்பக்கமாக அமைந்திருந்த கொட்டில் மழை காரணமாக சரிந்துள்ளது.

அதனை (20ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில் கோர விபத்து இருவர் பலி; ஒருவர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடி குஞ்சர்கடைப் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் பரிதாபமாக உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.


இச்சம்பவம் நேற்றுக்காலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, துன்னாலையில் இருந்து நேர்ப் செயற் திட்டப் பிரிவின் வாகனத்தில் பயணித்த வாகனச் சாரதி யாழ்ப்பாணம் பயணிப்பதற்காக நெல்லியடி பஸ் நிலையத் தில் நின்ற நண்பர்கள் இருவரை ஏற்றி வந்துள்ளார்.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் அதிவேக மாக பயணித்த மேற்படி வாகனம் குஞ்சர்கடைப் பகுதி யில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கட்டடப்பொருள் வியாபார நிலையமொன்றுடன மோதி, அதன் பின் பனையொன்றுடன் மோதி விபத்துக்குள்ளா கியுள்ளது.

இதன்போது பனைமரம், மின்கம்பம் என்பன முறிந்து வீதியில் விழுந்துள்ளன.

இக் கோர விபத்தில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த கணேசமூர்த்தி பார்த்தீபன்(வயது -22) என்ற வாகனச் சாரதியும், அவருடன் பயணித்த கரவெட்டி தெற்கைச் சேர்ந்த செல்வநாயகம் கோபிநாத் (வயது 23) என்ற யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா 2-ம் வருட மாணவனும் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தனர்.

அத்துடன் (20ஆம் பக்கம் பார்க்க)



## மேர்வினின் செயலாளர் கடத்தப்பட்டு விடுதலை!

அமைச்சர் மேர்வின் சில்வாவின்இணைப்புச் செயலாளர் எனக் கூறப்படும் நபர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் கொழும்பு புறக் கோட்டை பகுதியில் வைத்து வான் ஒன்றில் வந்த குழுவொன்றினால் கடத்தப்பட்டதாக வும் பின்னர் நேற்றிரவு விடுதலை செய்யப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இனந்தெரியாத குழுவொன்றினால் இந் நபர் கடத்தப்பட்டதாக தகவல் கிடைத்ததாவும் பிற்பகல் 2.30-3.00 மணியளவில் இச் சம் பவம் நடைபெற்றுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் (20ஆம் பக்கம் பார்க்க)

## 5 ஆயிரம் பொதுமக்கள் படுகொலை; சிரியா மீது போர்க்குற்ற விசாரணை

### பாதுகாப்பு சபையிடம் நவநீதம்பிள்ளை வலியுறுத்து

சிரியாவில் இடம்பெற்று வரும் மனித குலத்திற்கு எதிரான குற்றச் சம்பவங்கள் குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணை செய்ய வேண்டும்என பாதுகாப் புப் பேரவை கோரிக்கை விடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமை கள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வலி யுறுத்தியுள்ளார்.

சிரிய ஜனாதிபதி தலைமையிலான ஆட் சிக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள மக் களை அந்நாட்டு படைத்தரப்பு மனித குலத் திற்கு எதிரான வகையில் சித்திரவதை செய் தும் படுகொலை செய்தும் வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சிரியாவின் அரசியல் நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேர வையில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சிரியாவில் கடந்த ஒன்பது மாதங்களாக இடம்பெற்றுவரும் கிளர்ச்சிகள் மற்றும் மோதல்களின்போது இதுவரை 307 சிறுவர் கள் உட்பட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிழந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

அத்துடன், இக்காலப் பகுதியில் 14 ஆயி ரம் பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுவதாகவும் நவநீதம்பிள்ளை தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

சிரிய படைத் தரப்பினரால் மேற்கொள் ளப்படும் (20ஆம் பக்கம் பார்க்க)

## சீன படைத்தரப்பின் உயர்மட்டக் குழு இராணுவத் தளபதியுடன் சந்திப்பு

### படைத்துறை ஒத்துழைப்புகள் குறித்து ஆராய்வு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீன படைத்தரப்பின் உயர்மட்டக் குழு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜய சூரிய வ நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் சீன படைத்தரப் பின் அதிகாரிகளுக்கான பிரதித் தலைவர் ஜெனரல் மா ஸியாரியன் தலைமையிலான ஏழு பேர் கொண்ட உயர்மட்டக் குழு கலந்து கொண்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜென ரல் ஜகத் ஜெயசூரிய தனது இந்திய விஜய த்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள நிலையிலேயே சீனப் படைத்தரப்பின் உயர் மட்ட அதிகாரிகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் புதிய சட்டத்தை எதிர்த்து தெற்கில் வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்

மரக்கறி வகைகளை போக்குவரத்து செய் வது தொடர்பான புதிய சட்டங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படமாட்டாது என நுகர் வோர் விவகார அமைச்சர் ஜோன்சன் பெர் ணான்டோ தெரிவித்துள்ளார்.

மரக்கறி மற்றும் பழவகைகள் பிளாஸ்டிக் கூடைகளிலே போக்குவரத்துச் செய்ய வேண்டும் என அண்மையில் அறிவிக்கப்பட் டதும், இந்த சட்டத்திற்கு விவசாயிகளும் விற் பனையாளர்களும் கடும் எதிர்ப்பை வெளி யிட்டிருந்தனர்.

எனினும், சட்டத்தில் மாற்றத்தை ஏற்படு த்த முடியாது என அமைச்சர் அறிவித்துள்ளார்.

லாண்ட் மாஸ்டர், ட்ரக்டர் மற்றும் முச்சக்கர வண்டிகளில் மட்டும் பிளாஸ்டிக் கூடைகள் இன்றி மரக்கறி வகைகளை போக்குவரத்து செய்ய முடியும் எனவும் அமைச்சர் தெரிவித் துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு நீதிமன்றால் விளக்கமறியல்


2 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் பெ.சிவகுமார், குறித்த நபரை எதிர்வரும் 2[illegible] ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (பா-3)

# இருதய, கண் சிகிச்சை வைத்தியசாலைகள் யாழ்ப்பாணத்தில் அமைப்பது அவசியம்

## ஆஸி எம்.பிக்களிடம் அரச அதிபர் சுட்டிக்காட்டு

யாழ்.மாவட்டத்தில் இதய சிகிச்சை மற்றும் கண் சிகிச்சை வைத்தியசாலைகள் அமைப்பதற்கு அவுஸ்ரேலிய அரசு உதவி வழங்க



வேண்டுமென யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவுஸ்ரேலிய எம்.பிக்களிடம் கேட்டுள்ளார்.

அவுஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டது. இதன்போதே யாழ் அரச அதிபர் மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

இந்த விஜயத்தின் போது யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஆகியோரை அவுஸ்ரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு சந்தித்து கலந்துரையாடியது.

அவுஸ்திரேலிய தொழிற் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வி மரியா வம்வகினோ, ஹரி ஜன்கின்ஸ், ரொவன் ரம்சே, அன்ரிங் சௌத்கொட் மற்றும் செனட் சபை உறுப்பினர் கெலன் கிறோகோ, உயர் ஸ்தானிகர் கத்தி குழுக்மன், அந்நாட்டு பிரதிநிதி சிவான் டேவிஸ் ஆகி யோரே யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

அவுஸ்ரேலிய நாடாளுன்ற குழுவினருடனான சந்திப்பு தொடர்பாக கருத்து வெளியிட்ட யாழ். அரச அதிபர், யாழ் மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகள், மீள் குடி யேற்றம், மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள், மக்களது தேவைகள் தொடர்பாக கேட்டறிந்தனர். குறிப்பாக மீள் குடியேற்றம் தொடர்பாக அதிக அக்கறையுடன் கேட்டறிந்தனர். இதில் குடாநாட்டில் மீள் குடியேற்றப் பட்ட பகுதிகள் எவை? எத்தனை பேர் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்? இன்னும் எத்தனை பேர் மீள்குடியேற்றப்பட வேண்டும் எனப் பல கேள்விகளை கேட்டிருந்தனர்.

இதுதவிர யுத்தம் காரணமாக வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் திரும்பி வருகின்றனரா எனவும் இராணுவம், பொலிஸார், மக்களுக்கு ஒத்துழைப்பாக பொது நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுகின்றனரா எனவும் கேட்டறிந்தனர். இதே வேளை என்னால் அவர்களிடம் ஒரு கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இருதயம் மற்றும் கண் சிகிச்சைகளுக்கான வைத்தியசாலைகளை அமைத்துத் தருமாறும் அதற்கான வைத்தியர்கள் இருந்தும் மக்கள் வெளி மாவட்டங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் சிகிச்சைக்காக செல்ல வேண்டிள்ளது எனவும் தெரிவித்தேன். இவ்வாறு யாழ். அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (பா-6)

# அரசாங்க ஊடகங்களால் எனது குடும்பத்துக்கு சங்கடம்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

அரச ஊடகங்களில் எனது குடும்பம் தொடர்பில் தேவையற்ற பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாபதியின் புதல்வரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது குடும்ப உறுப்பினர்களும் உறவினர்களும் பங்கேற்கும் நிகழ்வுகள் தொடர்பில் அதிகளவான பிரசாரம் செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடக அமைச்சு தொடர்பான வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தாமும், தமது தாயாரும், சகோதரர்களும் அண்மையில் இவ்வாறு ஒளிபரப்புச் செய்யப்பட்ட செய்தி ஒன்றை பார்த்ததாக நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எனது குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிகழ்வுகளை வரிசைக் கிரமமாக அரசாங்க ஊடகமொன்றில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இவ்வாறு எனது குடும்பத்திற்கு அதிகளவில் பிரசாரம் வழங்கும் நடவடிக்கை சங்கடமான நிலைமையை ஏற்படுத்துகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் நான் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் தொடர்பான செய்திகள் வரிசையாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

ஆளும் கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் தொடர்பான செய்திகளும் ஒளிபரப்புச் செய்யப்பட வேண்டும்.

சகல கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கக்கூடிய வகையில்செய்தி கள் ஒளிபரப்பு செய்யப்பட வேண்டும் எனஅவர் தெரிவித்து ள்ளார்.

இவ்வாறுசெயற்படுவதன் மூலம் ஊடகங்களின் நம்பகத்தன்மை அதிகரிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (பா)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA & KALAIVATTAM,

Dept. of Fine Arts, University of Jaffna

present

**WATER - POTS - WOMEN**

**a PHOTO EXHIBITION**

by

**Christine Robichon & Anoma Rajakaruna**

at

**Arts Gallery, University of Jaffna**

**14th to 16th December 2011 - 11am to 4 pm.**

*Entrance free*

(6968)



**வீட்டுடன் காணி விற்பனை**

Hartley College Pt.Pedro, வேலாயுதம் மகா வித்தியாலயம், சிவப்பிரகாசம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு மத்தியிலும், Pt. Pedro பிரதேச சபை, S.L.T.B, Town மற்றும் சிவன் கோவில் என்பனவற்றிக்கு அருகாமையாகவும் வங்கி, வர்த்தக மற்றும் சிறப்பான கட்டிடங்கள் அமைப்பதற்கு ஏற்றதாகவும் தும்பளை பிரதான வீதியில் 4 1/2 பரப்பு சிறிய வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு Tel. No. 0777110523 அல்லது 0726800754 இலக்கங்களை தொடர்பு கொள்ளவும்.

(6959)



*The Following Vacancies are invited for a Local NGO in Jaffna;*

**Position 1: Field Program coordinator (one)**

- GCE advance level with minimum two years field experience in a reputed institution or
- Diploma holder in Agriculture
- Knowledge on conduct the workshop and seminars
- Ability in report writing in English and computer literacy.

**Position 2: Child protection Officer (one)**

- GCE advance level with minimum three years field experience in a reputed institution
- Knowledge on Child Protection Policy
- Knowledge on conduct the workshop and seminars
- Experience in networking with other relater institutions

**Position 3: Field Mobilizers (Three)**

- GCE advance level with minimum three years field experience in a reputed institution
- Knowledge on data collection and organizing meetings and workshops.
- Mobilize the CBOs and networking with the stockholders

**Position 4: Field Assistant (one)**

- GCE advance level with minimum two years field experience in a reputed institution or
- Knowledge on organizing the workshop and seminars
- Ability in progress updating

**Position 5: Admin Assistant (One)**

- Passed the GCE Advance level
- Minimum 2 years experience in documentation and office maintenance

**Position 6: Finance Assistant (One)**

Pass the GCE advance level in Commerce with two years experience in Finance management

Computer literacy in MS office.

Applications for the above mentioned positions are invited within 07 days of this advertisement to the following address: **A.N. Sinnathurai, Chairman, CACPD (Itham), No. 63, Maruthady road, Jaffna. (By Registered Post)**

(6964)



**வாடகைக்கு உண்டு**

சுண்டுக்குளி, கச்சேரி பாடசாலைக்கு அருகாமையில் பாதுகாப்பானசூழலில் அறை/குளியலறை/தனிவழிப்பாதை/விறாந்தையுடன் வாடகைக்கு உண்டு. தாய், மகள் OR வேலை பார்க்கும் பெண்கள் விரும்பத்தக்கது.

T.P-0750828308



**காணி தேவை**

01) A9 வீதியில் (247 Km-261Km) கிளிநொச்சியில் தேவை.

02) A9 வீதியில் (220Km-224 Km) மாங்குளத்தில் தேவை.

1 ஏக்கருக்கு மேற்பட்ட காணி தேவை.

தொடர்புகளுக்கு :-

0779155756

(6942)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய்

## 2012 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

2011.11.17 ஆம் திகதி உதயன், வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்விப் படிவக் கட்டணம், கேள்வி வைப்பு, வாடகை என்பன 2012 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தலின் நிபந்தனைக்கமைய பின்வரும் விபரப்படி 01.01.2012 தொடக்கம் 31.12.2012ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி 2011.12.21ஆம் திகதி பி.ப 1.00மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி - 2011.12.22ஆம் திகதி ந.ப 12.00 மணிவரை

கேள்விகள் திறக்கப்படும் திகதி - 2011.12.22 ஆம் திகதி பி.ப 2.00 மணி

2012 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அட்டவணை

| கேள்வி விபரம் | ஆகக் குறைந்த தொகை (NBT, VAT தவிர) |
|---|---|
| **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்:-** | |
| மானிப்பாய் பொதுச் சந்தை | 1405668.00 |
| மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 122452.00 |
| **மானிப்பாய் கிராம உப அலுவலகம்:-** | |
| சாவற்கட்டு சந்தை | 172040.00 |
| நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 27600.00 |
| நவாலி பிரசாத் சந்தை கோழி இறைச்சிக் கடை | 19780.00 |
| ஆனைக்கோட்டை சந்தி ஆட்டிறைச்சிக் கடை | 55863.00 |
| **பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்:-** | |
| பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (மரக்கறி) | 342562.00 |
| பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (மீன் சந்தை) | 1082081.00 |
| பண்டத்தரிப்பு கருவாட்டுக் கடை இல. 01 | 7500.00 |
| பண்டத்தரிப்பு கருவாட்டுக் கடை இல. 02 | 7500.00 |
| **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்:-** | |
| மாசியப்பிட்டி சந்தை | 138158.00 |
| இளவாலை பொதுச் சந்தை | 258410.00 |
| மாசியப்பிட்டி சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 5600.00 |
| மாதகல் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 5600.00 |

திரு. அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

(C-5187) 13.12.2011

## இன்று ஒரு தகவல்

# கல்வியில் கவனம்

படிக்கிற பிள்ளைகளுக்கு படிப்பைத் தவிர வேறெங்கும் கவனம் போகக்கூடாது. அப்பொழுதுதான் படிப்பு நன்றாக வரும். இல்லையென்றால் வேறு ஏதாவது தான் வரும்.

குருகுலத்தில் எல்லாம் ஒவ்வொருவரும் எப்படியெல்லாம் படித்திருக்கிறார்கள் தெரியுமா?

ஜனகர் ஒரு நாட்டினுடைய ராஜா. அதுதான் ராஜாவாகி விட்டோமே... இனிமேல் நமக்கு எதற்கு படிப்பு? என்று அவர் நினைக்கவில்லை.

யாஞ்ஞவல்கியரின் குருகுலத்தில் சேர்ந்து படித்தார். யாஞ்ஞவல்கியர் தினமும் ஜனகர் வந்த பின்புதான் பாடங்களை ஆரம்பிப்பது வழக்கம். இது சில மாணவர்களுக்கு பிடிக்கவில்லை.

ஜனகர் ஒரு மன்னன் என்பதால் இவ்வளவு மரியாதை கொடுக்கிறார் என்று நினைத்தார்கள். இவர்கள் நினைப்பதை குரு தன்னுடைய யோகசக்தியால் தெரிந்து கொண்டார்.

குரு கவலைப்பட்டார். தன்னைப்பற்றி இப்படி நினைக்கிறார்களே என்பதற்காகவல்ல... இப்படிப்பட்ட நினைப்பினால் அவர்களுடைய கல்வியின் பலனை இழந்து விடுவார்களே என்ற கவலைதான் அவருக்கு.

ஒருநாள் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. அவசரஅவசரமாக சிலர் ஓடி வந்தார்கள்.

''ஐயா! பட்டணம் தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது'' என்றார்கள். இதைக் கேட்டவுடன் சில மாணவர்கள் துள்ளியெழுந்தார்கள். குருவிடம் சொல்லாமல் கொள்ளாமல் வெளியே ஓடினார்கள். அங்கே கொடியில் துவைத்துக் காயப்போட்டிருந்த அவர்களுடைய துணி மணிகளை எடுத்துப் பார்த்து விட்டு இன்னும் சிலரும் எழுந்து ஓடினார்கள். அடுத்ததாக இன்னும் சிலர் சத்தம் போட்டுக் கொண்டே ஓடி வந்தார்கள்.

அரசே! அரண்மனையிலும் நெருப்பு சூழ்ந்து விட்டது. அங்குள்ளவர்கள் எல்லாம் தெருவில் இறங்கி ஓடிக் கொண்டிருந்தார்கள். சில பேர் நெருப்பிலும் மாட்டிக் கொண்டார்கள்.

எல்லோரும் பதறினார்கள். ஆனால், ஜனகர் மட்டும் கொஞ்சம்கூட பதறாமல், சலனமடையாமல் குரு சொல்லிக் கொடுக்கும் பாடத்திலேயே மூழ்கியிருந்தாராம். அந்த அளவுக்கு பாடத்தோடு ஒன்றிப்போய் இருந்தாராம். இது ஒரு உதாரணம்.

இன்னொரு உதாரணம் சொல்கிறேன். குருகுலத்தில் ஒரு மாணவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆசிரியருடைய மனைவி அவனுக்கு சோறு பரிமாறிக் கொண்டிருந்தார். சோறு, கறி எல்லாம் வைத்தார்கள். அடுத்ததாக நெய் ஊற்றுகிறேன் என்று சொல்லி ஊற்றினார்கள். சாப்பிட ஆரம்பித்த மாணவனின் முகம் ஒரு மாதிரி ஆகிவிட்டது.

"என்னங்க இது... நெய் ஊற்றுகிறேன் என்று கூறிவிட்டு வேப்பெண்ணெயை ஊற்றுகிறீர்களே... ஏதாவது ஞாபக மறதியா?" என்று கேட்டான்.

அதற்கு ஆசிரியர் விபரம் சொன்னார். "அப்படியில்லையப்பா! நீ என்றைக்கு வந்து சேர்ந்தாயோ அன்றிலிருந்து உனக்கு வேப்பெண்ணெய்தான் ஊற்றிக் கொண்டு வருகிறோம். உன்னுடைய கவனம் முழுவதும் படிப்பில் இருந்ததனால் உன்னுடைய நாக்கு ருசி தேடவில்லை. ஆனால், இன்றைக்கு உன்னுடைய கவனம் மாறி விட்டது. அதனால்தான் இது வேப்பெண்ணெய் என்ற ஞாபகம் வந்துவிட்டது. "உன்னுடைய நாக்கு ருசி தேட ஆரம்பித்துவிட்டது. இனிமேல் நீ இந்த குருகலத்தில் இருக்க வேண்டாம். இதை விட்டுவிட்டு போய் விடுவதுதான் நல்லது" என்றாராம்.

கல்வி என்றால் அதில் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதற்கு இதெல்லாம் உதாரணங்கள். நீங்கள் உடனே "என்ன சேர் இது. நெருப்பு பிடித்துக்கொண்டது என்றால்கூட அதை கவனிக்காமல் விட்டுவிடவேண்டுமா?"

வேப்பெண்ணெயை நெய் என்று ஊற்றினால் கூட சாப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டுமா? என்றெல்லாம் கேட்கக்கூடாது. கல்வியில் எந்த அளவுக்கு கவனம் இருக்க வேண்டும் என்பதை நாம் உணர்வதற்கு இதெல்லாம் உதாரணம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும் அவ்வளவுதான்.

இந்தக்காலத்துப் பையன் ஒருத்தனிடம் பேசிக்கொண்டிருந்தேன். இந்த கதைகளையெல்லாம் அவனிடம் சொல்லிவிட்டு கேட்டேன்.

நீ வீட்டில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கும்போது ஒருத்தர் ஓடி வந்து உங்களுடைய பாடசாலை தீப்பிடித்து விட்டதாக சொன்னால் நீ உடனே என்ன செய்வாய்? என்று கேட்டேன்.

"நானும் ஜனகர் மாதிரிதான் சேர் படித்துக் கொண்டுதான் இருப்பேன். எழுந்து ஓடிப்போய் தீயை அணைக்க முயற்சி செய்ய மாட்டேன்" என்றான்.

"ஏன்டா அப்படி?" என்றேன்.

"பாடசாலை எரிந்தால் தானே சேர் எங்களுக்கெல்லாம் லீவு கிடைக்கும்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முல்லைத்தீவு இ.போ.சபைக்கு பேருந்துகள் பற்றாக்குறை

## கவனத்திலெடுக்க கோரிக்கை

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் இயக்கப்படும் பேருந்துக்கள் சீரின்மையில் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இப்பேருந்துசாலை யுத்தத்திற்கு பின் கடந்த நவம்பர் மாதம் 10 ஆம் திகதியே தனது நிரந்தர பேருந்து சாலையில் ஆரம்பித்தது.

காரைநகர், வவுனியா, மன்னார், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய வடமாகாணத்தில் உள்ள இலங்கை போக்குவரத்து சபையினுடைய பேருந்துசாலைகளில் இருந்து தலா ஒரு பேருந்து வீதம் 5 பேருந்துக்கள் பெறப்பட்டு இச்சாலை உடனடியாக இயங்கி வருகின்றது.

புதிய பேருந்துக்கள் எதுவுமற்ற நிலையில் ஏற்கனவே உள்ள பழைய பேருந்துகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பேருந்து சேவையினால் யாழ்ப்பாணம்- வவுனியா ஆகிய போக்குவரத்து இடங்களுக்கு வவுனியாவிற்கு இரண்டு பேருந்து சேவையும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனைவிட இரண்டு பேருந்துகள் தற்பொழுது பழுதடைந்த நிலையில் இருப்பதனால் வவுனியாவிற்கான இரண்டு சேவையில் ஒரு சேவையே தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முழுமையான ஒரு சேவையை வழங்குவதாக இருந்தால் 40 பேருந்துகளுக்கான தேவையுள்ளது.

ஆயினும் தற்பொழுது 5 பேருந்துகள் மட்டும் உள்ளன.

மீதமுள்ள 35 பேருந்துகள் கிடைக்குமாக இருந்தால் போக்குவரத்து சேவை பூரணமடையக் கூடியதாக இருக்கும். எனவே, உரியதரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-15)

# பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின்கீழ் கணனி வன்பொருள் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த.(சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 தொடக்கம் 35 வயது வரைக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கும் தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்ட முகாமையாளர்,NAITA, இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஸ்ணபாலன் அறிவித்துள்ளார். (அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 120 | 70 |
| பச்சைமிளகாய் | 320 | 350 | 230 |
| தக்காளி | 160 | 160 | 170 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 70 | 100 | 70 |
| கரட் | 80 | 120 | 80 |
| பூசணி | 60 | 70 | 60 |
| புடோல் | 50 | 100 | 60 |
| வாழைக்காய் | 35 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 70 | 100 | 70 |
| பாகற்காய் | 100 | 180 | 130 |
| வெண்டிக்காய் | 50-60 | 70 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 120 | 140 | 160 |
| லீக்ஸ் | 50 | 100 | 50 |
| பீற்றூட் | -- | 70 | 70 |
| கறிமிளகாய் | 120 | 180 | 130 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | -- | 160 | 130 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10-15 | 40 | 20 |
| தேசிக்காய் | 120 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 25 | 20 |

# இராசி பலன்

*14.12.2011*
*(கார்த்திகை 28, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.13 மணிவரை*
*சதுர்த்தி முன்னிரவு 9.22 மணிவரை*
*பூசம் முன்னிரவு 10.22 மணிவரை*
*இராகுகாலம் 12.21-1.51 மணிவரை*
*சுபநேரம் 4.51-6.21 மணிவரை*
*சங்கட சதுர்த்தி விரதம்.*

**மேடம்** பெற்றோரின் ஆதரவால் பெருமை சேரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்,உற்றார் உறவினர்களின் வருகையுண்டு,விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**இடபம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** மங்கல நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு,கணபதி வழிபாடு காரிய வெற்றியைத் தரும், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், வாங்கு மேன்மையுண்டு.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விநாகரை வழிபட வேண்டிய நாள், வைராக்கியத்தோடு செயற்பட்டு வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள், வெளியூர் பயணமொன்றால் கையிருப்பு கரையலாம்.

**சிங்கம்** உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை ஏற்படலாம், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், சுப செலவுகள் அதிகரிக்கும், மனச்சோர்வான நாள்.

**கன்னி** செல்வநிலை உயரும் நாள்,தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும், விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள்,புகழ் அதிகரிக்கும்.

**துலாம்** எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், தொழில் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வெற்றி வாய்ப்புக்கள் வந்து சேர விநாயகரை வழிபட வேண்டிய நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும், மாலை நேரத்தில் மகிழ்ச்சி தரும் விதத்தில் தொலைபேசி அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**தனுசு** கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள்,மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு பிடிக்கலாம்.

**மகரம்** எடுத்த காரியம் கைகூடும், திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், நட்பு வட்டம் விரிவடையும், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**கும்பம்** நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், கடன் பிரச்சினையைச் சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள்.

**மீனம்** ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் கல்வி நலன்கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள்,தொழில் வளர்ச்சி ஏற்படும்,வருமானம் திருப்தி தரும்.

வளவன்

# பேச்சுக்களின் உண்மைத் தன்மையை கூட்டமைப்பு பகிரங்கப்படுத்த வேண்டும்

## தமிழ் சிவில் சமூகம் கோரிக்கை

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தமிழ் சிவில் சமூகத்திடமிருந்தான பகிரங்க விண்ணப்பம்**

தமிழ்த் தேசியத்தினது வாழ்விலும் எதிர்காலத்திலும் அக்கறையுள்ள தமிழ் சிவில் சமூகம் என்ற அடிப்படையில் நாம் பின்வரும் விடயங்களை எமது பாராளுமன்றப் பிரதிநிதிகளான உங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

**அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு தொடர்பிலானது:**

அ) பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் பேச்சுவார்த்தைகளின் போது பேச்சளவில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பது போல் தென்பட்டபோதிலும் அரசாங்கத்திடமிருந்து மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பில் எழுத்து வடிவில் விளக்கம் கிடைக்கப்பெறும் வரை அடுத்து சுற்றுப் பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிக்கப் போவதில்லை என்ற தீர்மானத்தை கடந்த 04 ஓகஸ்ட் 2011 அன்று நீங்கள் எடுத்திருந்தீர்கள். உங்களது அறிக்கையில் அதுவரையிலான பேச்சுவார்த்தைகளை ஏமாற்றும் தன்மையானவை என வர்ணித்திருந்தீர்கள். இந்நிலைப்பாட்டை த.தே.கூ. எடுத்திருந்தமை தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றது என்பது சிவில் சமூகத்தினர் என்ற வகையில் நாம் அறிந்துள்ளோம்.

இது இவ்வாறிருக்க 14 செப்டெம்பர் 2011 அன்று திடீரென பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படும் என்ற அறிவிப்பு தங்களிடமிருந்து வந்தபோது நாம் பெருவியப்படைந்தோம். பேச்சுவார்த்தையில் மீளக் கலந்து கொள்ளும் உங்களது இந்தத் தீர்மானமானது தங்களது ஓகஸ்ட் 4 திகதியிட்ட அறிக்கையை முற்றிலும் அர்த்தமற்றதாக்கிய செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம். குறிப்பாக ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் அரசாங்கத்துக்கு எதிரான சர்வதேச அழுத்தம் அதிகரித்து வந்து கொண்டிருந்த காலப்பகுதியில் பேச்சுவார்த்தையில் மீளக் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்த தங்கள் முடிபானது அரசாங்கத்தைக் காப்பாற்றும் விதத்தில் அமைந்து விட்டதாக நியாயமான விமர்சனம் ஒன்று முன்வைக்கப்படுகின்றது. இதற்கான விளக்கத்தை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டியது தங்களது தார்மீகக் கடமையாகும்.

அண்மையில் டிசம்பர் 1 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையினைத் தொடர்ந்து பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு த.தே.கூ. பெயர்களைப் பிரேரிக்கத் தவறியமையால் பேச்சில் விரிசல் நிலை அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் டிசம்பர் 6 அன்று இடம்பெற்றன. வடக்குக் கிழக்கு இணைப்பு, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் தமது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக நிற்பதாகக் கூறப்படுகின்றது. இவை மூன்றும் மறுக்கப்படின் தொடர்ந்து பேசுவதில் அர்த்தமில்லை. பேச்சுக்களில் உண்மையில் என்ன நடைபெறுகின்றது என்பது தொடர்பிலான விளக்கத்தை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டியது தங்களது கடமையாகும்.

ஆ) புதுடில்லியில் கடந்த ஓகஸ்ட் 23 மற்றும் 24 திகதிகளில் இந்திய காங்கிரஸ் உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் அவர்களால் கூட்டப்பட்ட பல்-தமிழ் கட்சி மகாநாட்டில் தேசியம், சுயநிர்ணயம் என்ற வார்த்தைப் பிரயோகங்கள் உள்ளடங்கிய தீர்மானமொன்றில் த.தே.கூ. சார்பில் பங்குபற்றிய அதன் ஆரம்பகால அங்கத்துவ கட்சிகளின் உறுப்பினர்கள் கையெழுத்திட மறுத்தமை எமக்குப் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

கருத்தொருமிப்பு ஏற்படாததால் கையெழுத்திடவில்லை என்ற விளக்கம் எந்த வகையிலும் ஏற்புடையதன்று. இந்த வார்த்தைப் பிரயோகங்கள் உள்ளடக்கப்படுவதை எதிர்த்த தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் புளொட் போன்ற அமைப்புகள் த.தே.கூ.வில் அண்மைக்காலத்தில் தம்மை இணைத்துக் கொண்டவர்கள். (இந்த வார்த்தைப் பிரயோகங்களை எதிர்த்த மற்றைய இரு உதிரிக் கட்சிகள் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.(பத்மநாபா அணியும்), ஈ.என்.டி.எல்.எஃப்பும்) மேற்சொன்ன தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் புளொட் ஆகிய கட்சிகளை அண்மைக்காலத்தில் உள்வாங்கி, கடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் நீங்கள் போட்டியிட்டமை யாவரும் அறிந்தது.

த.தே.கூவின் கொள்கைகளுக்கு எதிராக அவர்கள் செயற்படுமிடத்து அவர்கள் த.தே.கூவின் அடிப்படை அரசியற்கோட்பாடுகளுக்கு உட்பட வேண்டிய கடப்பாட்டை அவர்களுக்கு நீங்கள் இடித்துரைத்திருக்க வேண்டும். அல்லது அவர்களது நிலைப்பாட்டுக்கான விளக்கத்தை கேட்டிருக்க வேண்டும். த.தே.கூ. அவ்வாறான வலியுறுத்தலை மேற் கொள்ளாமல் போனதை அல்லது அவர்களின் விளக்கத்தை கோராதுவிட்டதை அவர்களது கொள்கை நிலைப்பாட்டை நீங்களும்-த.தே.கூ.-ஒப்புக் கொள்வதான சமிஞ்ஞையாகவே கருத வேண்டியுள்ளது. இலக்கற்ற ஒற்றுமை என்பதில் அர்த்தமில்லை. தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமை என்பது தமிழ்த் தேசிய அரசியலுக்குத் துணை செய்வதாக, வலிமை சேர்ப்பதாக இருக்க வேண்டும். அதனை அழிப்பதற்கான ஒற்றுமையில் பயனேதுமில்லை.

இ) த.தே.கூவினது அரசியல் தீர்வு தொடர்பான நிலைப்பாடு தொடர்பாக அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்கின்றவர்களும் கட்சியின் பிரதான சர்வதேச தொடர்பாளருமாகிய இரா.சம்பந்தன் அவர்களும், சுமந்திரன் அவர்களும் செய்து வருகின்ற பொது வெளிப்படுத்தல்கள் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து முரண்படுவதை நாம் அவதானித்து வருகின்றோம். தீர்வு, தேசியம், சுயநிர்ணம் என்ற அடிப்படைகளிலன்றி தமிழர்கள் சிறுபான்மையினர், சமவுரிமைகள் என்ற அடிப்படையிலேயே முன்வைக்கப்படுவதாக மீளவும் மீளவும் தெரிவிக்கப்படுகின்றது. (உதாரணமாக: சுமந்திரன் அவர்களால் 26 ஏப்பிரல் அன்று வழங்கப்பட்ட அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் நினைவுப் பேருரை, இரா.சம்பந்தன் அவர்களது 04 ஒக்டோபர் 2011 திகதியிட்ட கல்முனை மாநகரசபைத் தேர்தலையொட்டிய அறிக்கை போன்றவை)

சிறுபான்மையினங்கள் கோரி நிற்பது மொழி மற்றும் கலாசார உரிமைகளையே. தம்மையொரு தேசமாகக் கருதுகின்ற மக்களைக் கொண்ட ஒரு தேசிய இனத்திற்கே தன்னாட்சி உரிமைகளை தமக்கிருக்கும் சுயநிர்ணயத்திற்கான உரிமையின் அடிப்படையில் கேட்கும் உரிமையுள்ளது. தமிழர்களாகிய நாம் எம்மையொரு தேசமாகக் கருதியே எமக்கு உரித்தான சுய நிர்ணயத்திற்கான உரிமையின் அடிப்படையில் சுயாட்சியை கோருகின்றோம்.

அதேபோன்று சமவுரிமைகளைக் கேட்பதானது சுயஆட்சியை கேட்பதாகாது. சட்டத்தின் ஆட்சியும், நல்லாட்சியும் பூர்த்தி செய்யப்படும் ஒரு நாட்டில் சகலரதும் சம உரிமைகள் பாதுகாக்கப்படும் தமிழர்களது பிரச்சினைகள் வெறுமனே சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதன் ஊடாக தீர்க்கப்படமுடியாதவை. சுயாட்சியை பெற்றுக்கொள்வதன் ஊடாகவே எமது அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படலாம்.

தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களின் செயற்பாடுகளினால் ஏற்பட்ட பட்டறிவின் பயனாகவே எமது முன்னைய தலைவர்களும் மக்களும் ஈற்றில் 1976 இலும் 1977 இலும் தமிழ்த்தேசம், சுயநிர்ணய உரிமை, சுயாட்சி என்ற அரசியல் கோட்பாடுகளை தமது அரசியல் அபிலாசைகளாகக் கொள்ளும் நிலைப்பாட்டை வந்தடைந்தனர். பின்னர் வந்த எமது 30 வருட வாழ்வும் அரசியல் வரலாறும் இந்த அடிப்படையிலேயே இயங்கியது. இப்போது ஒரு சிலருக்கு ஏற்புடையதாக இல்லை என்பதற்காக இந்த அடிப்படைகளை விட்டு விட்டோ அல்லது மறைத்தோ எமது அரசியல் பயணத்தை நாம் தொரட முடியாது.

தேசியம், சுயநிர்ணயம் என்று கூறுவதன் மூலம் தனிநாட்டை கோருவதாக பொருள் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்த அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய நிறுவன ரீதியான ஏற்பாடுகள் தொடர்பாக நாம் பேச்சுவார்த்தை மேசையில் பேசி தீர்மானித்துக் கொள்ளலாம். ஆனால் தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படையிலான ஒரு தீர்வுக்கு நாம் செல்லத் தவறுவோமாயின் நாம் உண்மையான சுயாட்சியைப் பெற்றுக் கொள்ளமுடியாததாகிவிடும். இந்த அடிப்படையில் ஏற்றுக் கொள்ளாத, உள்ளடக்காத எந்த ஒரு அரசியல் தீர்விலும் பிரயோசனம் இல்லை. மாறாக இந்த அடிப்படைகளை ஏற்றுக் கொள்கின்ற தீர்வு மட்டுமே நீடித்து நிலைக்கக் கூடிய ஓர் அரசியல் தீர்வைத் தருவதோடு இத்தீவின் இனங்களுக்கிடையில் நீடித்து நிலைக்கக் கூடிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும், வெளியார் தலையீட்டுக்கான தேவை யையும் இல்லாமல் செய்யும்.

தமிழர் ஒரு தேசிய இனம், தமிழர் ஒரு தேசம், எமக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்ற அரசியல் நிலைப்பாட்டை நாம் எடுத்தமையில் எந்தத் தவறும் இல்லை என்ற மனவுறுதி உங்களிடத்தில் எப்போதும் வெளிப்பட வேண்டும். இத்தகைய மனவுறுதி உள்ளவர்கள்தான் தமிழர் சார்பில் பேச வேண்டும். பேச முடியும். தனியே இவற்றை கோஷங்களாக முன்வைப்பதனூடாக நாம் இந்த இலக்கை அடைந்து கொள்ள முடியாது என்பது உண்மையே. அரசியல் உபாயங்கள் மிகவும் அவசியம். ஆனால் அரசியல் உபாயங்களுக்காக எமது இந்த அரசியல் அடிப்படைகளை, அபிலாஷைகளை விட்டுக் கொடுத்துவிட முடியாது. இவை பேரம்பேசும் பொருட்களல்ல. விட்டுக்கொடுப்போமெனின் எதற்காக நாம் அரசியல் செய்கின்றோம் என்ற கேள்விக்கு மக்களுக்கு விடை கூற வேண்டியிருக்கும்.

**எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக:**

எதிர்வரும் 2012இல் வடக்கு மாகாண சபைத்தேர்தல் நடைபெறவிருப்பதாக அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டு வருகின்றது. இத்தேர்தலை த.தே.கூ. சந்திக்குமானால் அதில் அமோக வெற்றி பெறும் என்பதில் எமக்கு சந்தேகமில்லை. ஆனால் இதனையே அரசாங்கமும் விரும்புகின்றது என்பதில் உள்ள சூட்சுமத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். இலங்கையின் அரசியல் யாப்பின் ஓரங்கமான 13ஆம் திருத்தத்தின் நடைமுறை வடிவத்திற்கப்பால் எவற்றையுமே தீர்வு தொடர்பில் கருத்தில் கொள்ள விரும்பாத அரசாங்கம், 13 ஆம் திருத்தத்தை ஏற்க மாட்டோம் என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் மக்களிடமிருந்து ஆணை பெற்ற த.தே.கூவை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வைத்து அத்தேர்தலில் அது வெற்றி பெறுவதையும் விரும்புகின்றதென்றால் அதற்கான உள்நோக்கம் பூடகமானதல்ல. மாகாண சபை முறைமையினை தமிழர்கள் ஒரு தீர்வாக ஏற்றுக் கொண்டு விட்டதாகப் பிரசாரம் செய்வதற்காகவே அரசாங்கம் இதனை முயற்சிக்கின்றது.

அமெரிக்க, இந்திய அரசாங்கங்களும் 13 ஆவது திருத்தத்தை தீர்விற்கான ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்துவதிலிருந்து இவ்வரையறைக்கப்பால் செல்லுவதை அவர்கள் விரும்பவில்லை என்பதைச்சுட்டுவதாககருதமுடியும். ஆகவேமாகாண ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் இன்னும் மேலதிகமாக கேட்டு வாங்கலாம் என்ற உபாயம் ஆபத்தானது. 13ஆவது திருத்தம் என்ற வரையறைக்குள்ளிருந்து ஓர் எல்லைக்கப்பால் பிரயாணிக்க முடியாது என்பதை சட்ட அறிஞர்கள் பலரை உங்கள் மத்தியில் வைத்திருக்கின்ற உங்களுக்கு நாங்கள் சொல்ல வேண்டியதில்லை. கட்டம்கட்டமாக அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற சிந்தனையும் மேற்சொன்ன காரணங்களுக்காக சாத்தியப்படாது. 13ஆவது திருத்தத்தை அல்லது அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் சில திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வுப் பொதியை இடைக்காலத் தீர்வாக கருதவும் முடியாது. மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளுக்குக்கூட தீர்வுகளைத் தரமுடியாத இவ்வகை இடைக்காலத் தீர்வுகளால் எந்தப் பயனும் இல்லை. இவை எல்லாவற்றிற்கும் மேலதிகமாக பிரிந்த வடக்குக் கிழக்கில் த.தே.கூ. போட்டியிடுவதனால் ஏற்படக் கூடிய அரசியல் அபத்தத்தையும் மனதில் கொள்ள வேண்டியுள்ளது. வடக்குக் கிழக்கு இணைப்பு என்பது ஒருபோதும் விட்டுக் கொடுக்கப்பட முடியாதது, பேச்சுவார்த்தைக்கு உட்படுத்த முடியாதது. இதை த.தே.கூ. இந்திய அமெரிக்க அரசுகளுக்கு வலியுறுத்த வேண்டுமே அன்றி இந்த அழுத்தங்களுக்கு பயந்து தமிழ்த் தேசத்தின் ஒட்டுமொத்த அரசியல் எதிர்காலத்தை மீள முடிவு பாழுக்குள் தள்ளக்கூடாது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்கள் எமது அரசியல் தீர்வு தொடர்பில் நாம் முன்நோக்கி நகர்வதற்கு ஒரு பெரும் தடைக்கல்லாக அமையும். மேலும் குறிப்பாக சொல்லுவதாயின் மாகாண சபையை த.தே.கூ கைப்பற்றும் தறுவாய் என்பது எமது நீண்ட அரசியல் பயணத்தின் அவல முடிபாக அமைந்து விடும். அத்தகைய நிகழ்வு ஈற்றில் முற்றுமுழுதாக அரசியல் முள்ளிவாய்க்காலாகவும் அமைந்துவிடும். இது நடைபெறாமல் தடுக்கும் வரலாற்றுக் கடமை த.தே.கூவிடமே இன்று உள்ளது.

பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் இந்த தறுவாயில் மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பு பொருத்தமற்றது எனவும் தேவையற்றதெனவும் த.தே.கூ. நிலைப்பாடெடுக்கவும் அதை பேச்சுவார்த்தை மேசையிலும் சர்வதேசத்திடமும் வலியுறுத்தவும் தேவையான நியாயப்பாடு த.தே.கூவிடம் உள்ளது. அதேபோல் இன்னுமொரு தேர்தலில் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுத்தான் த.தே.கூ. தமிழ் மக்களின் அபிலாஷைகளை அரசுக்கும் உலகுக்கும் அறிவிக்க வேண்டுமென்றுமில்லை.

அரசாங்கம் இதனை மீறி தேர்தல்களை நடத்துமாயின் தேர்தலில் த.தே.கூ. நேரடியாகப் பங்கெடுக்கக்கூடாது. மாறாக தமிழ்த் தேசிய விரோத சக்திகள் அல்லது அரச சார்பு சக்திகள் மாகாண சபையைக் கைப்பற்றுவதைத் தடுக்க நாம் வேறு மாற்று உபாயங்கள் தொடர்பில் சிந்திக்கலாம். இவை தொடர்பில் த.தே.கூ. மக்களோடு கலந்தாலோசிக்க வேண்டும்.

தேர்தல் அரசியலுக்கப்பால் ஓர் அரசியல் விடுதலை இயக்கமாக செயற்பட வேண்டும் என்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட ஓர் இயக்கமாகவே தமிழ் மக்கள் த.தே.கூவைக் கருதுகின்றார்கள். இந்தக் குறிக்கோளின் அடிப்படையில் த.தே.கூ. தொடர்ந்து செயற்படும் என்ற நம்பிக்கையிலேயே தமிழ் மக்கள் தொடர்ந்து வந்த சகல தேர்தல்களிலும் த.தே.கூக்கு தமது ஆணையை வழங்கிவருகின்றார்கள்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தருணத்தில் இந்த விண்ணப்பத்தை எமது தேசத்தின் ஆன்ம வெளிப்பாடாக உங்களிடத்து முன்வைக்கின்றோம். இலட்சக் கணக்கில் மரணித்த எம் மக்களினது எதிர்பார்ப்பும் இதுவே. தொடர்ச்சியான ஒடுக்குமுறைக்குட்பட்டிருக்கும் எமது மக்களின் அவாவும் இதுவே. ஒரு கௌரவமான, நீடித்து நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வொன்றை அடைய சரியான முடிபை மக்களின் அபிலாசைகளுக்கமைவாக எடுப்பீர்கள் என்ற நம்பிகையில் நிறைவு செய்கின்றோம்.(ந)

# பண்டிகைக்காலத்தில் பொருட்களின் விலையை நிலையாக பேண நடவடிக்கை

## திட்டமிடல் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில்பொருட்களின்விலையை நிலையாகப் பேணுவதற்கு முடிந்துள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தேவையேற்படின் பொருட்களின் விலையை பேணும் நோக்கில் உருளைக்கிழங்கிற்கு இது வரையில் அறவிடப்பட்ட வரிப்பணம் உடன் அமுலுக்கு வரும் வகையில் 15 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்ட மிடல் அமைச்சில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டிகை காலத்தில் ஒரு கிலோகிராம் பச்சையரிசியின் விலை 48 ரூபா முதல் 60 ரூபா வரையிலும் ஒரு கிலோகிராம் நட்டரிசி 47 ரூபா முதல் 57 ரூபாவரையிலும் ஒரு கிலோ சம்பா அரிசி 62 ரூபா முதல் 70 ரூபா வரையிலும் இருக்க வேண்டுமென வர்த்தக நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முட்டையின் விலையை 8 ரூபா முதல் 11 ரூபா வரை பேணமுடிந்துள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# பிளாஸ்டிக்கூடைகள் பாவனை; விவசாயிகள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

பிளாஸ்டிக் கூடைகள் பாவனை கட்டாய மாக்கப்பட்டமையால் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இன்றும் கொழும்பு மெனிங் சந்தைக்கு மரக்கறி மற்றும் பழலொறிகளை கொண்டு வரவேண்டாம் என்று அதன் நிர்வாகி வியாபாரிகளிடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

மெனிங் சந்தைக்கு நேற்றுமுன் தினம் கொண்டு வரப்பட்ட மரக்கறி வகைகள் குவிந்து காணப்படுவதாக மெனிங் சந்தையின் பிரதம ஏற்பாட்டளர் எச்.எல். சந்தனரட்ன குறிப் பிட்டார்.

அத்துடன் மேலும் சில லொறிகளில் இருந்து மரக்கறி வகைகளை அகற்ற முடியாதுள்ளதாக அவர் கூறினார்.

மரக்கறி மற்றும் பழவகைகளை கொண்டு செல்லும் போது பிளாஸ்டிக் கூடை களை பயன்படுத்தல் கட்டாயமாக்கப்பட் டுள்ளமையால் நாட்டின் சில பகுதிகளிலுள்ள விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் நேற்று முன்தினம் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடு பட்டனர்.

பிளாஸ்டிக் கூடைகள் பாவனை கட் டாயமாக்கப்பட்டுள்ளதை அடுத்து தமது அறுவடைகளை வர்த்தக நிலையங்களுக்கு கொண்டு செல்லும் போது பல சிக்கல்கள் ஏற்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின் றனர்.

இதனால் சில பொருளாதார மத்திய நிலையங்களின் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக வியாபாரிகள் குறிப்பிடுகின்ற னர்.

இதேவேளை மரக்கறி மற்றும் பழ வகைகளை கொண்டு செல்வது தொடர்பில் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட சட்டத்தை மீறிய வியாபாரிகளிடமிருந்து ஒரு இலட்சத்து 41 ஆயிரம் ரூபா அபராதம் அறவிடப்பட்டுள்ள தாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் தற்போது நிலவும் சிக்கல் நிலைமை தொடர்பில் கூட்டுறவுமற்றும்உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன குறிப்பிடும் போது,

அரசாங்கத்தினால் எடுக்கப்படும் இந்தத் தீர்மானம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அவர் கூறினார்.

(அ-2)

## யாழ். குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் (சீட் கோ)

### எமது சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

| | குறி.இலக்கம் | சம்பள அளவுத்திட்டம் |
|---|---|---|
| 1. பொது முகாமையாளர்- | 101/06 - | 11950-155× 10- 180× 10-15300 |
| 2. பண்ணை முகாமையாளர்- | 115/10 - | 10700-120× 10- 130× 10-13200 |
| 3. எழுதுநர் - | 302/12 - | 10200-90× 10- 100× 10-12100 |
| 4. அலுவலக உதவியாளர் - | 317/16 - | 9200-70× 10- 75× 10-10650 |

* சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவு படி 5250.00 சேர்த்து வழங்கப்படும்.
* விண்ணப்பப்படிவத்தினை சங்க அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
* பதவிக்குரிய தகைமைகள் அலுவலகத்தில் பார்வையிடலாம்.
* வயது 18-45 இடைப்பட்டு இருத்தல் வேண்டும். சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
* விண்ணப்ப முடிவு திகதி 31.12. 2011. விண்ணப்பங்கள் யாவும் **தலைவர் யாழ் குடா விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம், பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ கையளிக்கலாம்.
* விண்ணப்பத்துடன் கல்வி அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைக்கவும்.

தலைவர்

(6966) யாழ். குடாவிதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம்.

## பருத்தித்துறை நகராட்சிமன்ற அறிவித்தல்

### காணி சுவீகரித்தல்

பருத்தித்துறை நகரசபையானது தற்பொழுது பருத்தித்துறை நகரில் மரக்கறிச்சந்தை நடைபெறும் நிலப்பகுதியை பொதுத் தேவையின் பொருட்டு சுவீகரிக்கவுள்ளதால் அக்காணித் தொகுதியில் காணி உள்ள உரிமையாளர்கள் உடனடியாக பருத்தித்துறை நகரசபையுடன் தொடர்பு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

நகரசபை , பருத்தித்துறை.
08.12.2011. (சி-5183)

சபா.ரவீந்திரன் J.P.U.M
தவிசாளர்.


# வடமராட்சி- நெல்லியடியில் நல்லூர் சரவணா ரெக்ஸ் இன்

# 3 ஆவது கிளை திறப்புவிழா அழைப்பிதழ்

ஸ்பஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான கர ஸ்ரீ கார்த்திகைத் திங்கள் 28 ஆம் நாள் புதன்கிழமை (14.12.2011) சித்த யோகமும் பூச நட்சத்திரமும் சதுர்த்தி திதியும் கூடிய காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள சுபவேளையில் 171, பிரதான வீதி, நெல்லியடியில் எமது ஸ்தாபனம் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதால் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



## சரவணா ரெக்ஸ்

கிளை: I
இல.526,529, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 1723

கிளை: II
இல.770,772 கே.கே.எஸ் வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 0421

கிளை: III
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே:-021 2262992

(சி-5181)

# நீதிமன்றத்தால் அபராதம்

(சாவகச்சேரி)

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத் திரம், தலைக்கவசம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச் சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் செ.கணபதிப் பிள்ளை குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 8 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத் தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்ட னையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

(அ-3-29)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கண்டுவில் பகுதி வீதியில் இருந்து டச்சு வீதி வரை புனரமைக்கப்படா துள்ளமையால் பயணிக்க முடியாத அவல நிலை உள்ளது.

இவ்வீதியானது நீண்டகாலமாக புனர மைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப் படுவதால் மழை நீரானது தேங்கி நின்று விபத்துக்களை ஏற்படுத்துகின்றது.

இவ்வீதியால் பல நூற்றுக்கணக்கான வாகனங்களும் பயணிகளும் பயணம் செய் வதை அவதானிக்க முடிகின்றது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்க ளும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ள னர்.

(அ-3-29)

# கலாசார கட்டுப்பாட்டு பிரிவை உருவாக்க திட்டமிட்டுள்ளேன்

## வலம்புரி ஆசிரியர் தலையங்கம் குறித்து யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் வரவேற்கக்கூடிய விடயம் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித் துள்ளார்.

யாழ். அரச அதிபர் தலைமையில் கலா சார கட்டுப்பாட்டு பிரிவை உருவாக்குக எனும் தலைப்பில் கடந்த 9 ஆம் திகதி வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் எழுதப்பெற்றிருந்தது.

இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருமணம் ஆகாத இளவயதுக் கர்ப்பம் அடைதல் தொடர்பில் என்னால் வெளியிடப் பட்ட அறிக்கையையடுத்து கடந்த 9 ஆம் திகதி வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத் தில் எனது தலைமையில் கலாசார கட்டுப் பாட்டு பிரிவை உருவாக்க வேண்டும் என எழுதப்பட்டிருந்தது.

இவ்வாறு ஆசிரியர் தலையங்கத்தில் எழுதப்பட்டிருந்த விடயங்களை நான் வர வேற்கின்றேன்.

அத்தோடு கலாசாரத்தைப் பேணுவதற் கென தனிப்பொலிஸ் பிரிவு, அதற்கான தொலைபேசி இலக்கம் இருந்தால் அதனை பொது மக்களுக்கு பகிரங்கப்படுத்தினால் தகவல் களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும், கலாசார சீரழிவை கட்டுப்படுத்தவும் முடியும். நடக்குமா? நடந்தால் நல்லது எனவும் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டி ருந்தது.

இது சிறந்த ஆலோசனை. இதனை விரை வில் செயற்படுத்த திட்டமிட்டுள்ளேன். இதற்கு ஊடகங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

எமது கலாசாரத்தை கட்டிக் கொக்க வேண் டிய பொறுப்பு எம்மிடமே உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# நாவலரின் குரு பூசைதினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசைத்தினத்தை முன்னிட்டு அப்பெரு மகனாரின் நினைவு வைபவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண் டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசிரியர் கலாசாலை இளைப்பாறிய விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ. திருநாவுக்கரசு சிறப் புரையாற்றவுள்ளார். (அ)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயரழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம் ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம், உரும்பிராய், ஊரெழுப் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாலத்தை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் பாலம் ஒன்று சேதமடைந்துள்ளதால் பய ணிக்க முடியாத அவல நிலை உள்ளதாக வாகனப் பயணிகளும் பொதுமக்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியில் 5 ஆவது கிலோ மீற்றரில் 6 ஆவது பாலம் சேதமடைந்து வீதியில் உள்ள அரைப்பகுதி சேதமடைந்துள்ளது.

இவ்வீதியூடாக தென்மராட்சி, வடமராட்சி பகுதிக்கும் தென்பகுதிக்கும் போக்குவரத் துக்கள் நடைபெற்று வருவதனால் இப்பாலம் சேதமடைந்திருப்பது பலருக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என அச்சம் வெளியிடப்படு கின்றது.

எனவே உரிய தரப்பினர் இப்பாலத்தை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-10)




# புகைப்படக்கண்காட்சி

பிரெஞ் நட்புறவுக் கழகமும் யாழ்.பல் கலைக்கழக கலைப்பீடத்தின் நுண்கலை வட்டமும் இணைந்து நீர்- பானை- பெண் கள் எனும் எண்ணக்கருவிலான புகைப்படக் கண்காட்சியினை நடத்துகின்றது.

மேற்படி நிகழ்வானது இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல் கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறை யின் கலைக்கூடத்தொகுதியில் நடைபெற வுள்ளது.

இக்கண்காட்சி இன்று முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளதாக நுண்கலைத்துறை யின் கலை வட்டம் அறிவித்துள்ளது. (அ)

# சைவ பரிபாலனசபை போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத்தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டி முடிபுகள் யாழ். சைவ பரிபாலன சபை செயலாளர் தி.மாணிக்கவா சரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்தோடு நிகழ்வுகள் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆகில இலங்கை சைவ நெறித் தேர்வு, தமிழ் மொழித்தேர்வு ஆகியவற்றில் வகுப்பு ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்படவி ருப்பதுடன் பத்து பேருக்கு ஆறுதல் பரிசுக ளும் வழங்கப்படவுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வர்கள் விபரம் வருமாறு,

**பேச்சுப்போட்டி**

***கீழ்ப்பிரிவு***

லோஜிகா பரமேஸ்வரன் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), மயூரகரன் கஜவரன் (யா/ அருணோதயக் கல்லூரி), ரினோர்ஜிதா திருக் கேதீஸ்வரன் (யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

***மத்திய பிரிவு***

தர்ஷா சிவனேந்திரன் (யா/அருணோ தயாக் கல்லூரி), கணேசலிங்கம் நிரூபன் (யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), உதயமா லினி அருள்செல்வம் (யா/ நயினாதீவு ஸ்ரீக ணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்)



***மேற்பிரிவு***

ஆன்டனியா செல்வராஜன் (யா/ கொடி காமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்),மேகலா சூரியகாந்தன் (யா/வட்டு மத்திய கல்லூரி), நிரூஜர் சுப்பிரமணியம் (யா/மகாஜனக் கல் லூரி)

**கட்டுரைப்போட்டி**

***மேற்பிரிவு***

வரதராஜா துவாரகன் (யா/ இணுவில் இந்துக் கல்லூரி), காயத்திரி ஜெயவரதனன் (யா/ அருணோதயாக்கல்லூரி), கீதாஞ்சலி பன்னீர்ச்செல்வம் (யா/ கொடிகாமம் திரு நாவுக்கரசு மகா வித்தியாலயம்) (அ)

யா/தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமராக கலந்து கொண்ட வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் மு.ஜெயகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி ஜெயகுமார் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# விநாடி வினாப்போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் விநாடி வினாப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ். மாவட்ட பாட சாலைகளில் உயர்தரம் கற்கும் மாணவர்கள் பங்கு கொள்ள முடியும்.

இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்பு வோர், விண்ணப்பப்படிவங்களில் பெயர், பாடசாலை, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் 153, கே.கே. எஸ். வீதி, கொக்குவில் எனும் முக வரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (அ)

# நொந்துபோன, வடக்கு கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும்

## கூட்டமைப்பு எம்.பி.செல்வராசா

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் நொந்துபோன மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும் என்பதுடன் கிழக்கு பல்கலைக்கழகத்தில் மீன்பிடி பயிற்சி நெறியை மேற்கொள்வதற்கென அலகு ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் எம்.பியான பொன்.செல்வராசா வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மீன்பிடி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், வடக்கு கிழக்கு மீனவர்கள் தேசிய மீன் உற்பத்தியில் பல பங்குகளை வகிக்கின்றனர். போர் மௌனித்தும் கூட வடக்கு மீனவர்கள் அசௌகரியங்களை அனுபவித்துக் கொண்டே இருக்கின்றனர்.

கிழக்கில் அசௌகரியங்களுக்கு மீனவர்கள் முகம் கொடுக்காவிடினும் அவ்வப்போது இடையூறுகள் விளைவிக்கப்படுகின்றன. கிழக்கில் அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே மீன்கள் அதிகளவாக பிடிக்கப்படுகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் மீன்பிடியில் மட்டுமன்றி விவசாயத் துறையிலும் பெரும் பங்காற்றி வருகின்றனர். அவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்க வேண்டுமாயின் முன் அனுமதியைப் பெற வேண்டும்..

யுத்தம் நிறைவடைந்த நிலையில் இவ்வாறான அனுமதியை கோருவது நியாயமானதல்ல. இந்த நிலைமை தொடருமாயின் தேசிய உற்பத்தியில் இரு மாகாணங்களும் பின்னிற்க வேண்டிய நிலையே ஏற்படும்.

மீனவர்கள் அதுவும் வடக்கு கிழக்கு மீனவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு எளிய வகையில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் பல்கலைக்கழகங்களில் மீன்பிடி பயிற்சி நெறியும் தனியான அலகும் இருக்கின்றது.

எனினும் தேசிய மீன்பிடியில் கூடுதலான பங்களிப்பை வழங்குகின்ற கிழக்கு மாகாணத்தில் கிழக்கு மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகம் என இரண்டு பல்கல்லைக்கழங்கள் இருக்கின்ற போதிலும் ஒரு பல்கலைக்கழகத்திலேனும் மீன்பிடி பயிற்சிக்கான நெறி இல்லை.

அதற்கான அலகை ஏற்படுத்துவதற்கு கிழக்கு பல்கலைக்கழகமே சிறந்ததாகும்.

நொந்துபோன மீனவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த கிழக்கு பல்கலைக்கழகத்தில் மீன்பிடி பயிற்சி நெறிக்கான அலகொன்றை ஏற்படுத்த வேண்டும் என்றார். (அ-2)

# மரபுரிமைகளை பாதுகாக்கும் எண்ணம் எவரிடமும் இல்லை

## காமினி ஜயவிக்கிரம எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய மரபுரிமைகள் தொடர்பில் அரசியல்வாதிகளுக்கு வகுப்புக்களை நடத்துவதோடு மரபுரிமைகளை பாதுகாக்க வேண்டுமாயின் பாடசாலைகளையும் சமூகத்தையும் இணைந்து கொள்ள வேண்டும். இவை தொடர்பில் ஞானம் பிறக்க வேண்டுமாயின் செவிசாய்த்தல் முக்கியமானதாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான காமினி ஜயவிக்கிர பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், கட்டடங்களை உயரமாக கட்டிவிட்டும் தனிநபர் வருமானத்தின் மூலமாகவும் தேசிய மரபுரிமைகளை பாதுகாக்க முடியாது. அவ்வாறு பாதுகாக்க வேண்டுமாயின் நாட்டில் 4 டொலருக்கு குறைந்த வருமானத்தை பெறுவோரின் சதவீதம் 51 ஆக இருக்கின்றது. இதனையும் அதிகரிக்க வேண்டும்.

விகாரைகளில் புதையல்கள் தோண்டப்படுகின்றன. மக்கள் அதற்கெதிராக குரல் கொடுக்கின்றனர். எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். எனினும் மரபுரிமைகளை வெள்ளையர்களே அன்று பாதுகாத்தனர்.

அன்று கடும் தண்டனை வழங்கப்பட்டதுடன் தர்மமும் போதிக்கப்பட்டது. இன்று இவையெல்லாம் இல்லை. இதனால் மரபுரிமைகளை பாதுகாக்கும் எண்ணமே எம்மில் பலரிடம் இல்லை.

உலகில் குளராச்சியம் எங்குமே இல்லை என்பதனால் குளங்களையும் மரபுரிமையாகக வேண்டும். நீரூற்றுகளை நாசப்படுத்துதன் மூலம் நாமே எமக்கு ஆப்த்துக்களை தேடிக்கொள்கின்றோம். இந்நிலை தொடர்ந்தால் கால நிலையிலும் பாரிய மாற்றங்கள், ஏற்படும்.

மரபுரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமாயின் மக்களையும் கிராமங்களையும் இணைத்துக் கொண்டு செயற்பட வேண்டும். இதற்கு முன்னதாக மரபுரிமைகள் தொடர்பில் அரசியல்வாதிகளுக்கு வகுப்புகளை நடத்த வேண்டும். மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான ஞானம் பிறக்க வேண்டுமாயின் செவிசாய்த்தலும் அவதானம் செலுத்துவதும் முக்கியமானதாகும். (அ-2)

# ஜனாதிபதிக்கென பிரத்தியேக மருத்துவர்கள் எவருமில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கான பிரத்தியேக மருத்துவர்களாக எவரும் நியமிக்கப்படவில்லை என அரசாங்கம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் அரச்ாங்கத் தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டாக்டர் எலியந்த வைட் எனும் நபர் தான் ஜனாதிபதியின் பிரத்தியேக மருத்துவர் எனக் கூறிக் கொண்டு பிரபல கிரிக்கெட் வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சையளிப்பது எப்படி என தயாசிறி எம்.பி. கேள்வி எழுப்பினார்.

என்னிடம் ஆவண ஆதாரங்கள் உண்டு. இந்நபர் பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கும் மருத்துவ சிகிச்சையளிக்க முன்வந்தார். பலருக்கு சிகிச்சையளிப்பதற்கு விருப்பம் தெரிவிப்பதற்கான அந்நபர் ஜனாதிபதி செயலகத்தின் கடிதத்தலைப்பை பயன்படுத்தினார் என அவர் தெரிவித்தார்.

ஆனால், அவ்வாறு ஜனாதிபதிக்கு பிரத்தியேக மருத்துவர் எவரும் நியமிக்கப்படவில்லை என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். ஆனால்,ஜனாதிபதிக்கு பிரத்தியோக மருத்துவர் எவருமில்லை என அவர் கூறினார். (அ-2)

# சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக இணையத்திலும் கையெழுத்து வேட்டை

## அவரின் மகளும் மும்முரம்

(கொழும்பு)

முன்னாள் இரா்ணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி 10 இலட்சம் கையெழுத்து பெறும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் பொதுமக்களிடம் பெறப்படும் இந்த 10 இலட்சம் கையெழுத்து ஐ.நா. செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. இதற்கமைய நேற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னாள் கையெழுத்து பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாகவும் கையெழுத்து பெறும் நிகழ்வில் அதிகளவிலான பொதுமக்கள் தமது கையெழுத்துக்களைப் பதிவு செய்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. அத்தோடு அவரின் மூத்த மகளான அப்ஸரா பொன்சேகா அமெரிக்க வெள்ளை மாளிகையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலமான மகஜறொன்றில் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார்.

இந்த இணையத்தள மனுவில் 25 ஆயிரம் கையெழுத்துக்கள் பெறப்பட்டால் தான் தலையிடுவதாக அமெரிக்க அரசாங்கம் உறுதியளித்துள்ளது என சரத் பொன்சேகாவை விடுவிப்பதற்கான மக்கள் இயக்கம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

25 ஆயிரம் கையெழுத்துக்கள் பெறப்பட்டால் பொன்சேகாவின் விடுதலை குறித்து இலங்கை அரசாங்கத்துடன் அமெரிக்க அரசாங்கம் பேசும் என எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என மேற்படி இயக்கத்தின் ஏற்பாட்டாளர் குமார அழகியவண்ண கூறினார்.

நவம்பர் 20 ஆம் திகதி ஆரம்பமான மேற்படி இணையத்தள மனுவில் நேற்று முன்தினம் வரை 15 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கையெழுத்திட்டிருந்தனர்.

அமெரிக்கப் பிரஜையான அப்ஸரா பொன்சேகா தனது தந்தையின் விடுதலைக்கு உதவுமாறு அமெரிக்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)




முள்ளியவளை மேற்கு முதலாம் வட்டாரத்தில் புதிய முன்பள்ளியொன்றை வர்த்தகம் மற்றும் கைத்தொழிற்றுறை அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும் இணைந்து திறந்து வைப்பதை படத்தில் காணலாம். (படம்: என்.குமார்)

# இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்க சீனா கூடுதல் முனைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு கூடுதலான இராணுவ உதவிகளை வழங்க சீனா முனைப்பு காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சீனாவின் உயர்மட்ட இராணுவ பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

இராணுவ பயிற்சி, கூட்டுப் பயிற்சி மற்றும் இராணுவ ஒத்துழைப்புக்களை அதிகரித்தல் போன்ற விடயங்கள் குறித்து இந்த விஜயத்தின் போது கூடுதல் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சீன இராணுவ பிரதிநிதிகள் குழு, இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

சீன இராணுவ பயிற்சி முகாம்களில் இலங்கைப் படையினருக்கு கூடுதல் வாய்ப்பு அளிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஜெனரல் மா ஹிக்ஸியோடியன் தலைமையிலான குழுவினரே இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். (அ-2)

# மீனவர்கள் விவகாரம் இலங்கை-இந்தியா பேச்சு


(கொழும்பு)

இலங்கை- இந்திய மீனவர்கள் விவகாரம் குறித்து இரு நாடுகளுக்கும் இடையிலான அரசாங்க மட்டத்திலான பேச்சுவார்த்தை எதிர்வரும் ஜனவரி 13, 14 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக மீன்பிடித்துறை பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்புத் தரப்பு ஆகியன இதில் பங்குபற்றவுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக பெற்றோலியத்துறை பிரதியமைச்சர் சரண குணவர்த்தன உரையாற்றும் போது இந்திய மீனவர்கள் பெரும் எண்ணிக்கையில் இலங்கை கடற்பரப்பிற்குள் ஊடுருவுவதனால் இலங்கை மீனவர்களின் ஜீவனோபாயம் பாதிக்கப்படுவதாக அவர் கூறினார். (அ-2)

# சங்கடங்கள் தீர்க்கும் சகுனங்கள்.



வருமுன்னர் காப்பது தான் சிறப்பு என்பார்கள். அப்படி எந்த ஒன்றும் நிகழும் முன் அடையாளமாக், குறிப்புகளாகத் தோன்றி உணர்த்துபவைதான் சகுனங்கள் என்பது அன்று முதல் இன்று வரை நிலவிவரும் நம்பிக்கை.

புராண, இதிகாச காலங்களிலேயே சகுனங்களின் மீது முழுமையான நம்பிக்கை இருந்து வந்தது என்பதை பல்வேறு புராண இதிகாசக் கதைகள் உணர்த்துகின்றன.

மகாபாரதத்தில் ஒவ்வொரு சம்பவத்தின்போது சகுனம் பார்க்கிற வழக்கம் கூறப்பட்டிருக்கிறது.

குந்திதேவிக்கு பீமன் பிறந்தான். பீமன் பிறக்கும் போது யாககுண்டங்களில் தீ வலதுபுறமாக சுழன்று எரிந்தது. இந்த சகுனம் நன்மைகளை விளைவிக்கும் என்பதை தேவர்கள் உணர்ந்தார்கள்.

காந்தாரிக்கு துரியோதனன் பிறக்கும்போது அந்த சந்தோஷத்தில் மங்கள இசை ஒலிக்கச் செய்தார் அரசர். அந்த மங்கள இசையை மக்கள் கேட்காதபடி ஏன் அரசரே கேட்காத அளவுக்கு நரிகள் அதிக சத்தத்துடன் ஊளையிட்டனவாம். அதைக் கேட்ட மக்களும் அரசரும் பயந்தார்கள். ஏதோ நடக்கப்போகிறது. அது பயங்கரமாகவும் விபரீதமாகவும் இருக்கும் என்று தெரிந்து கொண்டார்கள். அதற்கு ஏற்ப மேகங்களில் இருந்து இரத்த மழையும் பொழிந்தது.இப்படி சகுனங்கள் நிகழப்போகும் நல்லது- தீயதை முன் கூட்டியே தெரியப்படுத்திவிடும் என்ற நம்பிக்கை இன்றும்கூட இருக்கிறது.

இராமாயணத்திலும் கூட சகுனம் குறித்த விபரங்கள் உள்ளன. இராமருக்கும் சீதைக்கும் திருமணம் முடிந்த பின்னர் அவர்களை தசரதர் அயோத்திக்கு அழைத்து செல்லும் வேளையில் வலது பக்கம் மயில் சென்றது. இடது பக்கம் காக்கைகளும் ஏனைய பறவைகளும் சென்றன. அதைக் கண்ட தசரதர் பயணத்தை தொடராமல் சகுன ஜோதிடரை அழைத்து பலன் கேட்டார்.

மயில் நல்ல சகுனம். அதுவும் வலது பக்கமாகச் சென்றது சுப சகுனம்.அதேசமயம் காக்கையும் ஏனைய பறவைகளும் இடது பக்கம் சென்றதால் சில பிரச்சினைகள் நேரும். இருந்தாலும் அந்தப் பிரச்சினைகள் விரைவிலேயே விலகிவிடும் மனம் சங்கடப்படாமல் இருங்கள் என்று ஜோதிடர் தசரதரிடம்கூறிக் கொண்டு இருந்தபோதே மிகுந்த கோபத்துடன் பரசுராமர் இராமனிடம் போர் செய்ய வந்தார். சகுன ஜோதிடர் கூறியது போல சோதனைக்குப் பின்னர் சாதனையாக பரசுராமரைப் போரில் தோற்கடித்தார் இராமச்சந்திரன்.

அதேபோல ஸ்ரீ இராமருடன் போரிட இராவணன் புறப்பட்ட போது இடதுபக்கமாக பறவைகள் பறந்தன. அதைச் சுட்டிக்காட்டி இப்பொழுது போருக்குப் போக வேண்டாம் சிறிது நேரம் கழித்து புறப்படுங்கள் ஏன்றாள் அவன் மனைவி மண்டோதரி.

ஆனால் இராவணனோ அதை அலட்சியப்படுத்தி போருக்குச் சென்றான் - அழிந்தான்.




நன்மை - தீமையை நமக்கு முன்கூட்டியே தெரியப்படுத்துவதே சகுன சாஸ்திரம் என்கிறார். பிரகஸ்பதி முனிவர். சகுணங்கள் நன்மைகளாக இருந்தால் நாம் போகும் காரியம் வெற்றி அடையும். அதுவே தீமையாக இருந்தால்? கவலை வேண்டாம். அதற்கும் பரிகாரங்கள் இருக்கிறது. ஈசனே தன் தோஷம் போக்க அன்னபூரணியிடம் அன்னத்தை பிச்சை வாங்கி உண்டு தோஷத்தைப் போக்கிக் கொண்டார் என்கிறது புராணம்.

சகுனங்கள் பார்ப்பது தடைகள் விலகவும் நாம் செய்யும் செயல்கள் சுபமாகவும் சுலபமாகவும் சங்கடங்கள் இல்லாமல் நிறைவேறவும்தான் இறைவன் படைத்த அறுபத்து நான்கு கலைகளில் சகுன சாஸ்திரமும் ஒரு கலை என்பர்.

இந்தக் கலை நம் வாழ்க்கையை ஜொலிக்க வைக்கும் ஆற்றல் மிக்க அரியகலை. சில சுப சகுனங்கள் தானாக உருவாகும். சிலவற்றை நாமேயும் உருவாக்கிக் கொள்ளலாம். இதில் தவறு எதுவும் இல்லை. நாமே உருவாக்கும் சுபசகுனத்திற்கும் நிச்சயம் பலன் உண்டு.

இனி என்னென்ன சகுனங்கள் என்னென்ன பலனை குறிப்பிடுகின்றன எனப்பார்க்கலாம்.

### பூக்கள் பற்றிய சகுனங்கள்

வெளியில் செல்லும்போது வெண்மையான பூக்களை எதிரே கண்டால் போகும் காரியம் ஜெயம் ஆகும்.அதே போல வீட்டில் விளக்குவைத்த பின்னர் அதாவது மாலை நேரத்தில் மல்லிகைப்பூ வாங்கிவந்தால் சுபசகுனமாக கருதவேண்டும். மகாலஷ்மிக்கு பிடித்த மலர் மல்லிகை என்று சாஸ்திரம் கூறுகிறது.அதனால் வீட்டில் செல்வம் பெருகும்.

சிவப்பு நிறப்பூக்களை எதிரே கண்டால் பிரச்சினைகள் விலகிவிடும்.சிவப்பு இருக்கும் இடத்தில் பராசக்தி குடியிருப்பாள் என்கிறது திருவாசகம். அதனால் சிவப்பு வண்ணப்பூப் பூக்கும் செடிகளை வீட்டில் வைத்தால் நல்லது. செம்பருத்திச் செடிகள் வளர்க்கப்படுவது இதனால்தான். செந்நிறப் பூக்களைப் பார்த்து விட்டுச் சென்றால் நன்மைகள் ஏற்படும். விரோதிகளைச் சந்திக்கும் முன் சிவப்பு நிற பூக்களைப் பார்த்துவிட்டுச் சென்றால் அந்த விரோதிகள் உங்களிடம் தன்மையாகப் பேசுவார்கள். விரோதித்துக் கொள்ளமாட்டார்கள்.

சிவப்பு நிறப் பூக்களைப் பார்த்து விட்டுச் சென்றால் எப்படி இதுபோன்ற செயல் நடக்கும்? என்று நீங்கள் நினைக்கலாம்.

நிச்சயம் நடக்கும்! கடலில் இருந்து தண்ணீர் எப்படி மேகங்களுக்குச் சென்று மழையாகத் திரும்பி வருகிறதோ அதுபோல பராசக்தியின் அனுக்கிரகம் இந்த வகையில் நமக்குப் பரிபூரணமாகக் கிடைத்துவிடும் பின்னர் என்ன...? உங்கள் எதிரிகள் உங்களை பார்த்தால் உங்கள் பேச்சைக் கேட்டு சமாதானமாகிவிட வேண்டியதுதான்.

மஞ்சள் பூக்களை செல்லும் வழியில் கண்டால் விநாயகரே உங்களுக்கு ஆசி வழங்கி அனுப்பியது போன்ற சகுனம் அது. அப்படி நீங்கள் செல்லும் பணியில் அல்லது பாதையில் உங்களுக்கு உதவி செய்தவரின் பெயரை விசாரித்தால் அநேகமாக அது தெய்வத்தின் பெயராகத் தான் இருக்கும்.

வீட்டில் சாமந்திச் செடி ,சூரியகாந்திச் செடி போன்று மஞ்சள் நிறப் பூக்கள் பூக்கும் செடியை வளர்த்தால் நன்மை ஏற்படும். பொதுவாகவே மஞ்சள் நிறம் குரு பகவானுக்குப் பிடித்த நிறம். செல்வம் சேரும், சந்தோஷம் குவியும் நிறம். வீட்டில் திருமணம் ஆகாதவர்கள் இருந்தால் விரைவில் திருமணம் நடக்கும். குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும். காலையில் எழுந்ததும் மஞ்சள் வண்ணப் பூக்களைப் பார்த்தால் சுப சகுனம்.

தாமரைப் பூவை நாம் செல்லும் பாதையில் கண்டால் செல்வாக்கு பெருகும். தனவரவு இருக்கும் உங்களைத் தேடி நன்மைகள் வரும். வெற்றி தேவதை உங்கள் அருகிலேயே இருப்பாள். தாமரைப்பூக்களை வீட்டில் வைத்தால் செல்வம் பெருகும். தினமும் பார்த்து விட்டுச் சென்றால் மனத்திற்கு இன்பமான செயல்கள் நடக்கும்.

(தொடரும்)

# அணிசேரா நாடுகளுக்கு எதிரான அமைப்பை உருவாக்குவதற்கு மிலிந்த முயற்சித்தார்

## விக்கிலீக்ஸ் தகவல்

அணிசேரா நாடுகளுக்கு எதிராக அமைப்பு ஒன்றை உருவாக்க இலங்கையின் முன்னாள் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொரகொட முனைப்பு காட்டியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அணிசேரா நாடுகளின் நடவடிக்கைகளை முடக்கும் நோக்கில் இந்தப் புதிய அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென அவர் கருதியதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி அமெரிக்கத்தூதுவர் அஷ்லி வில்ஸினால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அமெரிக்காவுடன் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேண வேண்டும் என்பதே ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணி சேரா நாடுகளுக்கு மாற்றீடாக புதிய அமைப்பொன்றை உருவாக்கும் பணிகளை இலங்கையின் தலைமையில் மேற்கொள்ள வேண்டும் என்பதே மொரகொடவின் விருப்பமாக அமைந்திருந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் இது தொடர்பான யோசனையை ரணில் விக்ரமசிங்க முன்வைக்கக் கூடும் என அமெரிக்கத்தூதுவர் நம்பிக்கை வெளியிட்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக அமெரிக்கா மற்றும் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேண வேண்டும் என்பதே மிலிந்த மொரகொடவின் நிலைப்பாடாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஊழல் மோசடிகளினால் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்பட்டுள்ளது

## அசோக டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழல் மோசடிகளினால் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் பிரதம நீதியரசரும் , ஜனாதிபதியின் ஆலோசகருமான அசோக டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளினால் வருடாந்தம் 100 பில்லியன் ரூபா வருமானம் இழக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக நாட்டில் வறியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச ஊழல் ஒழிப்பு தின நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஊழல் மோசடிகள் இடம்பெறும் நாடுகளில் இலங்கை சற்று பின்னிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகள் அதிகளவில் இடம் பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை 86 ஆம் இடத்தை வகிக்கின்றது. அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தலா தனிநபர் வருமானத்தை நாட்டின் மொத்த சனத்தொகையில் 4 வீதமானவர்களே ஈட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஏனையவர்கள் நாளொன்றுக்கு ஐந்து முதல் ஆறு அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் ஊழல் மோசடிகள் நீடிக்கும் வரையில் அரசாங்கத்தினால் உரிய முறையில் வருமானத்தை ஈட்ட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# போலி மின்விசிறிகளை விற்ற 4 நிறுவனங்களுக்கு அபராதம்

(கொழும்பு)

கொழும்பு வர்த்தக குற்றச் செயல் புலனாய்வுப் பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்ட வெவ்வேறு வழக்குகளில் நான்கு வர்த்தகர்கள் போலியான கேடிகே மின்விறிகளை விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றங்களினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.


புறக்கோட்டை, கெய்ஸர் வீதி, மாவத்தை முதலாம் குறுக்குத்தெரு ஆகியவற்றிலுள்ள 3 நிறுவனங்களில் போலியாக கேடிகே வர்த்தக இலட்சினை குறிக்கப்பட்ட மின் விசிறிகளை விற்பனைக்கு வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட வர்த்தகர்கள் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

இவர்களுக்கு கொழும்பு பிரதான நீதவான் தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இதேவேளை நுகேகொடயிலமைந்த நிறுவனமொன்றின் உரிமையாளர் மீதும் இதே குற்றம் சாட்டப்பட்ட வழங்கில் நுகேகொட நீதவான் கடை உரிமையாளருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதித்தார்.

கேடிகே மின்விசிறிகளை உற்பத்தி செய்யும் ஜப்பானின் பனசோனிக் எக்லோஜி சிஸ்டம்ஸ் நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்து விநியோகிக்கும் கம்பனி செய்த முறைப்பாட்டின் பேரில் புலனாய்வு பிரிவு பொலிஸார் விசாரணை மேற்கொண்டதுடன் இந்த வழக்குகளையும் தாக்கல் செய்தனர். (அ-2)

# தியானம்



## ஆனந்தத்தின் வாசல்

ஆன்மீகம் 09

கேள்வி: எதிர்கால உலகில் யோகா எத்தகைய பங்கு வகிக்கும் என்பதை உங்களால் சொல்ல முடியுமா?

சத்குரு: இன்றைய நவீன கல்வி முறை மனிதனுடைய மனதில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றதென்றால் தர்க்கரீதியில் அல்லாத, விஞ்ஞானபூர்வமாக அல்லாத எதையும் உங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. யோகாவை கற்றுக்கொள்ள எந்த நம்பிக்கையும் தேவையில்லை. தத்துவங்களின் மீதான நம்பிக்கையோ அல்லது மனிதரின் மீதான ஒரு நம்பிக்கையோ தேவையில்லை. இது முற்றிலும் அறிவியல் ரீதியானது. அதனால் தான் இது உலகின் எல்லாப்பகுதிகளிலும், இந்தியாவில் மட்டும் மல்ல, வடஅமெரிக்காவிலும் சரி, ஐரோப்பிய நாடுகளிலும் சரி, மத்திய கிழக்கு நாடுகளிலும் சரி மிகப் பரவலான வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஏனென்றால் இது வேலை செய்கிறது. இந்தியாவில் பல இலட்சக்கணக்கான மனிதர்கள் இதில் பயன்பெற்றிருக்கிறார்கள். ஏனென்றால் இது முற்றிலும் அறிவியல் ரீதியாகக் கையாளப்படுகிறது. அறிவியல் ரீதியாக கையாளப் படுவதால் இன்றைய நவீன கால மனிதன் இயல்பாகவே இதன் மீது நம்பிக்கை வைத்து அதைப்பயன் படுத்திக் கொள்கிறான்.

இன்றைய கல்விமுறை மக்களிடம் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தை வைத்து எதிர்காலத்தில் யோகா எப்படி இருக்கும் என்பதைப் பார்க்கும் போது இதனை அறிவியல் ரீதியாக வழங்கா விட்டால் எதுவுமே நடக்காது. எனவே இந்த உலகின் எதிர்கால மக்களுக்கு தீர்வாக நிச்சயமாக யோகா இருக்கும். மேலும் இந்த ஒரு அம்சம் மட்டும் தான் மக்களால் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள்ாக பயிற்சி செய்யப்பட்டு வேலையும் செய்திருக்கிறது. சந்தேகத்திற்கு இடமில்லாமல் அது நிரூபிக்கப் பட்டும் இருக்கிறது. உடல் ஆரோக்கியம், மனஆரோக்கியம், ஆன்மீக நல்வாழ்வு என்ற பல நிலைகளிலும் இது வேலை செய்கிறது. எனவே யோகாவிற்கு எதிர்காலம் உண்டா என்று கேட்டால் நிச்சயமாக எதிர்கால உலகம் யோகத்தன்மையில் தான் பல வழிகளிலும் நிலைபெற்று இருக்கும்.

கேள்வி: உங்கள் அமைப்பு பெரிய அளவில் மக்களை கொக்கி போட்டு ஈர்த்திருக்கிறது. அவர்களை இழுக்க தாங்கள் என்ன செய்தீர்கள்?

சத்குரு: அவர்களை கொக்கி போட்டு இழுத்தது எது? ஒரு வேலை நாம் யாரரையும் கொக்கிபோட்டு இழுக்க முயற்சிப்பது இல்லை என்ற அடிப் படைக் காரணமாக இருக்கலாம். அதனால் அவர்கள் ஈர்க்கப்பட்டிருக்கலாம். அவ்வளவு சுலபமாக இங்கே வரமுடியாது என்ற சூழ்நிலையைத்தான் நாம் உருவாக்கி இருக்கிறோம். நாம் அவர்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கவில்லை. அவர்களுக்கு எப்படி உதவுவது, வாழ்வை அவர்கள் இன்னும் சிறந்த வழியில் எப்படி வாழமுடியும், வாழ்வதற்கான சாத்தியத்தை எப்படி உருவாக்கித்தருவது என்றுதான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் வாழ்வில் பரிணமித்த நல்வாழ்வு அவர்களை ஈர்த்திருக்கலாம். அதைவிட இது முழுக்க முழுக்க அனுபவரீதியானது. இங்கே நாம் சொர்க்கத்தையோ, கடவுளையோ அல்லது அற்புதங்களையோ வழங்குவதில்லை. ஆகாயத்திலிருந்து மாங்காயைத் தருவித்துத் தருவதில்லை. நம்மிடம் மாம்பழம் உள்ளது. ஆனால் அது மரத்திலிருந்து வந்தது.

காற்றிலிருந்து எதையேனும் வரவழைத்துக் தருவதோ, ஆசீர்வாதங்களோ அல்லது வாக்குறுதிகளோ எதுவும் இங்கே இல்லை. நாம் மீண்டும் மீண்டும் அவர்களுக்கு நினைவு படுத்திக் கொண்டிருப்பது இதுதான். உலகில் ஒரே ஒரு பிரச்சினை, அது நீங்கள் என்பதுதான். இந்த ஒரு பிரச்சனையை நீங்கள் தீர்த்துவிட்டால் உலகில் வேறு எந்தப் பிரச்சனையுமே இருக்காது என்று சொல்கிறோம். இவ்வளவு கடினமான ஆன்மீகம் என்பது நிச்சயமாக பிரபலமடையாது. ஆனால், இது பிரபலமடைந்து விட்டது. இது மிகப்பெரும் இயக்கமாக வளர்ந்துவிட்டது. தன்னார்வத் தொண்டரகளாக பணியாற்றுபவர்கள் அதை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இத்தைகைய கடினமான ஆன்மீக வழிமுறை பொதுவாக மிகச்சிறிய குழுவில் தான் இருக்க முடியும். இது ஒரு பெரிய இயக்கமாக வளர வாய்ப்பில்லை. ஆனால், தற்போது இது ஒரு பெரிய இயக்கமாக வளர்ந்து விட்டது. சமீபத்தில் நமது மஹாசத்சங்கம் ஒன்று நடந்தது. அதில் ஏறத்தாழ நாலரை இலட்சம் மக்கள் பங்கேற்றார்கள். அநேகமாக கடந்த நூற்றாண்டில் மதம் சாராத அல்லது அரசியல் சாராத எந்த ஒரு கூட்டத்திலும் இவ்வளவு பேர் பங்கேற்று இருக்கமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# முஸ்லிம்களின் ஆடற்கலைகளில் களிகம்பு

05



பாடல்கள் இறைஞ்சுதல்- பிரார்த்தனை- அவையடக்கம் ஆகிய கருப் பொருட்கள் கொண்டதாக இருக்கும். இதன் தரு பின்வருமாறு

திகுர்திகு திகுர்திகு தாம் -  
திகுர்தை  
திகுர்திகு திகுர்திகு தாம்  
தகதக திகுர்திகு தாதும்பதை  
தாம்  
தகதக திகுர்திகு தாம்

அவ்வலஹதான இறைவனை  
அன்புடனே நினைப்போ  
ம்பதைதாம்  
குல்லும் படைத்தழிக்கும்  
ஹூதாவருள்  
கூடிடக் கப்படிப்போ ம்பதை  
தாம்  
வள்ளல் முஹம்மது றசூலினை  
வாழ்த்தியே கம்படிப்போம்ப  
தைதாம்  
அண்ண லபூபக்க ருமறுது  
மானலியைப் புகழ்ந்தேற்றுவம்  
தைதாம்  
பாத்திமா நாயகியை புகழ்ந்து நாம்  
பண்புடன் கம்படிப் போம்ப  
தைதாம்  
மெய்ஞானப் பேரரச முஹியித்தீன்  
மேற்புகழ் பாடிடுவோ ம்பத்  
தைதாம்  
ஹைதரா பாதொலியாம் ஷெகய்  
கப்துல்  
க்காதிறைப் போற்றிடு வோம்ப  
தைதாம்

அதன்பின் ஆட்டங்கள் ஒன்றின் பின் ஒன்றாக தொடரும் சிக்கலான ஆட்டங்களும் ஆவேசமான கம்பு வீச்சும் இலக்கியநயம் ததும்பும் பாடல்களும் பார்ப்போர் மனதை பற்றியிழுக்கும்-நமக்குத் தெரிந்த வகையில் களிகோலில் 24 வகையான ஆட்டங்கள் உண்டு. இதைவிட அதிகமாகவும் இருக்கலாம். இவ்வாட்டங்கள் அனைத்திலும் சிறப்பானதும் அதிகநேரம் எடுக்கக்கூடியதுமான ஆட்டம் கயிறு பின்னுதலாகும்.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

பாட்டின் தலைப்பை வைத்து அல்லது ஆட்டத்தின் சீர் அடிகளை வைத்து ஒவ்வொரு ஆட்டத்திற்கும் பெயர் வைத்துக் கொள்வர். பாட்டைக்கொண்ட பெயராயின் திகுர்தை தாராட்டு-கப்பலடி- ஆவிதியே-ஓடைக் காரன் பள்ளி வீட்டடி என்பனவும், சீர் அடிகளைக் கொண்ட பெயராயின் தன்னாள் கீச்சான் போர்-தரித் தடித்தல் நாலு வீடு செல்லுதல்-தேன்கூடு மான்வளையம்- ஒற்றை மல்லி- இரட்டை மல்லி- ஐந்து வெட்டு-வாள் அறுப்பு-பறவையடி ஆகியன அவற்றுள் சிலவாகும்.

ஓர் ஆட்டத்தை ஆடுமுன் இது எந்த வகையான ஆட்டம் என்பதனை அண்ணாவியார் கூறுவர் அல்லது சொல்கின்ற தருவில் கண்டுபிடிப்பர். இது தவிர்த்து விருத்தத்தில் ஆடப் போகின்ற ஆட்டம் இதுதான் என்பதனைக் கூறலாம்.

சீரடி மல்லி தாளம்  
சிறப்புறத் தன்னாள் சுற்றி  
போயிரு மல்லி கோத்துப்  
புதுக்கிவந் திடத்தில் நின்று  
ஆறிரண்டடியும் வைத்து  
அடுத்து நாம் மல்லி கோக்க  
பேரருளுடையோன் அல்லாஹ்  
பெருந்துணை செய்வாய் நீயே!

இது இரட்டைமல்லி ஆறு இரண்டு அடிக்குரிய விருத்தம். ஆட்டக்காரர் எப்படி ஆடவேண்டும் என்பதும் இதில் விபரப்படுத்தப்பட்டுள்ளது.

**களிகம்பு**

களிகம்பு ஆடுவதற்குப் பயன் படுத்துகின்ற கம்பு வளையாததாக, உடையாததாக, நன்கு காய்ந்ததாக, மிகவும் உறுதியுடையதாக எல்லாவற்றிற்கும் மேலாக அதியுயர்ந்த ஒலி எழுப்பக்கூடியதாக இருக்க வேண்டும். அதற்காக இதற்குப் பெரும்பாலும் காட்டிலுள்ள விப்பனை-சீந்தி-முப்புடல்-காட்டு மல்லி- அச்ச பண்ண- கண்டல்- பீஞ்சா செடி ஆகிய தடிகளைத் தேடி எடுப்பர். காய்ந்த விப்பனைக் கம்பிலிருந்து உயர்ந்த ஓசை எழும்புவதுடன் மிக எளிதில் உடைந்து விடாமல் இருக்கும்.

இந்தத் தடிகள் யாவும் ஒரேபருமனானதும் சமமான நீளமுடையதுமாகும். இத்தடிகளின் நீளம் 15 அங்குலம். இதைவிடத் தடி நீளமாக இருந்தால், எதிராட்டக்காரர்களின் முகத்தையும் தலையையும், நீளம் குறைந்ததாக இருந்தால், எதிராட்டக்காரர்களின் கைவிரல் மொழிகளையும் காயப்படுத்திவிடும். ஆகையால் ஆடும் களிகோல்கள் அனைத்தும் ஒரே சமனாக இருக்க வேண்டும் என்பது விதியாகும். களிகோலின் கீழ்ப்பகுதியில் இசை எழுப்புவதற்காக இரண்டு சிறி சலங்கைகளைத் தொங்கவிடுவது வழக்கம். இதுதவிர, ஒவ்வொரு கோலிலும் ஆட்டக்காரர்கள் கை பிடிப்பதற்கு கீழ் ஒவ்வொரு வெண்டயம் கட்டிக்கொள்வதும் கோல்களுக்குச் சாயம் இட்டு அழகுபடுத்திக் கொள்வதும் உண்டு. (தொடரும்)

பாவலர் சாந்தி முஹியித்தீன்

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 21-12-2011 முதல் 16-12-2014 வரை




**(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**
**ஏழரை சனியின் தொடக்கம் இனி!**
**எதிர்பார்த்தது எல்லாம் நடக்கும் இனி!!**

**விதியை மதியால் வெல்லலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் விருச்சிக இராசிநேயர்களே!**

உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால் முருகப்பெருமானின் அருளுக்கும்,அம்பிகையின் அருளுக்கும் முழுமையாக பாத்திரமானவர்களாக விளங்குவீர்கள். வாக்கு பலிதமும் கனவு பலிதமும் உங்கள் வாழ்க்கையை வழி நடத்தி செல்கிறது என்பதை அனுபவத்தில் உணர்ந்து கொள்வீர்கள்.

ஆண்டவனை பற்றியும் ஆண்டு கொண்டிருப்பவர்களை பற்றியும் அடிக்கடி சிந்தித்து கொண்டு இருப்பவர்கள் நீங்கள்தான். உங்கள் யோசனைகளை கேட்டு நடந்தவர்கள் வாழ்க்கையின் வெற்றிப்படிக் கட்டின் விளிம்பில் ஏறி நடப்பதால், உங்களை சுற்றி ஒரு பெரும் கூட்டமே இருக்கும்.

உங்களுக்கு இப்பொழுது ஏழரைச்சனி தொடங்கி விட்டது. ஏனைய இராசிக்காரர்களை போல நீங்கள் பயப்படத்தேவையில்லை. உங்கள் இராசிக்கு 3,4 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சனி விளங்குகிறார். சகாய ஸ்தானம் மற்றும் சுகஸ்தானங்களுக்கு அதிபதியாக விளங்கும் சனி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது சுகமாக வாழ வழி வகுப்பார். அதற்கு தேவையான செலவுகளுக்கு ஏற்ப வரவுகளையும் வரவழைத்துக் கொடுப்பார்.

இப்படிப்பட்ட குணங்களை பெற்ற உங்களுக்கு இந்த சனிப்பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சி தானா? என்பதைப் பார்ப்போம்.

### பணவரவைப் பெருக்கும் 12 ஆம் இடத்துச்சனி

மார்கழி 5 ஆம் திகதி முதல் துலாம் இராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார்.அது உங்கள் இராசிக்கு 12 ஆவது இடமாகும். அந்த இடத்தில் சனி உச்சம் பெறுவதால் யோகம் தான். அங்கிருந்து கொண்டு 2,6,9 ஆகிய இடங்களை பார்த்து புனிதப்படுத்துகிறார்.

எனவே குடும்பம், வாக்கு, தனம், எதிர்ப்பு, கடன், பூர்வ புண்ணியம்,தந்தை, ஜீவனவகை, வாகன யோகம், உத்தியோக அனுகூலம்,தொழில்விருத்தி, ஆரோக்கியம் ஆகிய இடங்களுக்குரிய ஆதிபத்தியங்களை நல்ல முறையில் செயற்படுத்தப்போகிறார்.

பொதுவாக இதுபோன்று ஏழரைச்சனி தொடங்கும் நேரத்தில் தெய்வவழிபாடுதான் உங்களுக்கு தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். ஆனைமுக பெருமானையும் அனுமனையும் சனீஸ்வரனையும் விடாது வழிபடுவதோடு பிரதோசம் அன்று நந்தீஸ்வரர் வழிபாட்டையும் பௌர்ணமி அன்று கிரிவல வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

### மந்தன் பார்வையில் ஏற்படும் மகத்தான பலன்கள்!

உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை 2,6,9ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே குடும்பச்சுமை கூடும். கொள்கைப் பிடிப்பை சில சமயங்களில் தளர்த்தி கொள்ளும் சூழ்நிலை உருவாகும். அனுசரித்து சென்றால் இந்த காலத்தில் உங்களுக்கு ஆதாயங்கள் அதிகமாக இருக்கும். திருமணத்தடை அகலும். சுபகாரிய பேச்சுகள் நல்ல முடிவுக்கு வரும். நீண்ட நாளாக பேசி விலகிப்போன கல்யாண காரியம் மீண்டும் வந்து முடிவாவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

6ஆம் இடத்தை பார்க்கும் சனியால் அற்புத யோகம் உங்களுக்கு காத்திருக்கிறது. 3 க்கு அதிபதியாக ஆறாமிடத்தை பார்க்கும் போது விபரீத ராஜயோக அடிப்படையில் எதிர்பாராத நல்ல காரியங்கள் பல நடைபெறப்போகின்றன. அதே நேரத்தில் மறைமுக எதிர்ப்புக்கள் மற்றும் உறவினர்கள் பகைகள் உருவாகலாம்.

இரக்க குணத்தை கடைப்பிடிக்கும் நீங்கள் இந்த பிரச்சினைகளை தீர்க்க, அரக்க குணத்தை கைக்கொள்ளாமல் ஆலய வழிபாட்டை கைக்கொள்ளுங்கள். தனபஞ்சமாதிபதி குரு என்பதால் முல்லைப்பூ மாலை சூட்டி மஞ்சள் வண்ண வஸ்திரம் அணிவித்து குருவை வழிபட்டால் குழப்பங்களில் இருந்து நீங்கள் விடுபட இயலும். சனியின் பார்வை 9ஆம் இடத்தில் பதிவதால் தந்தை வழி உறவில் சில மாற்றங்களை காண்பீர்கள். பூர்வீக சொத்துக்கள் கைக்கு வந்து சேர புதிய வழி பிறக்கும். விலை உயர்ந்த பொருட்களையும் வீடு, இடம் வாங்கும் சூழ்நிலையையும் சனி உருவாக்குவார்.

### குருப்பெயர்ச்சிக்காலம்

சனிப்பெயர்ச்சிக் காலத்தில் சுமார் 3 முறை குருப்பெயர்ச்சி ஆகிறது.17.05.2012 இல் இடப ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். 28.05.2013 இல் மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். 13.06.2014 இல் கடக இராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார்.

## விதியை மதியால் வெல்லும் திறமை கொண்டவர்கள்

இடபத்தில் குரு சஞ்சரிக்கும் போது அதன் பார்வை பலத்தால் உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். பணவரவு திருப்தி தரும். ஊர் மாற்றச் சிந்தனைகள் நல்ல முடிவுக்கு வரும். வெளிநாட்டுப் பயணத்திற்கான அறிகுறிகள் தோன்றும்.

மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை பலம் 2,4,12 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்ப ஒற்றுமை கூடும். செல்வாக்கு மேலோங்கும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிக பொறுப்புகள் வந்து சேரும். வீடு கட்டிக் குடியேற வேண்டும் என்ற எண்ணம் பூர்த்தியாகும். வெளிநாட்டில் இருக்கும் உறவினர்களால் வியக்கும் செய்தி ஒன்று வந்து சேரும். வாகனம் வாங்கும் யோகம் கிட்டும்.

கடக இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை பலம் 1,3,7 ஆகிய இடங்களில் பதிவதால் எடுத்த முயற்சிகள் எல்லாம் வெற்றி பெறும். இல்லத்தில் இருப்பவர்கள் உங்கள் உள்ளத்தை புரிந்து கொண்டு செயற்படுவர். வரன்கள் வாயில் தேடி வந்து நிற்கும். குரு பார்வையால் குதூகலங்கள் அதிகரிக்க தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வரவேற்பது நல்லது.

### இராகு-கேது பெயர்ச்சிக்காலம்

02.12.2012 இல் துலாம் இராசியில் இராகுவும் மேட இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். 21.06.2014 இல் கன்னி இராசியில் இராகுவும் மீன இராசியில் கேதுவும் உலா வரப்போகிறார்கள்.

முதல் இராகு-கேது பெயர்ச்சிக்காலத்தில் இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றங்கள் ஏற்படும். பொருளாதார நிலை உயரும். புகழ், கீர்த்தி மேலோங்கும். அருளாளர்களின் ஆலோசனைகளின் பெயரில் சிக்கல்களில் இருந்து விடுபடுவீர்கள். தங்கம், வெள்ளி போன்றவற்றை தாராளமாக வாங்கி சேர்க்க உகந்த நேரமிது. குடும்பத்தினர்களின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். பெண் குழந்தைகளின் திருமணத்தை முன்னிட்டு அதற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடியே ஊதிய உயர்வு, பதவி உயர்வுகள் கிடைக்கலாம். வெளிநாட்டு பயணம் விரும்பிய படியே அமையும்.

அடுத்த இராகு-கேது பெயர்ச்சி காலத்தில் இலாப ஸ்தானமும் புத்திர ஸ்தானமும் வலுவடைவதால் பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் கிடைக்கும். தொழிலில் பெரிய அளவில் இலாபங்கள் வந்து சேரும். இலட்சியத்தோடு வாழ்ந்த உங்கள் கரங்களில் இலட்ச இலட்சமாக புரள இப்பொழுது புதிய தொழில் உருவாகும். வாகன மாற்றம் செய்ய முன் வருவீர்கள். சர்ப்ப சாந்தியை முறையாக செய்தால் சந்தோஷம் தானாகவே வந்து சேரும்.

### சனியின் வக்ர காலம் பொற்காலமாக மாற...

துலாம் இராசியில் உச்சம் பெறும் சனி 5 முறை வக்ரமடைந்து நிவர்த்தியாகிறார்.உங்கள் இராசிக்கு 3 ,4 க்கு அதிபதியான சனி வக்ரம் பெறுவதால் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை செலுத்துவது நல்லது. பிறருக்கு வாக்கு கொடுக்கும் முன் யோசிப்பதும் பிரச்சினை தீர வழி வகுக்கும் தெய்வங்களை இந்தக் காலங்களில் பூஜிப்பது யோகம் தரும்.குறிப்பாக குடும்ப பெரியவர்களை ஆலோசித்து எந்த முடிவெடுத்தாலும் வெற்றி தரும். ஒரு சொத்தை விற்றால் உடனடியாக மற்றொரு சொத்தை வாங்குவ்து நல்லது.

### எண்ணியதை நிறைவேற்றும் 12 ஆம் இடத்துச்சனி!

இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் இப்பொழுது 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை பலம் உங்களுக்கு பக்கபலமாக அமையும். அதன் ஆதிபத்தியம் உங்களுக்கு போதியளவு வளர்ச்சியைக் கொடுக்கும்.நிறைய

**சிவல்புரிசிங்காரம்**

வாய்ப்புக்கள் வந்து சேரப்போகின்றது. புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.



### தொட்ட காரியங்களில் வெற்றி பெறவழிபாடு

எண்ணங்களை எளிதில் செயலாக்குவ்து இறை வழிபாடுதான். நாள்,திகதி,யோகம், கரணம், நட்சத்திரம் பார்த்து நாம் வழிபாடு செய்தால் உடனடியாக நமக்கு நற்பலன்கள் கிடைக்கும்.

**சனீஸ்வரர் சந்நிதியில்,**
**சூரியன் மகனாய் வந்து,**
**சுகத்தினை வழங்கும் ஈசா!**
**காரிய வெற்றி காண,**
**கனிவுடன் அருளுவாயே!**

என்று பாடுங்கள். வெற்றி நிச்சயம் வந்து சேரும்!செவ்வாய்க்கிழமைதோறும் முருகப் பெருமானை வழிபடுவதோடு பௌர்ணமி அன்று நிலவு வழிபாடும் பண வரவை பெருக்கும்.

( தொடரும்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் 51 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவக் கல்விப் பாரம்பரியமும் சைவப் புலவர்களின் பங்களிப்பும் என்னும் நூல் வெளியீடும் அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பேராசிரியர் மா.வேதநாதனால் செல்வி ரஜிதா கைலாயநாதனுக்கு சைவப்புலவர் பட்டம் வழங்கப்படுவதனையும் கொழும்பு அகில இலங்கை இந்துமாமன்ற பிரதித் தலைவர் மா. தவயோகராஜா நூலாசிரியர் சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதிக்கு நோபல்பரிசு வழங்கப்பட வேண்டும்

## அஸ்வர் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு நோபல் சமாதான விருது வழங்கப்பட வேண்டுமென ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட மூன்றாம் வாசிப்பு விவாதங்களில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாதத்தை இல்லாதொழித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியமைக்காக ஜனாதிபதிக்கு நோபல் சமாதான விருது வழங்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

கொடிய பயங்கரவாதத்தை முற்று முழுதாக இல்லாதொழித்த பெருமை ஜனாதிபதியைச் சாரும் எனவும் உலகின் வேறு எந்த நாட்டுத்தலைவரும் இந்தச் சாதனையை நிலைநாட்டவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பதவிப்பிரமாணம் செய்து கொண்ட 12 நாட்களில் அவருக்கு சமாதான விருது வழங்கப்பட்டது. சர்வதேச இராஜதந்திர உறவுகளைப் பேணியமைக்காக இந்த விருது வழங்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். ஒபாமா உத்தியோகபூர்வமாக பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னதாகவே சில விருதுகள் வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலக நாடுகள் யதார்த்தமான சமாதானத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக்கூறி பல இலட்சம் மோசடி செய்த நபர் கைது

(கொழும்பு)

கனடாவில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி இளைஞர்களிடம் 18 இலட்சம் ரூபா மோசடி செய்ததாக கூறப்படும் நபர் ஒருவரை கண்டி பொலிஸ் விசேட குற்றவியல் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

20 இளைஞர்களிடம் குறைந்தபட்சம் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக்கூறி ஏமாற்றியதாக பாதிக்கப்பட்ட இளைஞர்கள் செய்த முறைப்பாட்டையடுத்தே இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எனினும் குறித்த சந்தேக நபர் தேடப்பட்டு வந்த நிலையில் தலைமறைவாகியிருந்த இந்நபர் கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட முற்றுகையின் போது குறித்த இளைஞர்களின் 16 கடவுச்சீட்டுக்களையும் அச்சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# த.தே.கூவினுடனான பேச்சு நிறைவடையும் வரை பிரதிநிதிகளை நியமிக்கப்போவதில்லை

## ஐ.தே.க.அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கான பிரதிநிதிகளை நியமிக்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் நிறைவடையும் வரையில் பிரதிநிதிகளை நியமிக்கப் போவதில்லை என அந்த கட்சி தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் முதலில் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கான தமது பிரதிநிதிகளை பெயரிடுமாறு அரசாங்கம் அரசியல் கட்சிகளிடம் கோரியிருந்தது.

இதன்படி பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட போதிலும் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இணக்கம் ஏற்படுத்தப்படும் வரையில் பிரதிநிதிகள் பட்டியல் அரசாங்கத்திற்கு வழங்கப்பட மாட்டாது என இக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.12 14

★ 1287-நெதர்லாந்தில் இடம்பெற்ற பெரும் வெள்ளத்தினால் சூடர்சே கடல் தடுப்பு சுவர் இடிந்ததில் 50,000 பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1542-இளவரசி மேரி ஸ்டுவேர்ட் முதலாம் மேரி என்ற பெயரில் ஸ்கொட்லாந்தின் அரசியானாள்.

★ 1819-அலபாமா ஐக்கிய அமெரிக்காவின் 22 ஆவது மாநிலமானது.

★ 1884-இலங்கையில் இடம்பெற்ற பெரும் சூறாவளி காரணமாக யாழ்ப்பாணத்தில் மட்டும் பெரும் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன.

★ 1899-யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையை தனியாரிடம் இருந்து இலங்கை அரசாங்கம் பொறுப்பெடுத்துக் கொண்டது.

★ 1900-மாக்ஸ் பிளாங்க் தனது கரும்பொருள் கதிர்வீச்சு பற்றிய கொள்கையை நிறுவினார்.

★ 1903-ரைட் சகோதரர்கள் தமது வான் வெளிப் பயணத்தை முதற்தடவையாகச் சோதித்தனர்.

★ 1911-ரோல்ட் அமுண்ட்சென் தலைமையிலான 5 பேரடங்கிய குழு தென் முனையை அடைந்த முதலாவது மனிதர் என்ற பெயரைப் பெற்றது.

★ 1918-பின்லாந்தின் மன்னனாக ஜேர்மனியின் இளவரசன் பிரீட்ரிக் கார்ல் வொன் ஹெஸ்சென் தெரிவு செய்யப்பட்டான்.

★ 1939-நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து சோவியத் ஒன்றியம் வெளியேற்றப்பட்டது.

★ 1941-உக்ரேயினின் கார்க்கிவ் நகரின் நாசி ஜேர்மனியத் தளபதி யூதர்கள் அனைவரும் நகரை விட்டு 2 நாட்களில் வெளியேற உத்தரவிட்டான். அடுத்த இரு நாட்களில் சுமார் 15 ஆயிரம் யூதர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் தாய்லாந்துடன் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டது.

★ 1946-ஐ.நாவின் தலைமையகத்தை நியூயோர்க் நகரில் அமைக்க முடிவாகியது.

★ 1962-நாசாவின் மரைனர் 2 விண்கலம் வெள்ளி கோளை அண்மித்தது. இதுவே வெள்ளியை அண்மித்த முதலாவது விண்கலமாகும்.

★ 1972-அப்பல்லோ 17 யூஜின் சேர்னன் சந்திரனில் நடந்த கடைசி மனிதர் ஆனார்.

★ 2003-சதாம் உசேயின் கைப்பற்றப்பட்ட செய்தியை ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

★ 2003-பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஸ் முஷாரப் கொலை முயற்சி ஒன்றிலிருந்து உயிர் தப்பினார்.

★ 2004-தென் பிரான்சில் வான் வீதி என அழைக்கப்படும் மில்லோ என்ற உலகின் மிகு உயர் பாலம் திறக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1503-நோஸ்ராடாமஸ், சிறந்த குறி சொல்லும் பதிப்பாளர் (இ.1566)

★ 546-டைக்கோ பிரா, டேனியப் பிரபு (இ.1601)

★ 1895-போல் எல்யூவார், பிரெஞ்சுக் கவிஞர் (இ.1952)

★ 1924-ராஜ் கபூர், இந்தியத் திரைப்பட நடிகர் (இ.1988)


★ 1946-சஞ்சய் காந்தி, இந்திய அரசியல்வாதி (இ.1980)

★ 1953-விஜய் அமிர்தராஜ், இந்திய டென்னிஸ் வீரர், நடிகர்

★ 1979-சாமரசில்வா, இலங்கைத் துடுப்பாட்ட அணியின் வீரர்


### சிறப்பு நாள்

★ இந்தியா- எரிபொருள் சேமிப்பு தினம்.



★ 1799- ஐக்கிய அமெரிக்க நாடுகளின் முதலாவது ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டனின் நினைவு தினம்.

# ஈழத்தமிழரின் அரசியல் இருப்பை நிலைநிறுத்தும் நிகழ்ச்சி நிரல் எது?



தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான ஒரேவழி எனக்கருதிய ஆயுதப்போராட்டம், நவீன சர்வதேச அரசியல் சித்தாந்தத்திற்குள் மிதிபட்டு முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டு, கிட்டத்தட்ட மூன்று வருடங்களை அண்மிக்கின்றது. இந்தப்பின்னடைவைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள தொய்வு நிலையிலிருந்து மீண்டெழுந்து, தமது சமூக அரசியல் விடுதலைக்கான இருப்பை உலக வெளியில் நிலைநிறுத்தவும் தமிழீழத் தனியரசு என்னும் இலட்சியத்தை அடையவும் பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகளின் நலன்கள் சார்ந்து பயணிப்பது என்ற பரிமாணத்தில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சர்வதேச அரசியல் சூழலைக் கையாளுவதன் மூலம் ஈழத் தமிழர்களுக்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பெறலாம் என்ற இந்த முயற்சி வரவேற்க்கப்பட வேண்டியதொன்றே. அங்கீகாரத்தைப் பெறுவதற்கான சர்வதேசப் போக்கை புரிந்து கொள்ளாமைதான் ஆயுதப் போராட்டத்தின் பின்னடைவிற்கான காரணங்களில் ஒன்று என்ற குற்றசாட்டு முன்வைக்கபடுவதால், தற்போதைய சூழலில் அதற்கான முயற்சிகளைச் செய்வது காலத்தின் கட்டாயம்.

மறுபுறம், தமது நலன்களிற்காக, உள்நாட்டுப் பிரச்சினை என்ற எல்லையைக் கடந்து சர்வதேசப் பிரச்சினை என்ற வரையறைக்குள் ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினையை மேற்குலகம் பார்ப்பதனால், இதில் கிடைக்கும் அரசியல் செயற்பாட்டு வெளியில் ஈழத்தமிழர்கள் தமது சமூக அரசியல் இருப்பிற்கான கருத்தியல் தளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு ஏற்படும். அத்துடன் இதற்கு நீண்ட காலம் எடுப்பினும், மேற்குலக சக்திகளின் அங்கீகாரத்தைப் பெறுவதன் ஊடாக ஈழத் தமழினம் தனித்துவமான பண்புகளைக் கொண்ட தேசிய இனம், அதனால் தம்மை தாமே ஆளும் உரிமையுள்ளது என்பதை ஜனநாயக ரீதியில், மேற்குலகத்தின் கதவுகளைத் தட்டி, எமக்கான நியாயத்தை பெறுவதற்கான ஒரு வழி என்பது புரிதலுக்குரியது.

இலங்கையை மையப்படுத்திய வல்லரசுகளின் முரண்பாடு, இலங்கை அரசின் பேரினவாத அரசியல், போர்க்குற்றம், இனப்படுகொலை போன்ற விடயங்களை சாதகமாக நகர்த்தி, சர்வதேச நலன்களுடன் சமப்படுத்துவதன் மூலம் தமிழீழ தனியரசுக்கான அடைவுப்பாதை சாத்தியமானது என்பதுதான் இக்கோட்பாட்டில் முன்வைக்கப்படுகின்ற எடுகோள். நியாயமான எதிர்பார்ப்புகளுடன் முன்வைக்கப்பட்டாலும், உள்ளார்ந்த அனுமானங்களின் அடிப்படையில் பார்க்கும் போது அதை ஒரு மயக்கக் கோட்பாடாகவே கருத வேண்டியுள்ளது.

ஒருமயக்கக் கோட்பாடு என்ற சொல்லுக்குள் வைத்து வியாக்கியானப்படுத்துவதை, தற்போது மிகவும் நம்பிக்கையுடன் முன்னெடுக்கப்படும் அந்த முயற்சியை பலவீனப்படுத்துவதாக கருதக் கூடாது. மாறாக, கோட்பாட்டின் அடிப்படைக் காரணங்களின் சந்தர்ப்பவாத தன்மையைத் தெளிவுபடுத்தவதற்கான முயற்சியாகவே இதைப்பார்க்க வேண்டும். புவிசார் அரசியல் போட்டிகளை மையப்படுத்தி, சர்வதேச நலன்களுடனும் நிலைப்பாடுகளுடனும் ஈழத்தமிழ் மக்களின் நலன்களையும் நிலைப்பாடுகளையும் பொருந்தச் செய்யும் போது, அது தமிழ்மக்களின் அரசியல் விடுதலையைப் பெறுவதற்கான வாசலைத் திறந்துவிடும் அல்லது வழிசமைக்கும் என்ற கோட்பாட்டின் மீதான மயக்கத்தை பற்றிய கருத்துப்பகிர்வை செய்வதே கட்டுரையின் பிரதான நோக்கம்.


ஒரு நாட்டின் நலன் என்பது ஒரு போதும் நீதிக்கும் தர்மத்திற்கும் கட்டுப்பட்டது அல்ல. சுயநலன், சுயலாபத்தின் அடித்தளத்தில் உருவாகும் நாட்டின் நலனானது அதிகாரப்பலம், பொருளாதாரபலம் என்பவற்றை வலுப்படுத்தவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. இது காலத்திற்கு ஏற்ப மாற்றமடை யும், தேவைக்கு ஏற்ப கொள்கைகளை உருவாக்கும். இங்கு மனிதாபிமானம், மனிதநேயம் என்ற எந்த அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் இடமில்லை. எனவே மேற்குலக நலனுடன் தமிழர் நலன்களைப் பொருத்துதல் என்பதன் உள்ளார்த்தமான அர்த்தம், பொருந்தச் செய்தல் என்பதல்ல. மாறாக மேற்குலகம் தனது தேவைகளுக்கேற்ப தமிழர் நலன்களைப் பயன்படுத்துதல் என்பதே வெளிப் படையுண்மை.

இலங்கைத்தீவில் மேற்குலக நலன்களுக்கப்பால் பிராந்திய வல்லரசுகளின் நலன்களும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. பிராந்திய வல்லாதிக்க சக்தியான இந்தியா, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஆசிய வல்லாதிக்க சக்தியான சீனாவின் மேலாதிக்கத்தைத் தடுப்பதில் அதிக அக்கறையுடன் செயற்படுகின்றது. சீனாவின் அதிவிரைவான இராணுவப் பொருளாதார வளர்ச்சி இந்தியாவை அச்சம் கொள்ளச் செய்கின்றது. அதே வேளை இலங்கைத்தீவும் சீனாவின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்டால் சீனாவின் முற்றுகைக்குள் இந்தியா அகப்பட்டுவிடும் அபாயம் உள்ளது என்ற காரணத்திற்காக இலங்கைத்தீவில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட முன்னகின்றது. மறுபுறம் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக தனது சர்வதேச செயற்பாடுகளை மேற்கொள்ளும் சீனாவை கையாள வேண்டிய தேவை மேற்குலகத்திற்கு இருக்கின்றது. இவற்றின் வெளிப்பாடே இந்திய அமெரிக்கா அரசுகளின் நெருக்கமாகும்.

இலங்கை அரசாங்கம் நீண்ட காலமாக மிகத்தெளிவாகவே சர்வதேச நலன்களைக் கையாண்டு வருகின்றது. இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்தே அரசியல் இராஜதந்திரத்தில் பல இடங்களில் நாம் தோற்றுள்ளோம் என்பது வெளிப்படையானது. எமது கைகளை வைத்தே எம்மைக் குத்தும் செயற்பாடுகளை வரலாற்று ரீதியாக இலங்கை அரசு செய்து வந்துள்ளது.

இலங்கை அரசின் பேரினவாத அரசியல் தலைமைகள், இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை கருவியாக்கி, புவிசார் போட்டி அரசியலை உருவாக்கி அதனூடாக தமது அரசியல் அடைவுகளைப் பெற்றுள்ளன, பெற்றுவருகின்றன என்பதுதான் யதார்த்தம். இறுதிப் போரின்போது உலக ஆதிக்கப் போட்டியாளர்களையும் மற்றும் பிராந்திய ஆதிக்கப் போட்டியாளர்களையும் தளத்திற்கு எடுத்து, அவர்களைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளை பின்னடைவிற்குள்ளாக்கியது வரை இலங்கை அரசியல் சாணக்கியம் வலுவானது.

விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்காக இந்திய அரசுடன் கை கோர்த்த இலங்கை அரசு தற்போது இந்தியாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் முயற்சியை நாசுக்காகச் செய்து கொண்டு வருகின்றது. எண்பதுகளில் இலங்கையைத் தனது பிடிக்குள் வைத்திருக்கும் நோக்கத்துடன் ஈழத்தமிழர் விடுதலை இயக்கங்களை வளர்த்த இந்தியா, மீண்டும் இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என்ற அனுமானம் காரணமாகவே தனது பாதுகாப்புச் செலவினத்தை பலமடங்கு அதிகரித்துள்ளது. அண்மையில் வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது இலங்கை ஜனாதிபதி "வெளிநாட்டு சக்தி களின் தலையீடுகளை முறியடிக்கவே பாதுகாப்புச் செலவினம் அதிகரிக்கப்பட்டுள்ளது" என்ற கூற்றின் மூலம் இதனை நிரூபித்துள்ளார்.



இங்கேதான் முக்கியமான கேள்விக்கு விடைகாண வேண்டியுள்ளது. பிறநாடுகளின் நலன்களுடனான சமப்படுத்தலில்தான் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான அங்கீகாரம் அல்லது இருப்பு இருக்குமாயின், மேற்குலகின் நலன்களுடன் இலங்கை அரசின் நலன் ஒத்துப்போனால், ஈழத்தமிழர்களின் நலன்கள் தொடர்பாக மேற்குலகம் என்ன நிலைப்பாடு எடுக்கும்? மேற்குலகம் தமிழர்களின் நலன்களுடன் மட்டும்தான் ஒத்திசைந்து போகும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஒரு வேளை மேற்குலக நலன்களுடன் தமிழர் நலன்களை ஒத்துப்போக வைக்க முடியாமல் போனால், தமிழர் விடுதலைக்கான எதிர்காலம் என்ன?

இத்தகைய ஒரு நிலையில் இலங்கைத்தீவு தொடர்பில் ஏற்பட்டிருக்கும் வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டி ஈழத் தமிழர்களுக்கு சாதகமாக அமையும்; அதன் மூலம் தீர்வை எட்ட முடியும்; அது வரை எமது கொள்கை உறுதிப்பாட்டை தக்கவைத்திருந்தால் போதும் என்பது, கற்பிதங்களாகவே அமையலாம். ஏனெனில், இவைகள் எல்லாம் அனுமானங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டவை. நிச்சயமாக நடைபெறும் என்பதற்கான உத்தரவாதங்கள் எதுவும் இல்லை.

ஈழத்தமிழர் அரசியல் இருப்பை நிலை நிறுத்தும் ஒரே கோட்பாடாக இதை முன்வைப்பது ஆபத்தானது. இந்தக் கோட்பாட்டை பலவீனப்படுத்தும் பல புறக்காரணிகள் இருக்கின்றன. எனவே இது இப்படித்தான் நடைபெறும் என முடிவாக்கிவிடவும் முடியாது. அனுமானங்களில் ஏற்படும் மாற்றங்கள் முடிபிலும் தாக்கத்தைப் பிரபலிக்கும்.

ரைம் சஞ்சிகையின் இணையத்தில் Jyoti Thottam எழுதியுள்ள கட்டுரையில் "ஆசியாவின் மிகப் பெரிய நாடுகளான சீனா மற்றும் இந்தியாவுடன் நெருக்கத்தைக் கொண்டுள்ள இலங்கையுடன் இராஜதந்திர ரீதியான அணுகுமுறைகளைப் பயன்படுத்துவது பெறுமதியாக இருக்குமா? என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நிலையில் அமெரிக்கா உள்ளது. அதாவது, மேற்குலக கோட்பாட்டை முற்று முழுதாகப் பிரயோகிக்கும் போது மனித உரிமைகள் என்ற பதம் அதன் தார்மீக சக்தியை இழந்து விடுகின்றது என்பதைத் தற்போது இலங்கையில் இடம் பெற்ற சம்பவங்களிதிலிருந்து கற்றுக் கொள்ள முடிகின்றது" மேலும் "மேற்குலகத்தால் தலைமை தாங்கப்படும் இராஜதந்திர அழுத்தங்கள் மற்றும் பொருளாதாரத் தடைகள் என்பன பர்மா போன்ற நாடுகளில் மட்டுமே வெற்றியளிக்க முடியும். ஆனால், இவ்வாறான உத்திகள், புதிய ஆசிய நூற்றாண்டில் நீண்டகால வெற்றியைத் தராது" என குறிப்பிட்டுள்ளார்.

(தொடரும்)

நன்றி:பொங்குதமிழ்

# கிரிக்கெட் விளையாட்டின்மூலம் இனப்பிரச்சினை தீர்ந்துவிடாது

## ஜயலத் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கீரியும் பாம்பும் போன்று செயற்படுவதாலும் அதேநேரம் இரு தரப்பும் இணைந்து கிரிக்கெட் விளையாடுவதாலும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வினை கண்டு விட முடியாது எனத் தெரிவித்த ஐ.தே.க.எம்.பி டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன ஆணைக்குழுக்களை அமைத்து நேரத்தை வீணடிப்பதை விடுத்து இந்தியாவுடன் இணைந்து தீர்வைக்கான முன்வர வேண்டும் என்றும் நேற்று முன்தினம் சபையில் ஆலோசனை வழங்கினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடற்றொழில் நீர்வழங்கல் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கை சேர்ந்த மீனவர்கள் கடந்த 30 வருட காலமாக பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்து வந்தமை தொடர்ந்தும் நீடித்துக் கொண்டிருந்தது. இதில் அமைச்சர் ஒருவரது பங்கும் இருந்தது. எனினும் இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு கண்டிருப்பதையிட்டு அமைச்சருக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். எனினும் வடக்கு கிழக்கின் கடல் வளம் அங்குள்ள மக்களுக்கு மாத்திரம் சொந்தமானது என்று இங்கு கூறுவதற்கு நான் விளையவில்லை.

இலங்கை-இந்திய மீனவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினையை தந்திரோபாயத்தின் மூலம் தீர்த்து விட முடியாது. பொதுவாக மீனவர்கள் கத்தோலிக்கர்கள் என்பதால் இலங்கை-இந்திய கத்தோலிக்க மதகுரு தலைவர்களுடன் கலந்தாலோசனை களையும் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டு இவற்றுக்கு தீர்வை காண முடியும். இதே போன்று கச்சதீவு பிரச்சினைக்கும் நல்லதொரு தீர்வை எட்ட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-2)

# ஐ.தே.க.வின் தலைமைத்துவ போட்டி; தேரர்களை சந்திக்கிறார் கரு ஜயசூரிய

(கொழும்பு)

ஐ.தே.க. தலைமைத்துவப் போட்டி தீவிரமடைந்து வரும் நிலையில் கட்சியின் தொழிற்சங்க மஹாநாயக்க தேரர்கள் மற்றும் சமய தலைவர்களின் ஆதரவை திரட்டுவதற்காக பிரசாரங்களை கட்சியின் மறுசீரமைப்பு குழுவினர் ஆரம்பித்துள்ளனர்.

தலைமைப் பதவிக்கு போட்டியிடும் கட்சியின் பிரதி தலைவர் கரு ஜயசூரிய தலைமையிலான தூதுக்கழுவினர் ஆசிர்வாதம் கோரி மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீட மஹாநாயக்க தேரர்களை சந்திக்கவுள்ளதாக மறு சீரமைப்பு குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார கூறினார்.

இத்தூதுக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள, முன்னாள் உதவித்தலைவர் ருக்மன் சேனாநாயக்க, இம்தியாஸ் பார்கீர் மார்கார் ஆகியோரும் அடங்குவர் என அவர் தெரிவித்தார்.

ஏனைய சமயத் தலைவர்களையும் இத்தூதுக்குழுவினர் சந்திக்கவுள்ளதாகவும் அவர் கூறினார். ஐ.தே.க வின் தொழிற்சங்கமான தேசிய கல்வி ஊழியர் சங்கம் தமது அணிக்கு ஆதரவு வழங்க உறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(அ-2)



இன்ரெல்,அக்,ஸ்ரெண்ட் மைக்ரோ அன்ரிவைரஸ் உற்பத்திகளின் இலங்கை இறக்குமதியாளர்கள் மைக்ரோ பிசி சிஸ்டம் பிரைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தினருடன் இணைந்து யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் அண்மையில் நாற்பதுக்கும் மேற்பட்ட கணனி நிறுவனப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதோடு நவீன தொழில்நுட்ப பயிற்சிகளையும் வழங்குவத்த படத்தில் காணலாம்.

(படம் :-அலுவலக செய்தியாளர்)

# மனித உரிமை மீறல் தொடருமாயின் சர்வதேசம் தலையிடும் அபாயம்

## கயந்த எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்கள் இடம்பெறுமாயின் சர்வதேசம் நேரடியாக இலங்கைக்குள் தலையிடும் அபாயம் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நினைத்த விதத்தில் எல்லாம் சட்டதிட்டங்களை மாற்றியமைக்கிறது. இவ்வாறு மாற்றி அமைக்கப்படுவதால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இது நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும் ஒரு செயற்பாடாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தின்ம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் தினமான கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கலந்து கொள்ளச் சென்ற இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டார்கள். இவ்வாறான மனித உரிமை மீறல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணமே உள்ளன.

அரசாங்கம் இதனை கட்டுப்படுத்தி நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் சர்வதேசம் நேரடியாக இலங்கைக்குள் தலையிடும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இது மிகவும் அபாயகரமான ஒன்றாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-2)

# போர் வெற்றியின் பின்னர் கிடைக்கக்கூடிய அனுகூலங்களை அபிவிருத்திமூலம் அடையமுடியாது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரில் ஈடுபட்ட வெற்றியின் பின்னர் கிடைக்கக்கூடிய அனுகூலங்களை வெறுமனே அரசியல் ஸ்திரத்தன்மை, அபிவிருத்தி என்பவற்றின் மூலம் அடைய முடியாது என்று இலங்கையின் இராஜதந்திரியான ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மற்றும் நீதியான நல்லிணக்கம், நட்புரீதியான சூழல் என்பவற்றின் மூலமே அந்த அனுகூலங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

நேர்மையான அரசாங்கம் ஒன்று இரகசியமான யோசனையை தயாரித்து அதனை உயர் நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடன் நாடாளுமன்ற பெரும்பான்மையை பயன்படுத்தி நிறைவேற்ற முயற்சிக்காது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

டிரான்பேரன்சி இன்டர்நசனல் (TISL) ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் தனபால இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இலங்கையில் அனைத்து துறைகளிலும் இறைமை பாதுகாக்கப்பட வேண்டும். இதனை பாதுகாக்க தவறுமிடத்து இலங்கையின் மாற்றங்களுக்கான போராட்டங்களை தவிர்க்க முடியாது.

அரபுலக நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்கள், இந்தியாவில் அன்னா ஹசாரேயின் போராட்டம், அமெரிக்காவில் வோல்ஸ்ரீட் போராட்டங்கள் என்பன இதற்கு உதாரணங்களாகும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

(அ-2)

# ராஜிதவும் சரத் குமாரவும் பாராளுமன்றில் விவாதம்

(கொழும்பு)

ஆளும் அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் இடையில் பாராளுமன்றில் காரசாரமான வாக்குவாதம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் ராஜிதவிற்கும் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சரத் குமார குணரட்னவிற்கும் இடையில் இந்த வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

வரவு செலவுத்திட்ட மூன்றாம் வாசிப்பு விவாதத்தில் கலந்து கொண்ட போது இந்த வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

இதனால் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு பெரும் தர்மசங்கடமான நிலைமை ஏற்பட்டதாக பாராளுமன்ற வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாக்குறுதி அளிக்கப்பட்டதனைப் போன்று உரிய முறையில் நாடு முழுவதிலும் மீன் விநியோகம் மேற்கொள்ளப்படுவதில்லை என பிரதி அமைச்சர் திடீரென குற்றம் சுமத்தியுள்ளார்.

நுகர்வோர் சிறந்த முறையில் மீன் விநியோகம் செய்யப்படும் என்ற அமைச்சின் வாக்குறுதிகள் வெறும் வார்த்தைகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நியாயமான விலைக்கு மீன் விற்பனை செய்யப்படுவதனை அமைச்சர் உறுதி செய்யத் தவறியுள்ளதாக பிரதி அமைச்சர் சரத் குமார குணரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

பொதுமக்களின் பணத்தை பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களினால் மீன்பிடிவள் அமைச்சர் கடுமையாக ஆத்திரமுற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கேள்விகளையும் கோரிக்கைகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைக்குமாறு ஆத்திரமுற்ற அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# பிரி. தமிழரைக் கொலை செய்த நால்வருக்கு சிறைத்தண்டனை

(கொழும்பு)

இலங்கையை சேர்ந்த 48 வயதுடைய சுப்பையா தர்மசீலன் என்பவரை கொலை செய்த குற்றச்சாட்டுக்காக பிரித்தானியாவில் நான்கு பேருக்கு 20 -27 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த கொலை கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த நிலையில் விசாரணைகளின் பின்னர் பேமிங்காம் நீதிமன்றம் கொலையில் சம்பந்தப்பட்ட நால்வருக்கு சிறைத் தண்டனை விதித்தது.

கொலை வழக்கில் ஐந்தாம் எதிரான ஜேம்ஸ் மூரி என்பவருக்கு 6 வருட சிறைத்தண்டனையை நீதமன்றம் விதித்தது.

கிங்சாலிங் என்ற இடத்தில் அமைந்திருந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான தர்மசீலன் வியாபாரத்தளத்திற்கு இரவில் சென்ற குறித்த நால்வரும் தர்மசீலனை தாக்கி கொலை செய்தனர்.

(அ-2)

# சிறைச்சாலைகளில் இடப்பற்றாக்குறை; தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் அசௌகரியம்

## அமைச்சர் ஹக்கீமிடம் ஐ.சி.ஆர்.சி.எடுத்துரைப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் நிலவும் இடநெருக்கடியைக் குறைத்து கைதிகளுக்கு மேலும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் அதற்கு பொறுப்பான அமைச்சர் சந்திரசிறி கஜதீரவுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுவதாக நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தம்மைச் சந்தித்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் (ஐ.சி.ஆர்.சி) இலங்கைக்கான தலைமை அதிகாரி யிவெஸ் கியோவனோனிடம் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான தலைமை அதிகாரி தமது அமைப்பின் உயர் அதிகாரியான ரல்ப் வெஹ்பி லையின் கிரஹம் ஆகியோருடன் நீதியமைச்சர் ஹக்கீமை அவரது அமைச்சில் கடந்த திங்கட்கிழமை முற்பகல் சந்தித்து சிறைச்சாலைகளில் நெரிசல் காணப்படுவதன் காரணமாக கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டிருப்போரும் அசௌகரியங்களுக்கு ஆளாக நேரிடுவதால் அவர்களுக்கு போதிய இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார்.

சிறைக் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் காரணமாக இடவசதியும் போதிய காற்றோட்டமும் கொண்ட அறைகளில் அவர்கள் தங்க வைக்கப்படுவது அவசியம் என்பதை வலியுறுத்திய செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கும் குறைப்பதற்கும் இலங்கை அரசாங்கத்தோடு இணைந்து செயலாற்றுவதற்கு தமது அமைப்பு ஆலோசனைகளை முன்மொழிந்து அதற்கான செயற்றிட்டமொன்றை தயாரித்திருப்பதாக கூறினார்.

சிறைச்சாலை சீர்திருத்தங்கள் அவ்வப்போது மேற்கொள்ளப்படுவது பற்றி தெரிவித்த அமைச்சர் ஹக்கீம், முன்னர் அது நீதியமைச்சின் கீழ் இருந்ததாகவும் பின்னர் அதற்கென தனியான ஓர் அமைச்சு ஏற்படுத்தப்பட்டு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் பொறுப்பில் சிறைச்சாலைகள் இருப்பதாகவும் நாம் அவருடன் அதைப் பற்றி கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவலாம் என நம்பிக்கை தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் சன நெரிசலையும் இட நெருக்கடியையும் குறைக்க. உள்ளக ஏற்பாடுகள் அனைத்தையும் சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சு மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் நீதியமைச்சை பொறுத்த வரையில் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை மட்டுமே மேற்கொள்ள முடியுமென்றும் அவர் கூறினார்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் கைதிகள் பாதுகாப்பு இணைப்பதிகாரி ரல்ப் வெஹ்பி கருத்து தெரிவிக்கும் பொழுது, நாம் பல்வேறு நாடுகளில் சிறைச்சாலைகளுக்கு சென்று அங்குள்ள நிலைமைகளை நன்கு அவதானித்திருப்பதாகவும் அவற்றோடு ஒப்பிடும் போது இலங்கைச் சிறைச்சாலைகளின் நிலைமை அவற்றிலும் சிறந்து காணப்பட்ட போதிலும் குறைபாடுகளும் உள்ளன என்பதை சுட்டிக் காட்டினார். (அ-2)

## விசேட கூட்டம்

(தனங்கிளப்பு)

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட சம்மேளத்தின் விசேட கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தேசிய இளைஞர் சேவைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அந்நிகழ்விற்கு மாவட்ட சம்மேளன உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறும் இக் கூட்டத்தின் போது முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் மாவட்ட சம்மேளன உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற தலைவர் திருமதி வினோதினி அறிவித்துள்ளார். (அ-37)

## அவுஸ். அகதி ஒருவரை நாடு கடத்த இடைக்கால தடை


தமிழ் அகதி ஒருவரை இலங்கைக்கு நாடு கடத்துவதை அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றம் தற்காலீகமாக இடைநிறுத்தியுள்ளதுடன் மற்றொரு தமிழ் அகதியை நேற்று இலங்கைக்கு நாடு கடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அகதி ஒருவரை நாடு கடத்துவதை அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றம் தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளதுடன் இதே வேளை மற்றொரு தமிழ் அகதியை இலங்கைக்கு நாடு கடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எமில், விதுரன் ஆகிய இரண்டு அகதிகளினது நாடு கடத்தலுக்கு எதிராக கடந்த வாரம் சமஸ்டி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

இதனையடுத்து முறையான விசாரணை நடத்தப்படும் வரை எமில் நாடுகடத்தப்படக் கூடாது என்று அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்துள்ளது. இன்று நாடு கடத்தப்படவுள்ள மற்றையவரான விதுரன் என்ற இலங்கை அகதியின் மனுவையும் சமஸ்டி நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்திருந்தது. எமில் என்ற தமிழ் அகதியின் இடைக்காலக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் இலங்கைக்கு கட்டாயமாக திருப்பி அனுப்பப்படவிருந்தார்.

இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் நாடு கடத்துவதை இடைநிறுத்தக் கோரி சட்டத்தரணிகள் சமர்ப்பித்த அவசர மனுவொன்றை அடுத்தே இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவரது சார்பில் இன்று உயர்நீதிமன்றத்தில் புதிய மனுவொன்று தாக்கல் செய்யப்படவுள்ளது. இத னால் அவரை நாடு கடத்துவதற்கான ஏற்பாடுகளை நிறுத்துவதற்கு அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)



யாழ்ப்பாண பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட நீர்-குடம்-பெண்கள் எனும் எண்ணக் கருவிலான புகைப்படப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் இடமிருந்து வலமாக முதலாமிடம் பெற்ற எஸ். அமரதாஸ், நிறுவனத்தின் இயக்குநர் கலாநிதி ஜெராட் றொபுசோன், பிரதம விருந்தினரான யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி கிருஸ்ணவேணி, போட்டியில் 3 ஆம் இடத்தினைப் பெற்ற எஸ். அனுராஜ், நிறுவனத் தலைவர் கலாநிதி கே.இந்திரமோகன் மற்றும் சான்றிதழ் பெற்ற அஸ்வின் சுதர்சன் ஆகியோர் நிற்பதனை படத்தில் காணலாம்.

## முக்கிய அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்

**1) கட்டட அனுமதி/ அமைவுச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளல்**

வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக அமைக்கப்படும் கட்டடங்கள், எல்லைச்சுவர்கள் போன்ற கட்டட அமைவுகள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் முன் அனுமதி பெற்றுக்கொண்ட பின்னரே அமைக்கப்பட வேண்டும். அத்துடன் கட்டட அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடங்கள் யாவற்றுக்கும் அமைவுச்சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரமும் வீடமைப்புக்கட்டளைச் சட்டம் (அ268) விதிகளின் படியும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**2) பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருட்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச்சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபைக்கட்டளைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தி.பிரகாஷ் ,தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி-5184)



# கேரளத்திலுள்ள தமிழர்கள் சொந்தவூருக்கு விரட்டியடிப்பு

(புதுடில்லி)

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் உள்ள ஏலக்காய் தோட்டத்தில் பணிபுரியும் தமிழகத்தை சேர்ந்த 150 தொழிலாளர்கள் அவர்களின் சொந்த ஊருக்கு விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். எந்தநேரத்தில் தாக்குதல் நடக்குமோ என்ற அச்சத்தில் தற்போது 3 ஆயிரத்து 500 தமிழர்கள் தத்தளிக்கின்றனர்.

கேரள மாநிலம் குமுளியில் சில நாட்களுக்கு முன் தமிழர்கள் தாக்கப்பட்டனர். தமிழக விவசாயிகள் பேரணி நடத்தி தங்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

விவசாயிகள் மீது பொலிஸார் நேற்று முன்தினம் தடியடி நடத்தினர். கேரள மாநிலத்திற்கு தமிழகத்திலிருந்து உணவுப் பொருட்கள் கொண்டு செல்லும் பாதைகள் அனைத்தும் அடைக்கப்பட்டுள்ளன. கேரள மாநிலத்தில் வசிக்கும் தமிழர்கள் தமிழகத்திற்கு வர முடியாத அளவுக்கு வாகன போக்குவரத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இடுக்கி மாவட்டத்தில் 75 சதவீதம் தமிழர்கள் வசிக்கின்றனர். பாரம்பரியமாக ஏலக்காய், மிளகு போன்ற தோட்டப் பயிர்களை உற்பத்தி செய்து வருகின்றனர். இவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். தாக்கப்பட்ட தமிழர்கள் தப்பித்தோம், பிழைத்தோம் என காட்டுப்பகுதி வழியாக போடி பகுதிக்கு ஓடித் தஞ்சம் புகுந்துள்ளனர்.

தேத்தொட்டி பாறா என்ற இடத்தில் 3 ஆயிரத்து 500 பேர் வசிக்கின்றார்கள். இவர்களுக்கு இன்னும் பத்து நாளைக்கு மட்டும் தான் உணவுப் பொருட்கள் உள்ளன. அரிசி, பருப்பு, மிளகு, உப்பு, சீரகம், கடுகு போன்ற பலசரக்கு பொருட்களை போட்டியிலிருந்து தான் இங்கு கொண்டுவர வேண்டும். கேரள மக்கள் சாப்பிடுகிற அரிசியை எங்களால் சாப்பிட முடியாது.

எந்த நேரத்திலும் எங்கள் மீது தாக்குதல் நடத்த கேரள மக்கள் திரண்டு வரலாம். எங்களை விரட்டுவதற்கான முயற்சிகளில் அவர்கள் ஈடுபடலாம். உயிர் மீது ஆசை இருந்தால் இங்கிருந்து சென்று விடுங்கள் என மிரட்டி வருகின்றனர்.

மத்திய அரசு உடனடியாக தலையிட்டு மத்திய பாதுகாப்பு படையினரை தமிழர்கள் வசிக்கும் பகுதிக்கு அனுப்பி பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். கேரள மக்கள் வன்முறையில் இறங்குவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# அணையைக் காக்க போராடிய மக்கள்மீது தடியடி நடத்திய தமிழகப் பொலிஸார்

முல்லைப்பெரியாறு அணையைக்காக்க பேரணியில் சென்று கொண்டிருந்த மக்கள் மீது தடியடி நடத்திய பொலிஸாருக்கு பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், முல்லைப் பெரியாறு தண்ணீரையே தங்களின் வாழ்வாதாரத்திற்கான வழியாக கொண்டுள்ள மதுரை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மக்களே கடந்த 3 நாட்களாக அவர்கள் அமைதி வழியில் கேரளத்தை நோக்கி பேரணிகளை நடத்தி வருகின்றனர்.

கேரள எல்லைக்குள் நுழையப் போவதாக அவர்கள் அறிவித்திருந்த போதிலும் தமிழக அதிகாரிகளின் அறிவுரையை ஏற்று தமிழக எல்லையான குமுளியுடன் தங்களது பேரணியை முடித்துக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களின் நோக்கம் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துவது தானே தவிர வன்முறையில் ஈடுபடுவது அல்ல

அவ்வாறு இருக்கும்போது நேற்று முன்தினம் பேரணியாக சென்று கொண்டிருந்த மக்கள் மீதும் பொலிஸார் திடீரென தடியடி நடத்தியுள்ளனர். பெண்கள் மீது தடியடி நடத்தியதில் பலர் காயமடைந்துள்ளனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு பா.ம.க சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உரிமைகள் பறிக்கப்படும்போது அதை எதிர்த்து போராட்டம் நடத்துவதற்கான சகல உரிமையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்டு. அமைதி வழியில் நடத்தப்படும் இந்தப் போராட்டத்தை பொலிஸார் ஒழுங்குபடுத்த வேண்டுமே தவிர ஒடுக்க முயலக்கூடாது என்றார். (அ-2)

# எதிலும் முடிவின்றி தாமதப்படுத்தும் மத்தியரசு; குற்றம் சுமத்துகின்றார் கருணாநிதி



எதிலும் முடிவு எடுக்காமல் மத்திய அரசு தாமதப்படுத்துகின்றது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றஞ்சாட்டினார்.

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்திலாவது தாமதமாக முடிவெடுக்காமல் மத்திய அரசு விரைந்து செயற்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் உச்ச நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தக் கோரியும் கேரளத்தில் தமிழர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்தும் தமிழகம் முழுவதும் தி.மு.க.வினர் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற உண்ணா விரதப் போராட்டத்தை முடித்து வைத்து கருணாநிதி பேசியது.

சேரன், சோழன், பாண்டியன் என்ற மூவேந்தர் கொடியின் நிழலில் ஒன்றுபட்டு நின்றிருந்தவர்கள் கேரளத்தினரும் தமிழர்களும். அந்தக் கொடியின் நிழலில் உருவாக்கிய ஒற்றுமை முல்லைப் பெரியாறு பிரச்சினையில் உணர்ச்சிவசப்படாமல் மேலும் ஒற்றுமையைப் பேண வேண்டும். இந்த நேரத்தில் டில்லியிலிருந்து மத்திய அரசு வேடிக்கை பார்க்காமல் இதனை வேடிக்கையான நிகழ்வாகக் கருதாமல் எதிர்காலத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்கிற ஆபத்தை உணர வேண்டும்.


எதிலும் தாமதமாக முடிவு எடுக்கும் மத்திய அரசு இதிலும் தாமதமாக முடிவெடுக்காமல் தமிழர்களின் செங்குருதி தெருவில் சிந்தாமல் காப்பாற்ற வேண்டும்.

தமிழக அரசுக்கும் கேரள அரசுக்கும் ஏற்பட்டுள்ள மோதலைப் பயன்படுத்திக் கொண்டு கேரளத்தில் உள்ள பிரஜைகளும் அந்தப் பிரஜைகளின் தலைவர்கள், அமைச்சர்கள், முதல்வர் உள்ளிட்டோர் தமிழகத்தை வறண்ட பாலைவனமாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டு வருகின்றனர். தமிழன் யாருக்கும் தாழமாட்டான். யாரையும் தாழ்த்த மாட்டான்.

அணை உடையுமா... அணை பலவீனமாக இருக்கிறது என்று கேரள அரசு பொய் பிரசாரம் மேற்கொள்கிறது. அணை பராமரிக்கப்பட்டு பலமாக இருப்பதால் உடையும் என்ற பேச்சுக்கே இடமில்லை. அணை உடைந்தே போய்விட்டது போன்று படம் எடுக்கப்பட்டுள்ளது. இப்படி ஒரு படத்தை எடுத்து இரண்டு மாநிலங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளதைக் கண்டு கலையுலகத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் நான் மிகவும் வருந்துகிறேன் என்றார். (அ-2)

# பாரதச் செய்திகள்

## கம்பம்மெட்டு பெண்கள் மீது தடியடி; கேரள எல்லை நோக்கி மக்கள் பயணம்



தேனி மாவட்டத்தில் முல்லைப்பெரியாறு அணை போராட்டம் வலுக்கிறது. கம்பமெட்டு கேரள எல்லையில் நேற்று முன்தினம் முற்றுகையிடச் சென்ற பெண்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தியதால் ஆத்திரமடைந்த மக்கள் பொலிஸார் மீது கல் வீசி தாக்கினர். இதில் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் போராட்டப் பகுதிக்கு வந்த அமைச்சர் பன்னீர் செல்வம் மீது மக்கள் தாக்குதல் நடத்தினர். பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர்.

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது 500 இற்கும் மேற்பட்ட பெண்கள் டி.ஐ.ஜி.யுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அவர்களைக் கலைக்க பொலிஸார் பெண்கள் மீது இலேசான தடியடி நடத்தினர்.

கோபமடைந்த மக்கள் கற்கள் மற்றும் செருப்புக்களை பொலிஸார் மீது வீசி தாக்குதல் நடத்தினர். ஆத்திரமடைந்த பொலிஸார் மலைப்பாதையில் மக்கள் மீது தடியடி நடத்தினர்.

இதில் 100 இற்கும் அதிகமானோர் காயமடைந்து காட்டுக்குள் தப்பி ஓடினர். இதையறிந்து கீழே இருந்து புறப்பட்டு வந்த மற்றொரு கூட்டம் பொலிஸ் வாகனங்களை உருட்டுக்கட்டைகளாலும் கல் வீசி யும் தாக்கினர். தமிழக -கேரள எல்லையில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டின் கைது படலம் தொடர்கின்றது

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் மெகா கம்பனிகளான எஸ்ஸார் மற்றும் வோடபோன் நிறுவனங்கள் மீது நேற்று சி.பி.ஐ.தனது 3 ஆவது குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது .இதனால் அடுத்தகட்டமாக இது தொடர்பான இயக்குநர்கள் கைது படலம் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் சி.பி.ஐ. விசாரணை ஆரம்பிக்கப்பட்டது முதல் முன்னாள் அமைச்சர் ராஜா மற்றும் கனிமொழி, ரிலையன்ஸ் நிறுவனம் மற்றும் பெரும் கார்ப்ரேட் நிறுவன இயக்குனர்கள் என 14 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பல மாதங்களாக சிறையிலிருந்த இவர்கள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். தற்போது ராஜாவும் அவரது உதவியாளர் ஒருவரும் திகார் சிறையில் உள்ளனர்.

இந்நிலையில் சி.பி.ஐ தனது மூன்றாவது குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது. இதன்படி பெரும் நிறுவனமான எஸ்ஸார் குரூப் துணை சேர்மன் ரவிரூயூயா, இயக்குநரான அனுஷ்யுமான் ரூயூயா, விகாஸ் சரப் மற்றும் லூப் டெலிக்கொம் நிறுவனத்தை சேர்ந்த கிரன் கெய்தான், ஐ.பி.கெய்தான் ஆகிய 5 பேர் மீது இன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மீது இந்தியத் தண்டனையின் கீழ் வழக்கு பதிவு நடைபெற்று விசாரணை நடத்தப்பட்டிருக்கின்றது.

இவர்கள் ஸ்பெக்ட்ரம் குறைந்த விலைக்கு வாங்கி அதிக இலாபம் ஈட்டியுள்ளனர். இதில் எங்களுக்கு சம்பந்தம் இல்லை என நிறுவனம் தெரிவிக்கின்றது.

சட்டமுறைப்படி தான் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளனர். இன்னும் பல குற்றப் பத்திரிகைகள் இருக்கும். இதனையடுத்து இதில் முன்னாள் அமைச்சர் தயாநிதி சேர்க்கப்படுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் டில்லி மற்றும் மும்பையில் உள்ள வோடபோன் மற்றும் பாரதி ஏர்டெல் நிறுவன அலுவலங்களில் சி.பி.ஐ.சோதனை நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முல்லைப் பெரியாறு அணை தொடர்பில் பிரதமருக்கு கடிதமெழுதினார் கலாம்

(சென்னை)

முல்லைப்பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் கடிதம் எழுதியுள்ளார்.

அதில் கூறி இருப்பதாவது, கேரளாவுக்கு அதிக மின்சாரம், தமிழகத்துக்கு அதிக தண்ணீர், இரண்டு மாநிலங்களுக்கும் பொதுவான அணை பாதுகாப்பு, இந்த மையக்கருத்து கொண்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சி மேற்கொள்ள வேண்டும். முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டுவதற்கு பதிலாக அணையை பலப்படுத்தும் வகையில் தற்போதுள்ள அணையில் 162 அடி உயரத்துக்கு பக்கவாட்டு சுவர் எழுப்பலாம்.

நாட்டில் உள்ள அனைத்து அணைகள் இவற்றின் கட்டுப்பாடுகளையும் பராமரிப்பையும் இராணுவத்தின் வசம் ஒப்படைக்க வேண்டும். இதன் மூலம் நதிகள் இணைப்பு போன்ற நடவடிக்கைகளின் போது எந்த பிரச்சினையும் ஏற்படுவதில்லை.

இப் பிரச்சினையால் இரு மாநில உறவும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது . இருமாநில மக்களும் அமைதிகாத்து தேசிய ஒருமைப்பாட்டை நிலை நாட்ட வேண்டும் என அக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# அவுஸ்திரேலிய இராணுவ வீரர்களை விரைவில் வாபஸ் பெறுவதற்கு திட்டம்

(கான்பெரா)

ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படையில் அவுஸ்தி ரேலியாவை சேர்ந்த ஆயிரத்து 500இராணுவ வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.அங்கு நிலைமை ஓரளவு சீரடைந்து வருவதால் நேட்டோ படைகள் 2014 ஆம் ஆண்டில் வாபஸ் பெற திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் அவுஸ்திரேலியா தனது வீரர்களை அதற்கு முன்னதாக 2013 ஆம் ஆண்டிலேயே வாபஸ் பெற திட்டமிட்டுள்ளது. இதை அந்நாட்டின் இராணுவ மந்திரி ஸ்டீபன் சுமித் உறுதி செய்தார். மேலும் அவர் கூறுகையில், 2014 ஆம் ஆண்டுக்கு முன்னதாக படை வாபஸ் இருக்கும். ஆனால் நிலைமைகளை கருத்தில் கொண்டு அதை நிறைவேற்றுவோம் என அவர் தெரிவித்தார். (அ-2)

# பின்லேடன் மீதான தாக்குதலை பாக். முன்பே அறிந்திருந்ததா?

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள அபோதாபாத்தில் ஒரு வீட்டில் பதுங்கி இருந்த அல்கொய்தா தலைவர் ஓசாமா பின்லேடனை கடந்த மே மாதம் 2 ஆம் திகதி அமெரிக்க படையினர் சுட்டுக் கொன்றனர். அப்போது இது பற்றி கருத்து தெரிவித்த இங்கிலாந்தில் உள்ள பாகிஸ்தான் தூதுவர் வாஜித் ஷாம்சுல் ஹசன் அமெரிக்க படையின் தாக்குதல் பற்றி எங்களுக்கு முன் கூட்டியே தெரியும் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் ஓசாமா பின்லேடனின் மரணம்பற்றி விசாரணை நடத்தி வரும் அமெரிக்க விசாரணை குழு இந்த மாத இறுதியில் நடைபெறும் விசாரணையின் போது வாஜித் ஹசன்நீதிமன்றில் ஆஜராகி சாட்சியம் அளிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது. (அ-2)

# சிரிய இராணுவத்தினருக்கு எதிராக வியாபாரிகளும் போராட்டத்தில்...



சிரியாவில் இராணுவத்திற்கு எதிராகவியாபாரிகளும்கடைகளைஅடைத்து போராட்டத்தில் குதித்தனர். பல இடங்களில் கடும் துப்பாக்கி சண்டை இடம்பெற்றது.

**சிரியாவில் கலவரம்**

சிரியாவில் பிரதமர் ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சி நடந்து வருகின்றது. இதை ஒடுக்க இராணுவம் ஏவி விடப்பட்டதால் கடும் துப்பாக்கி சண்டை நடக்கிறது. கடந்த 9 மாதங்களாக இந்த போராட்டம் நடைபெறுகின்றது. சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி விட்டனர்.

இதன் எதிரொலியாக அரபு நாடுகள்சமரசதிட்டம் அறிவித்தன. அதை ஏற்றுக் கொண்ட பிரதமர் ஆசாத் பின்னர் அமுல்படுத்தவில்லை. இதனால் எதிர்ப்பு போராட்டம் வலுத்து வருகின்றது.

**கடைகள் அடைப்பு**

இந்த நிலையில் திடீர் திருப்பமாக இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக வியாபாரிகளும் போராட்டத்தில் குதித்தனர். தலைநகர் டமாஸ்கஸ் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் அனைத்து கடைகள், தொழில் நிறுவனங்களை மூடி போராட்டத்தில் குதித்தனர்.இது பற்றி சிரிய எதிர்க்கட்சி குழுவின் உறுப்பினர் ரிமா பிலை கான் கூறுகைளில்,

சிரியாவில் முழு ஆதரவுடன் கடைகள் அடைக்கப்பட்டு இருப்பது இதுவே முதல்முறையாகும் என தெரிவித்தார்.

மேலும் நாட்டின் தெற்கு எல்லைப் பகுதியில் இருக்கும் ஐஸ்ரா உள்ளிட்ட பல இடங்களில் கடும் துப்பாக்கி சண்டை நடைபெறுகின்றது.

குண்டு வெடிப்பு சத்தம் ஒலித்தபடியே இருக்கின்றது. எனவே வீடுகளில் முடங்கி இருக்கின்றோம் என்று பொது மக்கள் தெரிவித்தனர்.

**சமரசம் ஏற்கப்படுமா?**

இதற்கிடையில் அரபு நாடுகளில் சமரசதிட்டத்தை சில நிபந்தனையுடன் ஏற்க தயாராக இருப்பதாக சிரிய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அரபு நாடுகளின் வெளியுறவு துறை மந்திரிகள் கூடி விவாதிக்க இருக்கின்றார்கள்.

சிரியாவில் கடந்த சில மாதங்களாக நடந்த போராட்டத்தில் 5ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளதாக மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை ஐ.நா.வில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அந்நாட்டு ஜனாதிபதி மீது சர்வதேச மனித உரிமை நீதிமன்றில் வழக்கு தொடரப்பட வேண்டும். கொல்லப்பட்ட 5 ஆயிரம்பேரில் 300 இற்கும் மேற்பட்டோர் குழந்தைகள் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# ஆரோக்கியத்துடன் உள்ள சர்தாரி பதவி விலகப்போவதில்லை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரிக்கு பக்கவாதம் எல்லாம் இல்லை. அவரது உடல்நிலை தேறி வருகிறது.சர்தாரி பதவி விலகப் போவதாக வந்த தகவல்களில் உண்மையில்லை என்று அந்நாட்டு பிரதமர் யூசுப் ரசா கிலானி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.


பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரிக்கு இலேசன மாரடைப்பும், பக்கவாதமும்,முகவாதமும் ஏற்பட்டதால் தான் அவர் சிகிச்சைக்காக டுபாய் சென்றுள்ளார் என்றும் உடல்நிலை காரணமாக அவர் பதவி விலகக் கூடும் என்றும் தகவல்கள் வந்தன. இதை பாகிஸ்தான் பிரதமர் கிலானி மறுத்துள்ளார். மேலும் பாகிஸ்தான் இராணுவம்சர்தாரியை பதவியைவிட்டு தூக்க சதித் திட்டம் ஏதும் தீட்ட வில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து கிலானி செய்தி சேவைக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

சர்தாரி இதய நோய்க்கு சிகிச்சை பெறவே டுபாய் சென்றுள்ளார். அவரது உடல்நலம் தேறி வருகிறது.அவர் 2 வாரம் நன்றாக ஓய்வெடுத்துவிட்டு நாடு திரும்புவார். சர்தாரி இராஜினாமா கடிதம் ஏதும் எழுதவில்லை. அவர் எதற்காக இராஜினாமா கடிதம் எழுத வேண்டும். அவருக்குத்தான் நாடாளுமன்றத்தில் அமோக ஆதரவு உள்ளது. இராணுவம் ஆட்சியை கவிழ்க்கசதி செய்வதாக வந்த செய்திகள் வெறும் வதந்திகள் தான் என்றார்.

அல்கொய்தா தலைவர் பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர் பாகிஸ்தான் இராணுவம் தனது ஆட்சியை கவிழ்க்க சதி செய்வதாகவும் தனக்கு உதவவேண்டும் என்று கோரி சர்தாரி அமெரிக்க உயர் அதிகாரிகளுக்கு எழுதிய கடிதம் வெளியாகி பெரும் பிரச்சினையாகி விட்டது.இது குறித்து அவர் நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்கவிருந்தார்.ஆனால் அதற்கு முன்பு அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு டுபாய் கொண்டு செல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)



அமெரிக்க வோஷிங்டனில் அந்நாட்டு ஜனாதிபதி ஒபாமாவை (வலது) ஈராக் பிரதமர் நவ்ரி அல் மாலிகி சந்தித்து கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# ஏமன் நாட்டின் சிறையில் இருந்த அல்கொய்தாவினர் தப்பியோட்டம்

ஏமன் நாட்டின் தென்பகுதியில் உள்ள ஏடன் நகரில் சிறை வைக்கப்பட்டிருந்த அல்கொய்தா இயக்கத்தைச் சேர்ந்த 12 பேர் நேற்று முன்தினம் தப்பிச் சென்றுள்ளனர்.

ஏமனில் தற்போது ஜனாதிபதி அப்துல்லா சலேவுக்கு எதிரான போராட்டம் தீவிரம் அடைந்துள்ளது. வளைகுடா நாடுகள் கூட்டுறவு அமைப்பின் பரிந்துரைப்பின் படி சலே மீது எதிர்காலத்தில் எவ்வித வழக்குகளும் பதியப்படமாட்டாது.

இதற்கு எதிர்க்கட்சிகளும் ஒப்புக் கொண்டு இரு நாட்களுக்கு முன்பு இடைக்கால அரசு பதவியேற்றது. ஆனால் இந்த ஒப்பந்தத்தை மக்கள் ஏற்கவில்லை.

இந்நிலையில் நாட்டின் தென் பகுதியில் உள்ள ஏடன் நகரில் உள்ள சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த அல்கொய்தா இயக்கத்தைச் சேர்ந்த 12 பேரும் வேறு இருவரும் சேர்ந்து ஆறு மீற்றர் நீளம் பூமிக்கடியில் வளை தோண்டி அதன்மூலம் தப்பித்து ஓடி விட்டனர்.

தப்பியோடியவர்கள் ஒரு வங்கியை கொள்ளையடிக்க முயற்சி செய்துள்ளதோடு மட்டுமல்லாமல் பாதுகாப்பு படையினரைத் தாக்கியுள்ளனர்.

ஏமன் தென்பகுதியில் அல்கொய்தாவினரின் ஆதிக்கம் அதிகம் உண்டு.

நான் பதவி விலகினால் அல்கொய்தாவின் பிடி அதிகரித்து விடும் என சலே கூறி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கடாபியின் மகனுக்கு உதவிய கனேடிய பெண் கைது

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபியின் மகன் மெக்சிகோ வருவதற்கு உதவி செய்ததாக சிந்தியா வேர்னியர் என்ற கனேடிய பெண் கைது செய்யப்பட்டார்.

அவர் வீடு,மனை விற்பனை, வாடகை விடுதி என்று பல தொழில்களைச் செய்து வந்த போது கடாபியின் மகனான அல் சாதி என்பவர் சட்டத்திற்கு புறம்பாக மெக்சிக்கோ வருவதற்கு உதவிகள் செய்ததற்காக கைது செய்யப்பட்டார்.

மெக்சிக்கோ அதிகாரிகள் கடந்த நவம்பர் மாதம் 10 ஆம் திகதி இவரை கைது செய்தனர். இது குறித்து மெக்சிக்கோவின் உள்துறை அமைச்சர் கூறுகையில்,அல்சாதி மெக்சிக்கோ வருவதற்கு வேனியர் தான் உதவி புரிந்துள்ளார் என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

மேலும் வேனியருக்கு உதவி புரிந்த இரு மெக்சிக்கோ நாட்டவர்களும் கைது செய்யப்பட்டனர். (அ-2)

# ஈரான் ஜனாதிபதி மீது சப்பாத்து வீச்சு

ஈரான் ஜனாதிபதி அகமதி நியாத் மீது இளைஞர் ஒருவர் சப்பாத்தினை வீசிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதிர்ஷ்டவசமாக அந்தச் சப்பாத்து அவர் மீது படவில்லை. டெக்ஸ்டைல் மில்லில் வேலைபார்த்த அவன் சமீபத்தில்தான் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது என்பதும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஈரானில் வேலையின்மை விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. வேலையில்லாதவர்களுக்கு அரசின் உதவிகள் சரிவர கிடைப்பதில்லை. என்று அவன் குற்றம் சாட்டியுள்ளான்.

ஈரான் நாட்டில் வேலையின்மை விகிதம் 11 சதவீதமாக பதிவாகி உள்ளது என சமீபத்தில் அரசு கூறியிருந்த நிலையில் ஜனாதிபதி மீது தாக்குதல் முயற்சி நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மந்திரவாதி பெண்ணுக்கு தலைதுண்டித்து தண்டனை- சவுதி அரேபியாவில் சம்பவம்

சவுதி அரேபியாவில் வடக்கு ஜாவ்ப் மாகாணத்தை சேர்ந்த பெண் அமீனாபிந்த் அப்துல்கலாம் நாசர். இவர் பில்லிசூனியம் மற்றும் மாந்திரீகம் செய்து வந்தார். இதனால் பலர் பாதிக்கப்பட்டனர். இது குறித்து பொலிசில் புகார் செய்யப்பட்டது. சவுதி அரேபியாவில் மாந்திரீகத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கைது செய்யப்பட்ட அமீனா மீது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி குற்றம் சாட்டப்பட்ட அமீனாவின் தலையை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்ற உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அவர் தலைதுண்டிக்கப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்டது.இந்த ஆண்டு மட்டும் இது வரை 73 பேருக்கு தலையை கொய்து தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

காலத்தின் மதிப்பு உனக்குத் தெரியுமா? அப்படி யானால் வாழ்வின் மதிப்பும் தெரியும்.

– ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழினத்தை வழிப்படுத்தத் தவறிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஒரு பெரியவர் எம் தமிழினத்தின் பெருமைகள் பலவற்றை கூறினார். அவர் கூறியபோது. இறுமாப்பாக இருந்தது.

எனினும் எங்கள் நிதர்சனத்தை நினைத்த போது,- அட! தமிழன் நொந்துகெட்டு நூலாகிப் போனமைக்கு பழம் பெருமை பேசிக் காலம் கடத்தியதும், பஞ்சாங்கத்தில் பல்லி சொற்பலன் பார்த்ததும்தான் காரணம் என்று நினைத்துக் கொண்டேன்.

ஐயா! இதுவரை தமிழனின் பெருமைகளை தாங்கள் பேசக்கேட்டோம். ஒரு சந்தேகம் என்றேன்.

சந்தேகம் யாதோ! என்றார் அந்தப் பெரியவர்.

தமிழ் மக்களின் தலைவன் யார்? என்றேன். சிறிது நேரம் அங்கும் இங்கும் பார்த்தார். நம்மையும் முழித்துப் பார்த்தார். இது குறுக்கால போறபுத்தி, இதற்கெல்லாம் என்னால் பதில் கூற முடியாது என்றார்.

சரி! தலைவன் என்று யாரையும் பெயர் குறித்துக் குறிப்பிட முடியாது என்றால், அரசியல் தலைமை உண்டா? என்றேன். அரசியலே இல்லை. பின்பு அரசியல் தலைமையா? என்றார் அவர். கூட்டத்தில் ஒரே சிரிப்பு.

சரி! தலைவனும் இல்லை. அரசியல் தலைமையும் இல்லை. தமிழ்மக்களை அரசியலில் வழிப்படுத்துவதற்காக யாரேனும் உளரா? என்றேன்.

எதையோ இழந்தது போன்ற ஒரு உணர்வை அந்தப் பெரியவரின் முகத்தில் கண்டோம். கூடவே மௌனம்.

குறியீட்டு மொழியாகத் தலையை பக்கவாட்டில் அசைத்துக் கொண்டார்.

அதுதான் எங்கள் இனத்தின் பலவீனம் என்ற வார்த்தைகள் அவரின் மௌனத்தை கலைத்துக்கொண்டன.

எங்களை வழிப்படுத்துவதாக இருந்தால், அதனை யாழ்ப்பாண பல்கலைக்கழகமே செய்திருக்க வேண்டும். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அப்படியான சிந்தனையை கொண்டிருந்ததில்லை.

ஒரு சில பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் தமிழினம் பற்றிச் சிந்தித்திருந்தாலும் பல்கலைக்கழகம் என்ற சமுத்திரத்தில் இருக்கக் கூடிய பல்வகையினர் மத்தியில் அவர்களால் எதுவுமே செய்ய முடியவில்லை.

இதற்கு எங்கள் பல்கலைக்கழக மாணவர்களும் ஏதோ ஒரு வகையில் காரணம்தான். தேவையில்லாத பகிஷ்கரிப்பு போராட்டம். சக மாணவன் என்பதற்காக உண்மையை, நீதியை வெட்டிப் புதைக்க வேண்டும் எனக் கோரும் அறியாமை, தேவையில்லாமல் நிர்வாகத்திற்குத் தலையிடிகொடுக்கும் பொறுப்பற்ற செயல் இவற்றினால் தேவையுள்ளதை செய்ய முடியாமல் போயிற்று. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனித் தமிழ்ப் பல்கலைக்கழகம். இங்கு இருக்கக் கூடியவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் மேற்கொண்ட ஆய்வுகள், பட்டப்படிப்புகள் ஏதேனும் எங்கள் மண்ணில் அமுலாகிக் கொண்டதா? அரசியலில் மட்டுமல்ல, திட்டமிடல் தொடக்கம் எதிர்காலத் தமிழர் தாயகத்தை நிர்மாணிப்பது வரையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வழிகாட்டல் காத்திரமானதாக இருந்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புத்திஜீவிகள் தயாரித்த திட்டம்-கட்டுமானம் இதை எவராலும் உடைத்தெறிய முடியாதென்ற நிலைமையே இருந்திருக்க வேண்டும்.

ஆனால் அவர்களோ! இதில் தங்களுக்கு எந்தப்பொறுப்பும் இல்லையென்ற நினைப்போடு இருக்கிறார்கள். அவர்கள் அப்படியே இருக்கட்டும்.

பேராசிரியர் றொகான் குணரட்ண, தமிழர்கள் தலை நிமிராமல் இருப்பதற்காக பயங்கரவாதம் என்ற பெயரில் திட்டம்தீட்டட்டும்.

எங்கள் தலைவிதி இதுவென்று நாம் எங்களைத் தேற்றிக்கொள்வோம். அவ்வளவுதான் என்றார் அந்தப் பெரியவர்.

# பிரான்ஸ் குடியுரிமை பெற்றவர்கள் இலங்கையில் உள்ள குடும்பத்தினரை பிரான்ஸுக்கு அழைக்கும் வாய்ப்பு

## சாதகமாக பரிசீலிக்கப்படும் என்கிறார் பிரான்ஸ் தூதுவர்

யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் பிரான்ஸ் நாட்டில் சட்ட பூர்வமான பிரஜையாக இருந்தால் அவர்கள் இலங்கையிலுள்ள தமது குடும்ப அங்கத்தவர்களையும் தங்களுடன் பிரான்ஸுக்கு அழைக்க விரும்பினால் அந்த கோரிக்கையை பற்றி சாதகம்மாக பரிசீலிக்கப்படும் என இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர், யாழ்.மாவட்ட அரச அதிபருடனான சந்திப்பின் போது தெரிவித்தார்.

பிரான்ஸ் தூதுவருக்கும் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது. இந்தச் சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பிரான்ஸ் தூதுவர் குடாநாட்டில் சகல விடயங்கள் தொடர்பாக அறிவதிலும் முழுமையாக கவனம் செலுத்தினார். இங்கு நேரடியாக இடங்களை பார்வையிட்ட அவர் அரசின் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்ற போதும் தனியார் கட்டமைப்புக்கள் ஊடான அபிவிருத்திகள் இடம் பெறவில்லை எனத் குறிப்பிட்டார்.

மேலும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன? மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகள் தொடர்பாக மக்களிடமிருந்து ஏதாவது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்றும் அவர் கேள்விகளை எழுப்பினார்.

அத்துடன் பிரான்ஸில் சட்டரீதியான பிரஜையாக உள்ள இலங்கையர்கள் இங்கு தமது குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ விரும்பினால் விண்ணப்பிக்கலாம். அதனை தமது தூதரகம் சாதமாக பரிசீலிக்கும் என்றும் தெரிவித்தார் என்றார் அரச அதிபர். (அ-2)

# மெனிக்பாம் முகாமில் அஜித்குமார எம்.பிக்கு அனுமதி வழங்கப்படாமைக்கான காரணம்?

## விளக்கம் கேட்கிறார் சபாநாயகர்

(கொழும்பு)

ஜே.வி.பியின் மாற்றுக் குழுவை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார வவுனியா மெனிக்பாம் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமுக்குச் செல்ல அனுமதிக்கப்படாமைக்கு காரணம் என்னவென்பதை அறிய விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு தான் பணிப்புரை விடுக்கவுள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எந்தவிடயம் குறித்து தகவல் பெறக்கூடியதாக இருக்க வேண்டும் என சபாநாயகர் கூறினார்.

மேற்படி நலன்புரி கிராமத்துக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினருக்கான சிறப்புரிமை மறுக்கப்பட்டுள்ளதாக அஜித் குமார எம்.பி. கூறியதையடுத்தே சபாநாய கர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீர கோன் கூறியும் மெனிக்பாமிலுள்ள பாதுகாப்பு அதிகாரி தனக்கு அனுமதி வழங்கவில்லை என அவர் கூறினார்.

நான் அமைச்சருக்கு இவ்விடயம் குறித்து அறிவித்தேன். அவர் பாதுகாப்பு அதிகாரி யுடன் தொடர்பு கொண்டபின் நான் பயணத்தை தொடர முடியும் என எனக்குத் தெரிவித்தார். ஆனாலும் அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் என் னை நலன்புரி முகாமுக்குச் செல்ல அனுமதிக்கவில்லை என அவர் கூறி னார்.

இப்பயணத்தில் தன்னுடன் வந்திருந்த கட்சி செயற்பாட்டாளர்களான லலித் குமார் வீரராஜ், சி.குகன் ஆகியோர் கடத்தப்பட்டுள்ளார்கள் எனவும் அவர்கள் தற்போது எங்கிருக்கின்றார்கள் எனத் தெரியவில்லை என வும் அஜித் எம்.பி தெரிவித்தார். (அ-2)

# மக்கள் பங்கேற்புடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/104 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்ட மிடல் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.நீராவியடி சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ்.மாநகரசபை முதல்வர் கேட்டுள்ளார். (பூ)

# தென்னங்கன்றுகள் வழங்கல்

(சாவகச்சேரி)

திவி நெகும திட்டத்தினால் தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்த 3 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச தென்னங் கன்றுகள் வழங்கப்படவுள்ளது.

தெங்கு அபிவிருத்தி சபையினரால் கிளிநொச்சி நாற்று மேடையில் இருந்து கொண்டுவரப்பட்ட 3 ஆயிரம் தென்னங்கன்றுகளே தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஊடாக விநியோகிக்கப் படவுள்ளது. (அ-3-29)

# வெற்று நிலங்களை கையேற்க எதிர்ப்பில்லை

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

பயிரிடப்படாத நிலங்களை அரசாங்கம் கையேற்பதற்கு தாம் எதிர்ப்பினை வெளியிடப் போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் இதனை தெரிவித்துள்ளார்.

இதனிடையே தாம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் உள்ளடங்கிய அறிக்கை ஒன்றை இன்றைய தினம் ஜனாதி பதியிடம் கையளிக்கவுள்ளதாக இலங்கைத் தோட்ட சேவையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## ஒவ்வொரு உயிரிலும் கடவுள்



சுயநலமற்ற தன்மையே கடவுள் ஆகும். ஒருவன் செல்வந்தனாக வாழ்ந்தபோது சுயநலம் இல்லாதவனாக இருந்தால் அவனிடம் கடவுள் இருக்கிறார்.

ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழியைக் கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்குதல். மனிதனாக பிறந்ததற்கு வாழ்ந்து சென்ற பின்னும் ஏதாவது அடையாளத்தை விட்டுச் செல்லுங்கள்.

உங்களுடைய நரம்புகளை முறுக்கேற்றுங்கள் . காலம் எல்லாம் அழுது கொண்டிருந்த போதும் இனி அழுகை என்ற பேச்சே இருக்கக்கூடாது. சுய வலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள். தூய்மையாக இருப்பது மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் தான் எல்லா வழிபாடுகளின் சாரமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளர்களிடமும் இறைவனை காண்பவனே உண்மையான வழிபாடு செய்பவன் ஆவான்.

கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு கடவுள் ஒருவர் உலகில் இல்லை.

# வடக்கிலும் தெற்கிலும் ஊடக சுதந்திரம் பறிபோயுள்ளது

## சபையில் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஊடகவியலாளர்களுக்கு அரசாங்கத்தினால் கொடுக்கப்படவுள்ள 12 இலட்சத்தில் வெள்ளை வான்களைக் கொள்வனவு செய்து அவற்றினூடாக ஊடகவியலாளர்கள் பாதுகாப்பான முறையில் பயணங்களை மேற்கொள்ள வழி சமைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் வைத்து அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடத்தல்சம்பவங்களுக்குவெள்ளை வான் பயன்படுத்தப்படுகிறது என்றொரு நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய சூழலில் வடக்கிலும் சரி தெற்கிலும் சரி ஊடக சுதந்திரம் பறிபோயுள்ளது. ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவுக்கு என்ன நிகழ்ந்தது என்று இதுவரையில் தெரியாதுள்ளது.

இணையத்தளங்களைதடைசெய்து ஊடக சுதந்திரத்துக்கு தீங்கு விளைவிக்கின்றனர். அதே சமயம் ராஜபோல் அபேநாயக்க மற்றும் பிரெட்ரிகா ஜேன்ஸ் ஆகியோர் ஊடகத்துறைக்கு அகௌரம் செய்கின்றனர் என்றும் ரணில் விக்கிரமசிங்கமேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வடபகுதிக்கான ரயில் சேவை பிற்போடப்பட்டுள்ளது

## ரயில்வே அத்தியட்சகர் தெரிவிப்பு

வடபகுதிக்கான மார்க்கத்தில் ரயிலொன்று தடம் புரண்டமையினால் நேற்று காலை போக்குவரத்தை மேற்கொள்ளவிருந்த 3 ரயில்களின் சேவை பிற்போடப்பட்டுள்ளது.

வடபகுதிக்கான ரயில் மார்க்கத்தில் நேற்று முன்தினம் மாலை மற்றும் இரவு வேளைகளில் சேவையில் ஈடுபடும் 3 ரயில்களின் சேவைகள் இரத்து செய்யப்பட்டதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ. ஆர்.ரத்நாயக்க குறிப்பிட்டார்.

தம்புத்தேகம மற்றும் செனரத்கம ரயில் நிலையங்களுக்கு இடையே நேற்றுமுன்தினம் காலை இந்த ரயில் தரம்புரண்டுள்ளது.

ரயில் தடம்புரண்டமை தொடர்பில் ரயில்வே இணைப்பதிகாரியால் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அத்தியட்சகர் கூறினார்.

குறித்தபகுதியில் நிலவும் பலத்த மழையுடன் காலநிலையால் திருத்த நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளதாக எல். ஏ. ஆர்.ரத்நாயக்க குறிப்பிட்டார். (அ-2)


# பொதுக்கூட்டம்

முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்.

அன்புடையீர், மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் 15.12.2011 நாளை வியாழக்கிழமை கரைச்சி பிரதேசசபை கேட்போர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி சங்கத்தில் பதிவுள்ள முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டம். (சி-5185)


# தலைமைப் பதவிக்கு போட்டியிடுவது தொடர்பில் கருஜயசூரிய ரணிலுக்கு தெரிவித்திருக்க வேண்டும்

## ஜயலத் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தலைமைப்பதவிக்கு போட்டியிடுவது குறித்து முதலில் கட்சி தலைவர் ரணில் விக்கிர சிங்கவிடம் பிரதி தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்திருக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கட்சி தலைமை பதவிக்கு போட்டிடுவது குறித்து முதலில் கட்சி தலைவரும் அறிந் திருக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலைமை பதவிக்காக போட்டியிடுவது குறித்து கருஜயசூரிய இதுவரையில் உத்தி யோகபூர்வமாக எதனையும் அறிவிக்க வில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இவர் கட்சித் தலைமைப்பதவிக்காக போட்டி யிடுவது குறித்து ஊடகங்களின் மூலமே அறிந்து கொண்டதாக குறிப்பிட்டுள் ளார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி கட்சியின் செயற் குழு கூட்டத்தில் கட்சி தலைமைப் பதவி குறி த்து தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சரத் பொன்சேகாவை விடு தலை செய்வத ற்கான மகஜரில் பெருமள விலானவர்கள் கையொப்பமிட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல இலட்சத்துக்கும் மேற்பட்ட கையொ ப்பங்களை திரட்ட முடியும் எனவும் மகஜர் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் ஒப்படைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


நத்தார்- புதுவருடத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு
மாபெரும் விலைக் கழிவு

SILVER SHIELD ONE DOZEN NYLON STRETCH SOCKS 100% NYLON SOCKS

கடந்த 30 ஆண்டுகளாக யாழ். நகர் மக்களின் தரச்சிறப்புமிக்க காலுறைகள்(SOCKS)
SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும், சிறியோர் முதல் பெரியோர் வரை, சகல தரத்திலும், சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள



குறிப்பு:- பாடசாலைகளுக்கும், மொத்த வியாபாரிகளுக்கும் மேலதிக கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீ முருகன்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5392
(சி-5186)


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பட்டிப்பூ

Botanical Name:-Vinca rosea
Family:-Apocynaceae
Eng: -Rose periwinkle
Sinh:- Mini-mal


(சென்ற வார தொடர்ச்சி...)

❀ இதன் இலைகளில் 35 கிராம் எடுத்து 400 மில்லி நீர் விட்டு 1/4 பங்காக காய்ச்சி 60 மில்லி, காலை, மாலை அருந்த நீரிழிவு நோய் கட்டுப்படும்.

❀ இதன் வேர்களை சேகரித்து சிறுசிறுதுண்டுகளாக்கி நன்கு கழுவி 25 கிராம் அளவு 400 மில்லி நீர் விட்டு 1/4 பங்காக கொதிக்கக் காய்ச்சி 30 மில்லி அளவு குடிக்க சீதக்கழிச்சலை குணமாக்கும். பெண்களுக்கு மாதவிடாய்க்காலத்தில் ஏற்படும் இரத்தப் போக்கை சீராக்கும்.

❀ புதிதாக பறித்த பூக்களை நன்கு கழுவி அம்மியில் வைத்து அரைத்து பூக்களின் எடைக்கு 3 பங்கு சுத்தமான தேன்விட்டு, ஜாடியில் போட்டு தினசரி சூரியஒளி படும்படி சில வாரங்கள் வைத்து எடுக்கவும். வளர்ந்தவர்கள் 1தொடக்கம் 2 தேக்கரண்டி அருந்த நாட்பட்ட மலச்சிக்கல் நீக்கி சிரமமின்றி இலகுவாக மலக்கழிவு ஏற்படும்.

❀ சித்தமருத்துவ நூல்களில் ஆரம் பநிலையில் உள்ள புற்று



பட்டிப்பூ

நோய்களில்,
பட்டிப்பூ இலை 1 கைப்பிடியளவு
பட்டிப்பூ வேர் 1 கைப்பிடியளவு
வெண்கொடிவேலி வேர்ப்பட்டை -3 கிராம்
வாதுளையரிசி -20 கிராம்
பெருஞ்சீரகம் -20 கிராம்
மிளகு- 20 (எண்ணிக்கை)
சுக்கு -2 கிராம்
மல்லி -20 கிராம்

இவற்றை சுத்தமான மண்பாத்திரத்தில் எடுத்து ஒரு லீற்றர் நீர் சேர் த்து 100 மில்லி ஆக வற்றக் காய்ச்சி வடிகட்டி காலை, மாலை வெறும் வயிற்றில் 50 மில்லி அளவு கருப்பட்டி சேர்த்து அருந்தலாம் என கூறப்பட்டுள்ளது.

மேலதிக ஆய்வுகள் இக்குடிநீர் வகைகளில் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமே.

உலகில் அதிகமாக நவீன சோதனை முறைக ளில் ஆராயப்பட்ட மூலிகை என்ற பெருமைபட்டிப்பூவிற்கு உண்டு.7 நாடுகளில் இதனை விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். 20ஆண்டுகாலம் நடந்த ஆய்வுகளின்படி தற்போது சுமார் 83 மருந்துச்சத்துக்கள் (Alkaloids) விஞ்ஞானிகளால் இப்பட்டிப்பூவில் கண்டறியப்பட்டுள்ளது. இதனை ஆராய்ந்த விஞ்ஞானிகளுள் செக்கோஸ்லேவேசியா நாட்டைச் சேர்ந்த ஜோசப் மொக்ரி (Joseph Mokry) என்பவர் குறிப்பிடத்தக்கவர்.

❀ இதன் வேரிலிருந்து பெறப்படும் (Vinblastine) எனும் மருந்துச் சத்து இரத்தப்புற்று நோயை கட்டுப்படுத்தவும்,இதன் வேரிலிருந்து பெறப்படும் மற்றுமோர் சத்தான (Vincristine) எனும் அல்கலொயிட்டு தோலில் வரும் புற்றுநோயை கட்டுப்படுத்துவதாகவும் ஆராய் ச்சியின் மூலம் தெரியவந்துள்ளது. இம் மருந்து தயாரிப்பிற்காக இந்தியாவிலிருந்து நித்தியகல்யாணி என அழைக்கும் பட்டிப்பூ செடியை ஒவ்வொருவருடமும் பெருவாரியாக ஏற்றுமதி செய்கிறார்கள். இது இந்தியாவை பொறுத்தவரை அந்நிய செலவாணி ஈட்டித்தரும் மூலிகையாகவும் கருதப்படுகிறது.


திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

# அவுஸ்திரேலிய சுற்றுப் பயணம் இளம் வீரர்களுக்கு நல்ல வாய்ப்பு

## அணித் தலைவர் தோனி கணிப்பு

(சென்னை)

இந்திய அணியில் இடம்பெற்றுள்ள இளம் வீரர்களின் திறமையை வெளிப்படுத்த அவுஸ்திரேலிய சுற்றுப் பயணம் நல்ல வாய்ப்பாக அமையும் என, இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் தோனி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா செல்லும் இந்திய அணி முதல் கட்டமாக நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலில் டெஸ்ட் எதிர்வரும் 26-ம் திகதி மெல்பேர்னில் ஆரம்பமாகிறது.

இத் தொடர் குறித்து, சென்னையில் பி.சி.சி.ஐ ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்ற இந்திய அணியின் தலைவர் தோனி கூறியதாவது,

கடந்த சில போட்டிகளில் விளையாடாத காரணத்தால், எனக்கு நல்ல ஓய்வு கிடைத்துள்ளது. இதன் மூலம் மனதளவில் உற்சாகமாகவுள்ளேன். அவுஸ்திரேலியத் தொடரை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். டெஸ்ட் அரங்கில் இந்திய அணி முதலிடத்தில் வரவேண்டுமேயானால் தொடர்ந்து நன்கு விளையாடுவது முக்கியம்.

2011இல் உலகக்கிண்ணத்தை கைப்பற்றியதற்கு தொடர்ந்து இரண்டரை ஆண்டுகளாக, சிறப்பாக விளையாடியதே காரணம். அவுஸ்திரேலிய அணியுடன் 4 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி விளையாடவுள்ளது. இதற்காக ஏற்கெனவே 7வீரர்கள்அவுஸ்திரேலியாவிற்கு சென்றுள்ளனர்.

இந்திய அணி அங்கு மேற்கொள்ளவுள்ள பயிற்சிகள் மூலம் அவுஸ்திரேலிய ஆடுகளத்தின் தன்மை நன்கு தெரியும். இங்குள்ள ஆடுகளம் பெரும்பாலும் வேகப் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக அமையும் என எதிர்ப்பார்க்கிறேன்.

**சவாலான தொடர்**

எந்த ஒரு அணியின் பலத்தையும் எளிதாக எடுத்துக்கொள்ள முடியாது. இந்திய அணி வீரர்களின் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்திலும் நன்கு முன்னேற்றமடைய பயிற்சிகள் அளிக்கப்படுவதன் மூலம், அவுஸ்திரேலிய அணிக்கு நாம் சவாலாக மாறலாம்.

மறுபடியும் சகீர்கான் அணியில் இடம் பெற்றிருப்பது இந்தியாவிற்கு பலம் அளிப்பதாக உள்ளது. அஷ்வின், உமேஷ் யாதவ், ஆகிய வீரர்களும் சிறப்பாக விளையாடுகிறார்கள். இந்த அவுஸ்திரேலிய பயணம் இந்திய அணியில் இடம் பெற்றுள்ள இளம் வீரர்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பாக அமையும்.

அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தை பொறுத்த அளவில், இந்திய அணி வெற்றி பெறுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இருபது-20 போட்டி கடினமான ஒன்று. இதில், இந்திய அணி முன்னேற்ற மடைவதற்கு தேவையான பயிற்சிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு தோனி கூறினார்.

# நியூசிலாந்தில் கொண்டாட்டம்; அவுஸ்திரேலியாவில் திண்டாட்டம்

அவுஸ்திரேலிய அணியுடன்னான டெஸ்டில் பெற்ற வரலாற்று வெற்றியை நியூஸிலாந்து ரசிகர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். இங்கு முன்னதாகவே கிறிஸ்மஸ் வந்து விட்டதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை அவுஸ்திரேலிய ரசிகர்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். கடும் மோசமான தோல்வியென அங்குள்ள ஊடகங்கள் கடுமையாக விமர்சித்துள்ளன. அவுஸ்திரேலியா சென்ற நியூஸிலாந்து அணி 2போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

முதற் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது. ஹோபர்ட்டில் நடந்த இரண்டாவது டெஸ்டில் டக் பிரேஸ்வெல் வேகத்தில் அவுஸ்திரேலியா சரணடைய நியூசிலாந்து 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 26ஆண்டுகளுக்குப் பின் அவுஸ்திரேலிய மண்ணில் வெற்றியை பதிவு செய்தது. தவிர, தொடரை 1:1 என சமன் செய்தது.

**தேர்வாளர்கள் தவிப்பு:**

இத்தோல்வி அவுஸ்திரேலிய ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு பொன்டிங், மைக்கல் ஹசி போன்ற மூத்த வீரர்களை நீக்கிவிட்டு இளம் வீரர்களை சேர்க்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. இது குறித்த அவுஸ்திரேலிய அணி முன்னாள் தலைவர் ஆலன் போர்டர் கூறுகையில், பொன்டிங், மைக்கல் ஹசி ஆகியோர் மோசமான போர்மில் உள்ளனர் இவர்களில் யாராவது ஒருவரை நீக்க வேண்டும். என்றார்.


# கேள்வி அறிவித்தல் 2012

## கரைச்சிப்பிரதேச சபை கிளிநொச்சி

கரைச்சிப்பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க் காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிலையங்களை 01.01.2012 தொடக்கம் 31.12.2012ம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : அலுவலக நாட்களில் மு.ப. 8.30 - பி.ப. 3.00
14.12.2011 - 26.12.2011

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக்காலம் : 27.12.2011 மு.ப. 10.00 வரை

கேள்வி திறக்கப்படும் திகதி : 27.12.2011 மு.ப. 10.30 மணி

கேள்வி திறக்கப்படும் இடம் : கரைச்சிப்பிரதேச சபை தலைமை அலுவலகம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **தலைவர், கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி** என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி** என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையை கொண்டுவருதல் வேண்டும்.

| இல. | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப்பணம் (மீள பெறக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT, VAT நீங்கலாக மீளளிக்கப்பட மாட்டாது) | 2012ம் ஆண்டுக்கான ஆரம்பக் கேள்வித் தொகை (NBT, VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | கிளிநொச்சி பொதுச் சந்தை | 25,000.00 | 1000.00 | 1,961,000.00 |
| 02 | பரந்தன் பொதுச் சந்தை | 10,000.00 | 1000.00 | 428,000.00 |
| 03 | தர்மபுரம் பொதுச்சந்தை | 10,000.00 | 1000.00 | 386,000.00 |
| 04 | வட்டக்கச்சி பொதுச்சந்தை | 10,000.00 | 1000.00 | 184,000.00 |
| 05 | கிளிநொச்சி பொதுச்சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1000.00 | 360,000.00 |

நிபந்தனைகள்

1. உரியகாலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்து செய்யப்படும்.
2. கடந்த கால கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்ற தகுதியற்றவர்களாவர்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்வி சபைக்கு அதிகாரம் உண்டு.
4. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வாரகாலத்துக்குள் செலுத்திசபையுடன் ஒரு ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களை கரைச்சிப் பிரதேசசபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திலிங்கம் குகராஜா
தவிசாளர்,
கரைச்சிப்பிரதேச சபை,
கிளிநொச்சி.

(C-5189)


# போர்முலா கார் பந்தயத்தில் மீண்டும் 'தல' அஜித்!



அடுத்த ஆண்டுக்கான பார்முலா வன் கார் பந்தய போட்டியை அடுத்த ஆண்டு ஒக்ரோபர் 28ம் திகதி இந்தியாவில் நடத்துவது என முடிபு செய்யப்புட்டுள்ளது. புதுடில்லியில் நடைபெற்ற வேர்ல்ட் மோட்டார் ஸ்போர்ட் கவுன்சில் கூட்டத்தில் இம் முடிபு எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஜுன்டாட் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 30-ம் திகதி புதுடில்லி அருகே உள்ள நொய்டாவில் கிராண்ட் பிரிக்ஸ் கார் பந்தயப் போட்டி நடைபெற்றது. முதன்முறைாக இந்தியாவில் வெற்றிகரமாக நடத்தப்பட்டு பாராட்டுக்களையும் பெற்றது.

இதனையடுத்து அடுத்த ஆண்டும் இப் போட்டியை இந்தியாவில் நடத்துவது என முடிபு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 20 சுற்றுக்களைக் கொண்ட இந்த போட்டியின் 17வது சுற்று இந்தியாவில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஆண்டுக்கான முதல் போட்டி மார்ச் மாதம் 18ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் ஆரம்பமாகிறது. சீனா, ஸ்பெயின், பக்ரைன், கனடா, இங்கிலாந்து,ஜேர்மனி, ஹங்கேரி, பெல்ஜியம், சிங்கப்பூர், ஜப்பான், கொரியா, பிரேஸில் உட்பட பல்வேறு பகுதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் இந்தியா சார்பில் நரேன் கார்த்திகேயன் மற்றும் நடிகர் அஜித்குமார் மறுபடியும் களம்காண வாய்ப்புள்ளதாக அவரின் நெருங்கிய வட்டாரங்கள் சொல்லித் தெரிவித்துள்ளன.

# கிளிநொச்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கான அறிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் கடமையாற்றும் 233 ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கானதும் ஏனையவற்றினதும் சம்பள நிலுவைகள் எதிர்வரும் 16ம் திகதி தொடக்கம் கிளிநொச்சி கல்வி வலய நிதிக்கிளையில் வைத்து வழங்கப்படுமெனவும் பெயர் குறிப்பிட்ட ஆசிரியர்கள் அலுவலக நாட்களில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி காசோலைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் கணக்காளர் எ.கிரிதரன் அறிவித்துள்ளார். மிகுதியாகவுள்ள 95 ஆசிரியர்களுக்கான இறுதிக்கட்டக் கொடுப்பனவு கட்டுநிதி கிடைக்கப் பெற்றதும் உடனடியாக வழங்கப்படுமெனவும் கணக்காளர் அறிவித்துள்ளார்.

ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு:

எஸ்.வோஷிங்டன்(அக்கராயன் அ.த.க.பாடசாலை), பி.பாக்கிய சுகந்தி (கிளி.அக்கராயன் அ.த.க.பாடசாலை), எஸ்.தனேஸ்வரி (கிளி.அக்கராயன் அ.த.க. பாடசாலை), திருமதி பி.ராஜேந்திரன் (கிளி.அக்கராயன் அ.த. க.பாடசாலை),கே.அகல்யா (கிளி.அக்கராயன்அ.த.க.பாடசாலை), திருமதி ஜே.சிறிகரன் (கிளி.அக்கராயன் மகா வித்தியாலயம்), திருமதி யு.தேவானந்தன் (கிளி.அக்கராயன் மகா வித்தியாலயம்), திருமதி கே.ஏ.வேலாயுதம் (கிளி.அக்கராயன் மகா வித்தியாலயம்), திருமதி ரி.கனகசபாபதி (கிளி.அக்கராயன் மகா வித்தியாலயம்), கே.கனகலிங்கம் (கிளி.அக்கராயன்மகா வித்தியாலயம்), ஆர்.ஜெயபிரகாசம் (கிளி.அக்கராயன் மகா வித்தியாலயம்), என்.சண்முகலிங்கம் (அழகபுரி வித்தியாலயம்),என். சந்திரபோஸ் (கிளிஆனைவிழுந்தான் குளம் அ.த.க.பாடசாலை), திருமதி ரி.பாஸ்கரன்(கிளி.பாரதி வித்தி), திருமதி ஆர்.சந்திரகுமார் (கிளி.பாரதி வித்தி), எஸ்.பிரியங்கன் (கிளி.பாரதி வித்தி ), ஏ.நாகேஸ்வரி (கிளி.பாரதி வித்தி), கே.புனிதவதி (செல்லியதீவு அ.த.க.பாடசாலை), திருமதி ரி.சுதாகரன் (செல்லியதீவு அ.த.க.பாடசாலை), திருமதி ரி.சண்முகநாதன் (ஆனையிறவு அ.த.க. பாடசாலை); திருமதி எஸ்.சிவநாவலன் (ஆனையிறவு அ.த.க.பாடசாலை); இ.தனேஸ்வரன்(ஞானிமடம் அ.த.க.. பாடசாலை) திருமதி எ.சிவனேசன் (ஞானிமடம் அ.த.க.பாடசாலை எஸ்.சிங்கராஜா (ஞானிமடம் அ.த.க. பாடசாலை எஸ்.தினேஸ் (ஞானிமடம் அ.த.க.பாடசாலை

கே.ஆனந்தராஜ்.(கிளி.இந்துக் கல்லூரி); திருமதி ரி.சந்திரகுமார் (இரணைதீவு றோ.க.த.க.பாடசாலை); ஏ.ஜி.ஜெயசீலன்(இரணைதீவுறோ.க.த.க.பாடசாலை); ஜெ.நிசாகர்(இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை)திருமதி வி.நாகராஜ்(இரணைதீவு றோ.க. த.க. பாடசாலை); ஜி.ரவிக்குமார் (இயக்கச்சி அ.த.க. பாடசாலை ;எஸ்.மீனாம்பிகை (இயக்கச்சி அ.த.க. பாடசாலை); பி. செவ்வேள் (இயக்கச்சி அ.த.க.பாடசாலை); எஸ் சகுந்தலாதேவி இயக்கச்சி அ.த.க. பாடசாலை;பி.நடேசலிங்கம் (ஐயனார்புரம் அத.க.பாடசாலை); எம்.மகாபரன்(ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை

*(தொடரும்)*

# தலைவர் பதவிக்கு போட்டியிடுவதாக கரு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவரான கரு ஜயசூரிய, கட்சியின் தலைவர்பதவிக்குபோட்டியிடவுள்ளமை குறித்து கட்சியின் தலைமைக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடும் தனது விருப்பத்தை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கும் கடிதங்கள் மூலம் கருஜயசூரிய அறிவித்துள்ளதாக அவரின் நெருங்கிய வட்டாரங்கள் ஊடகங்களுக்கு தகவல் வழங்கியுள்ளன.

அண்மையில் நடந்த செயற்குழுக்கூட்டம் முடிந்த பின்னர் பொதுச் செயலாளர் அத்தநாயக்க ஊடகவியலாளர்களை சந்தித்தபோது கருஜயசூரிய தனக்கு மட்டும் இந்த விடயம் பற்றி அறிவித்ததாகவும் கட்சியின் தலைவருக்கு அறிவிக்கவில்லை என்றும் இதனால் இந்த கடிதத்தின் சட்ட வலு பற்றி தனக்கு சந்தேகம் உள்ளதாகவும் கூறினார்.

எனினும் இவ்விடயம் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைபீடத்துக்கு உரிய முறையில் அறிவிக்கப்பட்டுள்ளதாக கரு ஜெயசூரியவின் நெருங்கிய வட்டாரத்தகவல்கள் தெரிவித்துள்ளன. (பா)

# நாவாந்துறை சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை பெப்ரவரி 2-ம் திகதி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறையில் கிறீஸ் பூத சர்ச்சையைத் தொடர்ந்து இராணுவத்தினரால் பொதுமக்கள் தாக்கப்பட்டதாக குற்றம் சுமத்தப் பட்டு தாக்கல் செய்யப்பட்ட 61 அடிப்படை உரிமைமீறல் மனுக்கள் தொடர்பான வழக்கு விசாரணை யை உயர்நீதிமன்றம் பெப்ரவரி 2ஆம் திகதிக்கு நேற்று ஒத்திவைத் தது.

பிரதம நீதியரசர் ஷிராணி ஏ. பண்டாரநாயக்க, நீதியரசர்கள் என். ஜி. அமரதுங்க, கே.ஸ்ரீபவன் ஆகி யோர் முன்னிலையில் இம்மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதையடுத்து அடுத்த விசாரணை பெப்ரவரி 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாரர்களில் ஒருவரான இருதயநாதன் வீனஸ் ரெஜி, தனது மனுவில் பிரதிவாதிகளாக பாதுகாப் புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜயசூரிய, பாதுகாப்பு படை களின் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்க, பொலிஸ்மா அதிபர் என். இலங்ககோன், இராணுவத்தின் 51 ஆவது படையணித் தளபதி ஜாக வேல்கம, 512 ஆவது படையணி யின் தளபதி அஜித் பள்ளவெல, பிரதிப்பொலிஸ்மா அதிபர் நீல் தலுவத்த, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.சி. ஏ. பண்டார, யாழ் பொலி ஸ் தலைமையக பொறுப்பதிகாரி சமன் சிகேரா, பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் நதீகா மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை குறிப்பிட்டுள் ளார்.

நான் தமிழ் பேசும் நபர், வடமா காணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதால் மாத்திர மல்லாமல் அடிப்படை உரிமை களையும் மொழி உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கான வினைத்திறனான நடவடிக்கை களை மதிப்பளித்து உறுதிப்படுத்த கோருவதற்கான உரித்துடைய இலங்கைப் பிரஜை என்ற அடிப் படையில் இந்த மனுவை தாக்கல் செய்வதாக இருதயநாதன் வீனஸ் ரெஜி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்குக் கிழக் கிலும் ஏனைய பகுதிகளிலும் சாதாரண பிரஜைகளை காயப்படுத் திய, கொலை செய்த, பொதுமக் களுக்கிடையே அச்சத்தை ஏற்ப டுத்திய பொதுவாக கிறீஸ் பூதங்கள் என அறிப்பட்ட இனந்தெரியாத நபர்களின் அச்சுறுத்தலை எதிர் கொண்ட பல சம்பவங்கள் இடம் பெற்றமை பரந்தளவு கரிசனைகள் உள்ளதாக அவர் கூறியுள்ளார். (பா)

## சீனப் படை...

அவரைச் சந்தித்துள்ளனர்.

இலங்கை படைத்தரப்புடன் போர் ஒத்திகைகள், பயிற்சிகள் மற் றும் படைத்தரப்பு உதவிகளை ஊக் குவிக்கும் நோக்குடனேயே இக் குழுவினர் கொழும்புக்கு விஜயம் செய்துள்ளதாக தெரிவிக்கப் படு கின்றது.

இந்நிலையிலேயே இராணு வத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவை இக்குழுவினர் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பில் இவ்விரு நாடு களின் படைத்தரப்புக்கும் இடையி லான இருதரப்பு உறவுகளை வலுப் படுத்தல் மற்றும் இலங்கை படைத் தரப்புக்கான வாய்ப்புகளை அதிகரித் தல் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், சீனாவின் படைத் தரப்பு பயிற்சிக் கல்லூரிகளில் இலங்கை படைத்தரப்பின் இளம் அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதை அதிகரிக்குமாறு சீனாவால் விடு க்கப்பட்ட வேண்டுகோள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

சீனாவின் படைத்தரப்பு பயிற் சிக் கல்லூரிகளில் தற்போது இலங் கை படைத்தரப்பின் இரு மேஜர் ஜெனரல்கள் உட்பட 32 படையதி காரிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, விமான மற்றும் கடற்படைத் தளபதிகளை இக்குழுவினர் சந்தித்து பேச்சுவார் த்தை நடத்தவுள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களில் ஜென ரல் மா ஸியாரியன் இலங்கைக்கு இரண்டாவது தடவையாக விஜயம் செய்துள்ளார். இலங்கையில் நான்கு நாட்கள் தங்கியிருக்கவுள்ள இக் குழுவில் றியர்அட்மிரல் ஹுன் யூபி கேணல் ஹு கொங்பி, கேணல் சொங் யர்சூ, கேணல் சூவா மெங், கேணல் லியோ பின், கப்டன் பின் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சீனக் கடற்படையின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவுடன் சிறிது காலத்திற்கு முன்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது வரு டம் தோறும் இடம்பெறும் ஒப்பரே சன் நீர்க்காகம் போன்ற போர்ப் பயிற்சிகளுக்கு சீனக் கடற்படை யின் பிரதிநிதிகளை அனுப்பு வத ற்கு இணக்கம் காணப்பட்டிருந் தமை தெரிந்ததே. (பா-11)

## புதைக்கப்...

சரிசெய்வதற்காக நேற்று முன் தின இரவு 8.00 மணியளவில் அப் பகுதியில் நிலத்தை ஆழப்படுத்திய போது பொலித்தீன் பையால் கட்டப் பட்ட நிலையில் புதைத்து வைக்கப் பட்டிருந்த ஆயுதங்கள் நிலத்திற் குள் தென்பட்டுள்ளது.

இது தொடர்பில் வீட்டின் உரிமை யாளரால் மானிப்பாய் பொலிஸா ருக்கு தகவல் வழங்கப்பட்டது. இத் தகவலையடுத்து அப்பகுதிக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார், அப்பகுதியில் நேற்று முன்தினமிரவு காவல் கடமையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்றுக்காலை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து குறித்த ஆயுதங்களை மீட்டனர்.

கடந்த 1995 ஆம் ஆண்டு யுத் தம் காரணமாக தமது வீட்டை விட்டு வெளியேறி சாவகச்சேரிப் பகுதி யில் குடியேறியதாகவும் 6 மாதங் களின் பின்பே தாம் மீளவும் வீட்டிற்கு வந்ததாகவும் அந்தக் காலப் பகுதி யில் இந்த ஆயுதங்கள் புதைக்கப் பட்டிருக்கலாம் என வீட்டின் உரிமையாளர் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

ஒரே வகையைச் சேர்ந்த 10 ஆயுதங்களும் அவற்றுக்கு பயன் படுத்தும் ரவைகளும் வயர்த் துண் டுகளும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (பா-6)

## மேர்வினின்...

அஜித் ரோஹண தெரிவித்தார்.

அமல் ரொட்ரிகோ என்பவரே கடத்தப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். புறக்கோட்டைசந் திக்கு அருகிலுள்ள உணவகம் ஒன் றில் வைத்தே அவர் கடத்தப்பட்டார்.

இது தொடர்பாக மாலை 6 மணி யளவில் மிரிஹான பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய் யப்பட்டது.

எனினும் நேற்றிரவு கடத்தப் பட்ட நபர் கண்டுபிடிக்கப்பட்டு விட் டதாகவும் முறைப்பாட்டை வாபஸ் பெறுவதாகவும் ஒருவர் தொலை பேசி மூலம் அறிவித்தார் எனவும் ஆனால் அவர் முறைப்பாட்டை வாபஸ் பெறுவதற்கு பொலிஸ் நிலையத்திற்கு வரவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (பா-11)

# அரசிடம் இருந்து இன்று உரிய பதில் கிடைக்காவிட்டால் தொழிற்சங்க போராட்டம்

பஸ் கட்டண உயர்வு குறித்து இன்று அரசிடம் இருந்து உரிய பதில் கிடைக்கவில்லை என்றால், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடு படப்போவதாக இலங்கை தனியார் பஸ் ஊழியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பஸ் கட்டண உயர்வு குறித்து தீர் மானம் எடுக்க அரசாங்கத்திற்கு தாம் வழங்கியிருந்த ஒரு மாதகால அவ காசம் நிறைவடைவதாக அந்த சங் கத்தின் தலைவர் கெமுனு விஜே ரட்ண தெரிவித்துள்ளார்.

எனவே இன்று கூடவுள்ள தமது சங்கத்தின் உயர்மட்டக்குழு எதிர் கால நடவடிக்கைகள் குறித்து தீர் மானம் எடுக்கும் என அவர் குறிப் பிட்டார்.

இந்த நிலையில் பஸ் கட்டண உயர்வு குறித்து தனியார் போக்கு வரத்து அமைச்சர் சீ.பீ.ரட்நாயக்க தெளிவான பதில் ஒன்றை அளித் துள்ள போதும் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது நியாயமானதல்ல என அகில இலங் கை தனியார் பஸ் உரிமையாளர் நிறுவன சம்மேளனத்தின் தலைவர் ஸ்டேன்லி பெனாண்டோ தெரிவித் துள்ளார். (பா-11)

# குருநகரில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

யாழ்.குருநகர் சின்னக்கடை சந்தைப் பகுதியிலுள்ள கடையொ ன்றிலிருந்து குடும்பஸ்தர் ஒரு வரின் சடலம் நேற்றுக்காலை பொலி ஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கெக்கிரவா கனவற்பொல பகுதி யைச் சேந்த அப்துர் நாசர் (வயது 30) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்ட லொன்றில் இவர் பணியாற்றி வந்த தாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு வந்து சடலத் தை பார்வையிட்ட யாழ். நீதவான் அ.ஆனந்தராஜா பிரேத பரிசோத னைக்காக சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார். (பா-4;11)

## அரசின்...

இதேவேளை மரக்கறி மற்றும் பழ வகைகளை போக்குவரத்துச் செய்வது குறித்த சட்டத்திற்கு தம்பு ள்ள உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர் ந்த வர்த்தகர்கள் அதிருப்தி வெளி யிட்டுள்ளதுடன் எதிர்ப்பு நடவடிக் கைகளிலும் ஈடுபட்டனர்.

மேலும், கொழும்பு புறக்கோட்டை மெனிங் சந்தைக்கு முன்னால் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட மொன்று நடத்தப்பட்டது. மெனிங் சந்தை வர்த்தகர்களால் நடத்தப் பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் போது அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிளாஸ்ரிக் கூடைகள் தீக்கிரையா க்க ப்பட்டன.

## நெல்லியடி...

அல்வாய் தெற்கைச் சேர்ந்த அம்பி கைபாலன் செந்தூரன் (வயது 23) என்ற யாழ்.பல்கலைக்கழக தொழில் நுட்ப மாணவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத் திய சாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவத்தில் உயிரிழந்த இருவரின் சடலமும் பிரேத பரிசோதனை க்காக பருத்தித்துறை ஆதார வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (பா-3,10,24)

## 5 ஆயிரம்...

படுகொலைகள், சட்டத்துக்கு புற பான கைது நடவடிக்கைகள் மற் றும் சித்திரவதை ஆகியன மனித குலத்திற்கு எதிரான குற்றச்செயல் கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், சிரியா விவகாரம் தொடர்பாக சர்வதேச சமூகம் காத் திரமான நடவடிக்கைகளை மேற் கொள்ளாதுவிட்டால், அது அந் நாட்டு அரசாங்கத்திற்கு சாதக மாகவே அமையும் என நவநீதம் பிள்ளை எச்சரித்துள்ளார். அதே வேளை, ஐக்கிய நாடுகள் சபைக் கான சிரிய வதிவிடப் பிரதிநிதி பசார் ஜபார்ரி மனிதவுரிமைகள் ஆணை யாளர் நவநீதம்பிள்ளையின் உரைக்கு கண்டனம் தெரிவித்துள் ளார்.

சிரிய ஜனாதிபதி தலைமையி லான ஆட்சிக்கு எதிரான கிளர் சியாளர்களால் தெரிவிக்கப்படும் போலியான தரவுகளை அடிப்படை யாகக் கொண்டு நவநீதம்பிள்ளை உரையாற்றி இருப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சிரியா மீது ஐரோப்பிய ஒன்றி யம் சில தடைகளை விதித்துள்ளது டன், அரேபிய லீக்கும் உறுப்பு நாடு களின் பட்டியலில் இருந்து சிரியா வை இடைநிறுத்தியுள்ளது. ஆயி னும் சிரியா விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் மட்டுமே தெரிவித்துள்ளது. (பா)


**யாழ்ப்பாணத் தனியார் கல்வி நிலைய வரலாற்றில் முதன் முறாக**

**தரம் 6 (ஆங்கில மொழி மூலம்)**

மாணவர்களிற்கு அகலத்திரையில் புறஜெக்ரர் மூலம் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்கள் ஆரம்பமாகின்றன.

- கல்வியாளர்கள், அதிகாரிகள் இந்நவீன கற்பித்தல் முறையை அதிகம் வரவேற்கின்றனர்.
- ஒரு பிரிவில் 25 பேர் மட்டுமே.
- ஏற்கனவே இரண்டு பிரிவுகள் எம்மிடம் தரம் 5 இல் கற்கின்ற மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.
- தொலைபேசி மூலம் பதிவுகள் ஏற்கப்படமாட்டாது.
- விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித்திகதி 16.12.2011 வெள்ளி பி.ப. 5.30 மணி

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்**

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 221 9016, 021 491 4527
E-mail: Thisaikaddi@sltnet.lk
இணையத்தள முகவரி www.thisaikaddi.lk



(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)

(C-5188)



**சமையலுக்கு ஆள் தேவை**

நிறுவனமொன்றில் கடமையாற்றுபவர்களுக்கு சமைப்பதற்கு ஆள் தேவை. தங்கி நிற்பதற்கான வசதிகள் செய்யப்படும்.

தொடர்பு: 0215671532



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road,
Jaffna.
Phone: 0212228093
E-mail: alliancejaffna@yahoo.com

**நூல் வெளியீடு**

1958-ம் ஆண்டிற்கான சமாதானத்துக்கான நோபல் (Nobel) பரிசு பெற்ற DOMINIQUE PIRE ஐ பற்றிய ஃபிரெஞ், ஆங்கிலம், தமிழ், சிங்கள மொழிகளில் அமைந்த:

**« சகோதரத்துவ உரையாடல் »**

என்ற நூல் வெளியீடு 14.12.2011 இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு Alliance Française de Jaffna இல் நடைபெறவுள்ளது.

**பிரதம விருந்தினர்:** மேன்மை தங்கிய திருமதி CHRISTINE ROBICHON (இலங்கைக்கான ஃப்றெஞ்சு தூதுவர்)

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

(6968)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.